ஆபரண மாளிகை

நகைசேமிப்புத் திட்டத்தில் இணைந்து அதிஷ்டசாலிகள் ஆகுங்கள். அதிஷ்டசாலி தொடர்ந்து பணம் கட்டத் தேவையில்லை.

நியூ ரூபி

7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05





NORD OPTICAL

லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய கண்ணாடி, லென்ஸ், என்பன இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
Horraires d'ouverture 2 4 5 B D E
Lundi au Samedi 10h à 19h30 TEL: 01.75.42.92.30





ஐரோப்பிய பதிப்பு

# ஈழமுரசு®

முரசு 03 | 14 – 27 நவம்பர் 2017 | முழக்கம் 060




பிரான்ஸ் வாழ் வர்த்தகர்களே

உங்கள் வர்த்தக விளம்பரங்களை எமது தளத்தில் விளம்பரம் செய்து அதிக பயன் பெறுங்கள்

பரிஸ்தமிழ்.கொம்
www.ParisTamil.Com

பரிஸ்தமிழ்.கொம்மில் விளம்பரம் செய்ய தொடர்பு:
செல்பேசி: 06 64 96 80 79
தொலைபேசி: 09 70 40 50 71
www.paristamil.com


## தமிழீழ விடுதலையை குறியீடு செய்து நிற்கும் மாவீரர் துயிலும் இல்லங்கள்

## சிங்களத்தின் சக்கர வியூகத்திற்குள் தமிழ் அரசியல் கைதிகள்

## சிறீலங்காவில் மடிந்த தமிழ் மதப் புனிதர்களுக்கு பிரான்ஸ் சார்சல் பகுதியில் நினைவுத்தூபி?

## துரோகத்தினால் கைமாறும் மட்டக்களப்பு மாவட்டம்

## காலம் எழுதிகளின் நினைவுக்கு என்ன கைமாறு செய்வோம்..?

## புதிய மொந்தையில் பழைய சிங்களக் கள்!

## இனவழிப்பின் நினைவாலயமாகிய சுலைமாணி பல்கலைக்கழகம்


BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20

Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

Boulangerie - Pâtisserie
208 Rue du Faubourg Saint Denis - 75010 Paris
Tél: 01 42 05 00 00 / e-mail : hotbreads@hotmail.fr
Hot Breads
திருமணம், பிறந்தநாள் மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும் தேவையான கேக்குகள், சிற்றுண்டி வகைகள், பாண், பிஸ்கட்டுகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்
Eggless கேக்குகள் எமது சிறப்புத் தயாரிப்புக்கள்

எங்கேயும்... எப்போதும்...
Kingstravels
A Better way to fly!
நியாயமான கட்டணம்....
நம்பிக்கையான பயணத்திற்கான உத்தரவாதம்...
30, rue Philippe de Girard - 75010 Paris
Tél: 01 42 09 19 09 - 01 40 38 18 27
M°: La Chapelle / Gare du Nord email: kingstravels@orange.fr

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான் சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்
64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

ஒலிம்பிக் அச்சகம்
லாச்சப்பலில்...!
அழைப்பிதழ்கள் – விளம்பர பிரசுரங்கள்
அனைத்தும் அழகாக – மலிவாக – விரைவாக
அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள
அச்சுப்பதிப்பு வேலையில் நீண்டகாலம் அனுபவம் பெற்றவர்கள்
31, rue Philippe de Girard
75010 Paris
Contact : 06 51 10 44 78

விரைவில்...
TKTV.TV
TAMILKATHIR.COM
இணையத் தொலைக்காட்சி!
தொடர்புகளுக்கு
tktv.info@gmail.com

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04


தமிழீழ தேசிய
மாவீரர் நாள்
பிரான்சு
Journée des Héros
27.11.2017
திங்கட்கிழமை
நேரம் 12 :30
நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கின்றோம் அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தைப் பாய்ச்சி வளர்க்கின்றோம். இந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.
-தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள்-
இடம்: EUROSITES LES DOCKS DE PARIS
50 Avenue du Président Wilson,
93210 La Plaine Saint Denis
Aubervilliers Front Populaire M 12
BUS 153 302 Pont Hainguerlot
தொடர்புகளுக்கு:
தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - பிரான்சு
0143150421

ஈழமுரசு®
mediacentre ஊடகமையம்
முரசு 03 14 – 27 நவம்பர் 2017 முழக்கம் 060

"எமது மாவீரர்கள் மகத்தான இலட்சியவாதிகள். தேசிய விடுதலை என்கின்ற உயரிய இலட்சியத்திற்காக வாழ்ந்து அந்த இலட்சியத்திற்காகத் தமது வாழ்வைத் தியாகம் செய்தவர்கள். இதனால்தான் இவர்கள் சாதாரண மனிதர்களிலிருந்து வேறுபட்டுநிற்கிறார்கள், உயர்ந்துநிற்கிறார்கள். எமது தேசத்தின் வரலாற்றில் சங்கமமாகி நிற்கிறார்கள்."

– தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்



# உலகில் இதற்கு முன்னர் கேள்விப்பட்டிராத மிருகத்தனமான சித்திரவதைகள் தமிழர்கள் மீது சிறீலங்கா பிரயோகிப்பு

## போர் முடிவடைந்து 8 ஆண்டுகளின் பின்பும் தொடரும் கொடுமைகள்

### வெளிச்சத்திற்கு கொண்டுவந்தது சர்வதேச ஊடகம்



© Associated Press Photo

(14.11.2017, செவ்வாய்க்கிழமை)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 28வது சர்வதேச மனித உரிமைகள் மீளாய்வு கூட்டத்தொடர் கடந்த 6ம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ளது. இக்கூட்டத்தில், இலங்கை தொடர்பாக நாளை 15ம் திகதி புதன்கிழமையும், 17ம் திகதி வெள்ளிக்கிழமை மீளாய்வு அறிக்கைகள் வெளியிடப்படவுள்ளன.

15ம் திகதி நடைபெறவுள்ள இலங்கை குறித்த மீளாய்வின் போது, சிறீலங்கா அரசாங்கத்தினால் அளிக்கப்பட்ட தேசிய அறிக்கை, சுதந்திரமான மனித உரிமை நிபுணர்கள், குழுக்கள், சிறப்பு அறிக்கையாளர்கள், மனித உரிமை அமைப்புகள், ஏனைய ஐ.நா அமைப்புகளின் தகவல்களை உள்ளடக்கிய அறிக்கைகள், தேசிய மனித உரிமைகள் நிறுவகங்கள் பிராந்திய அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புர்களை உள்ளடக்கிய ஏனைய பங்காளிகளின் அறிக்கைகள் என்பனவற்றின் அடிப்படையில் இந்த மீளாய்வு இடம்பெறும்.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து பல துறைகளை சார்ந்த சிறப்பு நிபுணர்கள் கடந்த காலங்களில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டு சேகரித்த அறிக்கைகள் அனைத்தும் இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மூன்றாவது தடவையாக, இடம்பெறவுள்ள இந்த மீளாய்வு நேரலையாக இணையத்தில் ஒளிபரப்பப்படும். இந்த மீளாய்வுக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு சிறிலங்காவின் தேசிய கொள்கைகள், பொரளாதார விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் ஹர்' டி சில்வா தலைமையிலான குழு ஜெனீவா செல்லவுள்ளது.

இந்நிலையில், சிறீலங்காவின் இனப்படுகொலை இராணுவத்தினரால் தமிழர்கள் தற்போதும் கொடூரச் சித்தரவதைகளுக்கு உள்ளாகி வருவதை சர்வதேச ஊடகம் ஒன்று வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளது. சிறீலங்கா இராணுவத்தினரால் 50ற்கும் மேற்பட்ட இளைஞர்கள் பாலியல் வன்முறைக்கும், சித்தரவதைகளுக்கும் உள்ளாக்கப்பட்டதாக ஏபி (AP - Associated Press) செய்தி நிறுவனம் ஆதாரங்களுடன் தனது புலனாய்வு காணொளி அறிக்கையை வெளியிட்டுள்ளது.

ஒரு இளைஞர் தனக்கு நேர்ந்த கொடுமையை விவரிக்கும் காட்சியுடன் அசோசியேட் பிரஸ் செய்தி காணொளி தொடங்குகிறது. அதில் இளைஞர்கள் படையினரால் பாலியல் சித்தரவதைக்கு உள்ளானதை அவர் விளக்குகிறார். கொடூரமான முறையில் இளைஞர்கள் எவ்வாறு நடத்தப்பட்டனர் என்பதையும் தெளிவுபடுத்துகிறார். இலங்கையில் இப்போது இருக்கும் அரசின் கீழ் 50ற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கடத்தப்பட்டு அதிகாரிகளால் துன்புறுத்தப்பட்டார்கள் என்பதை செய்தி விளக்குகிறது.

அதில் இலங்கையில் போர் முடிவுக்கு வந்து எட்டு ஆண்டுகளுக்குப் பின்னரும், தமிழர்கள் தாக்கி சித்திரவதை செய்யப்படுவதும், பாலியல் கொடுமைப்படுத்தப்படுவதும் தொடர்வதாக தெரிவித்துள்ளது. தமது அடையாளங்களை வெளிப்படுத்தாமல் பாதுகாப்பதாக உறுதியளிக்கப்பட்ட பின்னர்தான் இவர்கள் தமது கதைகளை கூற இணங்கியதாகத் தெரிவித்துள்ள ஏபி, தாயகத்தில் உள்ள தமது உறவினர்கள் பழிவாங்கப்படலாம் என்று அவர்கள் அஞ்சுகின்றனர் என்றும் கூறியுள்ளது.

ஐரோப்பாவில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள 50ற்கும் அதிகமான இலங்கைத் தமிழ் ஆண்கள் தாம் தற்போதைய அரசின்

தொடர்ச்சி 04ம் பக்கம்

Neuilly sur marne, Meaux, Torcy, Lagny
வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள்
மற்றும் கடலுணவு வகைகள்
Ria MoneyGram WESTERN UNION MONEY TRANSFER
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

தரமான கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
Ocean Indien
30 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

பாலன்ஸ் சலூான்
தமிழர்களால் நடத்தப்படும் ஆண்கள் அழகு நிலையம்

29 rue Philippe de Girard, 75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80

வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்
Crédits - Solutions
திரு.சிவா
2-4 rue de l'Orillon - 75011 Paris
0973255923 - 0665660305
email: creditssolutions@gmail.com

மக்கள் கடை
NEW CASTEL

உங்கள் தேவைகளே
எங்கள் சேவை
61, rue Louis Blanc,75010 Paris.
Tel: 01 42 05 13 67 Fax: 01 42 05 99 02

ஈழமுரசு®
"உண்மையின் முன்னால்
நடுநிலைமை என்பது இல்லை"
"MEDIACENTRE"
JOURNAL TAMOUL
bimensuel **Gratuit**

MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France
Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** S.Pulenthiran
தலைவர்: சு.புலேந்திரன்
**Redacteur:** K.Jeisanthar
பொறுப்பாசிரியர்: கி.ஜெய்சந்தர்

ஆசிரியர் பீடம்
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
சுந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

விளம்பரம் / விநியோகம்
சுஜீ (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
சுஜீ (பிரான்ஸ்)
சுஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

பிரித்தானியா
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

சந்தா விபரம்
வருட சந்தா
பிரான்ஸ் 75€
ஐரோப்பா 85€
ஏனைய நாடுகள் 99€

குறிப்பு:
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

லாச்சப்பலில்
ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு
பாலன்:
29, rue Philippe de Girard,
75010 Paris
Port: 06 63 01 75 80

## சிறீலங்காவில் மடிந்த தமிழ் மதப் புனிதர்களுக்கு

# பிரான்ஸ் சார்சல் பகுதியில் நினைவுத்தூபி?


பிரான்ஸ் பரிசின் புறநகரான சார்சல் பகுதியில் அம்மாநகர சபையின் அனுமதியுடன் மாவீரர்களுக்கான நினைவுத்தூபி ஒன்று எழுப்பப்பட்டிருப்பதாகவும், இனிமேல் அங்குதான் மாவீரர் நாள் உட்பட மாவீரர்களுக்கான வணக்க நிகழ்வுகள் அனைத்தும் இடம்பெறும் என்றும் அண்மைக் காலங்களாக சில தரப்பினரால் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




புலம்பெயர் தேசம் ஒன்றில் மாவீரர்களுக்கான நினைவுத்தூபி அமைக்கப்படுவது வரவேற்கத்தக்க ஒன்று: அதனை யார், எங்கு நிறுவினாலும் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். ஆனால் சார்சல் பகுதியில் அமைந்துள்ளதாக பரப்புரை செய்யப்படும் நினைவுத்தூபிக்கு எமது ஆசிரியர் பீடத்தில் இருந்து சென்றவர்களுக்கு அங்கு மிகப் பெரும் அதிர்ச்சிதான் காத்திருந்தது. மாவீரர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி அங்கு இருப்பதாக அறிவிக்கப்பட்ட நிலையில், அதில் பொறிக்கப்பட்டிருந்த வாசகங்கள் உண்மையில் அது மாவீரர்களின் நினைவாக அமைக்கப்பட்டதா? அல்லது சிறீலங்காவில் மடிந்த தமிழ் மதப் புனிதர்களுக்காக எழுப்பப்பட்ட மதத் தூபியா? என்ற கேள்வியையே எழுப்பியிருந்தன.

அதனை விட மேலும் பல 'வரலாற்று மற்றும் தத்துவார்த்த ரீதியிலான தவறுகளைக் கொண்ட வாசகங்களும்' அத்தூபியில் காணப்படுகின்றன.

மாவீரர் நாள் என்பது மேற்குலக நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடைகளை அடுத்து, சட்டத் தேவை





கருதி தற்காலிகமாகத் தமிழீழ தேசிய நினைவெழுச்சி நாள் என்ற பெயரில் சிறிது காலத்திற்கு நடாத்தப்பட்டு வந்தாலும், மாவீரர் நாள் என்ற பெயரில் நினைவுகூரல்

தொடர்ச்சி 17ம் பக்கம்

# உலகில் இதற்கு...

காலத்தில் கடத்தப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டது தொடர்பான விவரங்களை அசோசியேட்டட் பிரசிடம் வெளிப்படுத்தியுள்ளனர். அவர்கள் ஒவ்வொருவராக தமது கதைகளை கூற இணங்கினர். இளைஞர்களின் மார்புகள், முதுகு, கை மற்றும் கால்களில் சிகரெட்களை கொண்டும், பழுத்த இரும்பு கம்பிகளை கொண்டும் சூடு வைக்கப்பட்டுள்ளது. இளைஞர்கள் தங்கள் உடல் முழுவதும் இராணுவத்தால் ஏற்படுத்தப்பட்ட காயங்களை காட்டி உள்ளனர். இந்தக் காயங்களைக்கொண்டு அசோசியேட்டட் பிரஸ், 32 மருத்துவ மற்றும் உளவியல் மதிப்பீடுகளை ஆய்வு செய்ததுடன், 20 பேரை நேர்காணலும் செய்தது.

உள்நாட்டுப் போரில் தோல்வியடைந்த தரப்பில் ஒரு போராளிக் குழுவை மீண்டும் உருவாக்க முயற்சிப்பதாக தம்மீது குற்றம் சாட்டப்பட்டதாக அவர்கள் கூறினர். 8 ஆண்டுகளுக்கு முன் போர் முடிவுக்கு வந்த போதிலும், 2016 தொடக்கத்தில் இருந்து இந்த ஆண்டின் (2017) யூலை வரை சித்திரவதைகளும் மீறல்களும் இடம்பெற்றுள்ளன. கடந்த 40 ஆண்டுகளாக உலகில் மோசமான நாடுகளில் சித்திரவதைகளில் இருந்து தப்பி வந்தவர்களை நேர்காணல் செய்த பியர்ஸ் பிகோ என்ற தென்னாபிரிக்க மனித உரிமைகள் விசாரணையாளர், தாம் இதற்கு முன்னர் கேள்விப்பட்டிராத மிருகத்தனமான சித்திரவதைகள் இடம்பெற்றிருப்பதாக கூறுகிறார். சிறீலங்கா அதிகாரிகளின் பாலியல் மீறல்கள் நிலைத்திருப்பது மிகவும் அதிர்ச்சியாகவும், இதற்கு முன்னர் பார்த்திராததாகவும் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.



பெரும்பாலான ஆண்கள் கண்கள் கட்டப்பட்ட நிலையில், தடுப்பு முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டதாக கூறினர். தம்மை சிறைபிடித்தவர்கள் பெரும்பாலானோர் குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளப்படுத்தியதாக அவர்கள் தெரிவித்தனர். சிலர், தம்மைக் கைது செய்து விசாரித்தவர்கள் படையினரும் என்று, அவர்கள் அணிந்திருந்த சீருடைகள் மற்றும் முத்திரைப் பட்டிகளின் அடிப்படையில் கூறுகின்றனர். ஒருவர், உடைகளுடன் இராணுவ சீருடைகளும் தொங்கியதாகவும், பலர் இராணுவ சப்பாத்துகளை அணிந்திருந்தனர் என்றும் கூறியுள்ளார்.

சித்திரவதை செய்யப்பட்ட 52 ஆண்கள் பற்றிய அசோசியேட்டட் பிரசின் கணக்கு குறித்து ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல்உசேன், கரிசனை கொண்டுள்ளார். ஐ.நா விசாரணையை முன்னெடுக்கும் வரை இதனை உறுதிப்படுத்த முடியவில்லை என்றாலும், தெளிவான இந்த அறிக்கைகள் கொடூரமானவையாக இருப்பதுடன், 2016– 2017 காலப்பகுதியில் இவை நடந்திருந்தால் எமது பக்கம் மிகவும் நெருக்கமாக ஆய்வு செய்யப்பட வேண்டியதாகவும் இருக்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, அப்பாவித் தமிழர்கள் சித்திரவதை செய்யப்படுவதாக எழுந்துள்ள புகாரை கவனத்தில் எடுத்துக் கொள்வோம் என்று ஐ.நா. பொதுச்செயலர் அன்டோனியா குட்டரெஸின் செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

ஆனால், கடந்தவாரம் கொழும்பில் செவ்வி ஒன்றை அளித்த சிறீலங்கா இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, இந்தச் சித்திரவதைக் குற்றச்சாட்டுகளை நிராகரித்தார். இதில், இராணுவமும் தொடர்புபடவில்லை, காவல்துறையினரும் தொடர்புபடவில்லை என்று தன்னால் உறுதியாக கூற முடியும் என்று கூறியுள்ளார்.

ஆனால், அதேவேளை, இலங்கையில் இறுதிக்கட்ட போருக்குப்பின் ஏராளமானோர் அரசியல் கைதிகளாக சிறைபிடிக்கப்பட்டனர். இது பற்றி விசாரித்த மனித உரிமை அமைப்புகளில் ஒன்றான, சர்வதேச உண்மை மற்றும் நீதி அமைப்பு ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில், விடுதலைப்புலி இயக்கத்தை சேர்ந்த 60க்கும் மேற்பட்டோரை தற்போதைய அரசு சிறையில் அடைத்து சித்ரவதை செய்து வருவதாக குறிப்பிட்டிருந்தது. இந்த அறிக்கைக்கு சிறீலங்கா வெளியுறவு அமைச்சகம் மறுப்பு தெரிவித்து வெளியிட்ட அறிக்கையில், தேசிய மனித உரிமை ஆணையம் பலப்படுத்தப்பட்டு, சித்ரவதை தொடர்பான புகார்கள் வந்தால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே, சர்வதேச மனித உரிமை அமைப்புக்கு கொடுக்கப்பட்ட தகவல் தவறானது. மனித உரிமை அமைப்புகள் எப்போது வேண்டுமானாலும் இலங்கைக்கு வந்து, எந்தவித சட்ட விரோத சித்திரவதை சம்பவங்களும் நடைபெறவில்லை என்பதை உறுதி செய்து கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே, யாழ். தென்மராட்சி தெற்கில் இரவில் இலக்கத் தகடு இல்லாத வாகனங்கள் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் சாலையில் செல்வது குறித்து தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்கள் அச்சம் வெளியிட்டள்ளனர். தினமும் இரவு பத்து மணிக்குப் பின்னர் நாவற்குழியிலிருந்து கேரதீவு வரையான ஏ 32 சாலையில் பெருமளவு வாகனங்கள் பயணிக்கின்றன. அவற்றில் சில வாகனங்கள் அதி வேகத்தில் இலக்கத் தகடு இல்லாமல் செல்கின்றன எனக் கூறியுள்ளனர். முன்னைய ஆட்சிக் காலத்தில் இவ்வாறான வாகனங்களில் கடத்தப்பட்ட பலர் படுகொலை செய்து வீதிகளில் வீசப்பட்டதுடன், கடத்தப்பட்ட பலர் இன்று வரை காணாமல்போயுள்ளார்கள் என்பதும் காணாமல்போன அந்த உறவுகளைத் தேடி மக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

எனினும், இது குறித்து சிறீலங்கா காவல்துறைக்கு அறிவித்தபோது, ஓடித்திரியும் வாகனங்கள் திருட்டு, கொள்ளை முயற்சியில் ஈடுபடுபவர்கள் அல்லது வாள்வெட்டுக் குழு போன்ற அடாவடிகளில் ஈடுபடுபவர்களாக இருக்கலாம் என மக்களை திசைதிருப்பும் கருத்துக்களை கூறியதாகக் கூறப்படுகின்றது.

ஈழமுரசு®

# கல்லில் நார் உரிக்கின்றது சர்வதேசம் தமிழர்களுக்கு உரிமை கிடைக்குமா?

ஈழ விடுதலையைக் கனவாகச் சுமந்து விதையாகிப் போனவர்களின் வீரமிகு மாதமிது. தங்கள் இனம் நிம்மதியாக, சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக தமிழீழம் ஒன்றே இலட்சியமாக வரிந்துகொண்டு, தலைவன் காட்டிய வழியில் நடந்து ஈழத்தின் விடுதலையை உலகெங்கும் முரசறைந்தவர்கள் எங்கள் மாவீரர்கள். அவர்கள் அறைந்த முரசுதான் ஈழ விடுதலைப் போராட்டத்தில் உலக நாடுகள் உள்நுழைய வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது.

இப்போது ஆயுதம் தாங்கிய விடுதலைக்கான போராட்டம் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது. ஆனாலும் விடுதலைக்கான தமிழர்களின் உரிமைக் குரல் இன்றும் உலகெங்கும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. இந்தக் குரல்களையும் ஒடுக்குவதற்கு சிங்கள தேசம் இன்றும் தனது பயங்கரவாதக் கரங்களை நீட்டியபடியேதான் இருக்கின்றது. இதனையும் தாண்டித்தான் தமிழர்கள் தங்கள் விடுதலைக்கான பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

சிறீலங்காவின் புதிய ஆட்சியாளர்கள் நல்லிணக்கமானவர்கள் என்று பட்டயங்களை வழங்கிய சர்வதேசம், தமிழர்களுக்கான உரிமையைத் தந்துவிடுவார்கள் என்று நம்பவைக்க முயல்கின்றது. ஆனால், தமிழர் தேசம் பலமாக இருந்தபோதே தமிழ் மக்களுக்கான உரிமையைத் தரமறுத்த சிங்கள தேசம், இன்று பலமிழந்த நிலையில் தமிழர்களுக்கு நீதியான தீர்வைத் தந்துவிடப்போவதில்லை. அல்லது சுதந்திரமான வாழ்விற்கு அனுமதிக்கப்போவதில்லை. இன்னும், இன்னும் ஒடுக்கி தமிழர்களின் வாழ்வியலை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்து அழிக்கவே அது முயலும். அதனையேதான் அது இப்போது நல்லிணக்கம் என்ற பெயரில் அது செய்கின்றது. ஆனால், கல்லில் நார் உரிக்க முடியுமென்று இன்னும் நம்புகின்றது சர்வதேசம். அல்லது நம்புவதுபோல் தமிழர்களுக்கு பாவனை செய்கின்றதோ தெரியவில்லை.

சிங்கள ஆட்சியாளர்களும் தமிழ் மக்களின் நிலைமைகளைப் புரிந்துகொள்ளப்போவதில்லை. பௌத்த மதவாதிகளும் தமிழ் மக்களுக்கான உரிமையை வழங்க அனுமதிக்கப்போவதில்லை. ஆனால் பாமர சிங்கள மக்கள் தமிழ் மக்களின் உரிமைகளையும், நிலைமைகளையும் புரிந்துகொள்வார்கள். அவர்களுக்கு புரியவைப்பதற்காகத்தான், தமிழ் மக்களின் பிரச்சனைகளை சிங்கள மக்களுக்கு எடுத்துச் சென்று கூறுவதற்காகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் உருவாக்கினார்கள். 2009 வரை அது அதனையேதான் சிறீலங்கா நாடாளுமன்றம் ஊடாகச் செய்துகொண்டிருந்தது. ஆனால், 2009ற்குப் பின்னர் அது சிங்கள மக்களுக்கு என்ன பிரச்சனை என்பதை தமிழ் மக்களுக்கு எடுத்துவந்து கூறும் ஒரு 'சிங்களத் தேசியக் கூட்டமைப்பாக' மாற்றம் கண்டிருக்கின்றது.

30 வருட ஜனநாயக் போராட்டத்தினாலும்,30 வருட அர்ப்பணிப்பு நிறைந்த ஆயுதப் போராட்டத்தின் மூலமும் பெறமுடியாத தீர்வை அல்லது உரிமையை அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருந்து 30 நாட்களுக்குள் எட்டிப்பிடித்துவிட்டதாக சிறுபிள்ளைத் தனமாக கொக்கரிக்கின்றது கூட்டமைப்பு.


'இனப்பிரச்சினைக்கான தீர்வினைப் பெறும் தருணத்தை எட்டியுள்ளதாகவும் பிளவுபடாத நாட்டிற்குள் சமனான அதிகாரப்பகிர்வுகளை வலியுறுத்தியுள்ளோம். இதில் வெற்றியடையலாம். வெற்றியடைவதற்காகவே பயணித்துக் கொண்டிருக்கின்றோம்' என்று சிங்கள தேசத்தின் அரசியல் ஏமாற்றுத் தனத்தினையே புரிந்துகொள்ள முடியாத கற்றுக்குட்டியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், புதிய அரசியல் திட்டத்தில் உள்ள தமிழினத்தின் இருப்பிற்கே பெரும் பாதகத்தை ஏற்படுத்தக்கூடிய 'பௌத்தத்துக்கு முன்னுரிமை என்ற விடயம் தமிழர்களுக்கு பிரச்சினையில்லை' என்று மிகச் சுலபமாக நாடாளுமன்றத்தில் கூறுகின்றார்.?

தமிழர்களின் பிரச்சனையை சர்வதேசத்தின் மத்தியில் எடுத்துச்சென்று தங்கள் உரிமையைப் பெற்றுவிட வேண்டும் என்று தமிழர்கள் உலகெங்கும் கடுமையாக முயன்றுகொண்டிருக்கும் நிலையில் 'தேசிய பிரச்சினையானது உள்நாட்டில் தீர்க்கப்பட வேண்டும். அதனூடாக, நாட்டின் மீதான சர்வதேச அழுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென நாங்கள் விரும்புகின்றோம். இந்தப் பிரச்சினையை அவ்வாறு உள்நாட்டில் தீர்க்கப்படாவிட்டால், சிறீலங்கா மீதான சர்வதேச அழுத்தம் மேலும் மோசமடைவதைத் தவிர்க்க முடியாது' என்று இவர்கள் தமிழர்களின் பிரதிநிதிகளாக சிங்களவர்களின் பிரதிநிதிகளா என்று அச்சப்படும் அளவிற்கு சர்வதேசம் இந்தப் பிரச்சனைக்குள் முழுமையாக தலையைக் கொடுத்துவிடுமோ என்று கவலைப்படுகின்றார் சம்பந்தர்.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்திற்கு படையெடுக்கும் உலகப் பிரதிநிதிகள், தமிழர்களின் பிரதிநிதிகளாக சந்திப்பது இவர்களைத்தான். இவர்கள் அவர்களிடம் எவ்வாறான கருத்துக்களை எடுத்து வைப்பார்கள் என்பதற்கு கண்ணாடி தேவையில்லை.

எனவே, மைத்திரி போடும் சதையற்ற எலும்புத் துண்டை வேண்டுமானால் சம்பந்தன், சுமந்திரன் போன்றவர்கள் கௌவிக்கொள்ளலாம். ஆனால், 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களையும், 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களையும் இந்த விடுதலைக்கான போராட்டத்தில் அர்ப்பணித்த தமிழ் மக்கள் சிங்களத்தின் இந்த எலும்புத் துண்டுகளை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

மாடு இளைத்திருந்தாலும் கொம்புகள் இளைக்காது. தமிழர்களின் இலட்சியமான தமிழீழத்திற்காகப் போராடிய விடுதலைப் புலிகளை அழிக்க இந்த உலகத்திடம் வலிமையான ஆயுதங்கள் இருந்திருக்கலாம். ஆனால் தமிழர்களின் இலட்சியத்தை அழிக்கும் எந்த ஆயுதத்தையும் இந்த உலகத்தால் உருவாக்க முடியாது. தமிழர்கள் வாழும் காலம் முழுவதும் மாவீரர்களின் கனவைச் சுமந்தபடி அந்த இலட்சியம் கனன்றுகொண்டே இருக்கும்.




செய்தி 1:- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இப்போதுள்ள பங்காளிக் கட்சிகளில் யாராவது வெளியேற விரும்பினால் அவர்கள் வெளியேறலாம். முழுமையான சுதந்திரம் அவர்களுக்கு உள்ளது.

- எம்.ஏ.சுமந்திரன்

செய்தி 2:- சில்லறை விடயங்களுக்காக பிளவடைந்து விட முடியாது. சுரேசுடன் ஒன்றிணைந்து பயணிப்பதற்கு தயாராகவே உள்ளேன்.

- இரா.சம்பந்தன்





## மாவட்ட ரீதியாக மாவீரர் துயிலும் இல்லங்கள்

**அம்பாறை**
*கஞ்சிகுடிச்சாறு*
*மாவீரர் துயிலுமில்லம்.*

**மட்டக்களப்பு**
*தரவை மாவீரர் துயிலுமில்லம்.*
*தாண்டியடி*
*மாவீரர் துயிலுமில்லம்.*
*கல்லடி மாவீரர் துயிலுமில்லம்.*
*மாவடி மாவீரர் துயிலுமில்லம்.*

**திருகோணமலை**
*ஆழங்குளம்*
*மாவீரர் துயிலுமில்லம்.*
*தியாகவனம்*
*மாவீரர் துயிலுமில்லம்.*
*பெரியகுளம்*
*மாவீரர் துயிலுமில்லம்.*
*உப்பாறு*
*மாவீரர் துயிலுமில்லம்.*

**மணலாறு**
*ஜீவன்முகாம்*
*மாவீரர் துயிலுமில்லம்.*
*டடிமுகாம்*
*மாவீரர் துயிலுமில்லம்.*

**வவுனியா**
*ஈச்சங்குளம் மாவீரர்*
*துயிலுமில்லம்.*

**மட்டக்களப்பு**
*ஆட்காட்டிவெளி*
*மாவீரர் துயிலுமில்லம்.*
*பண்டிவிரிச்சான்*
*மாவீரர் துயிலுமில்லம்.*

**முல்லைத்தீவு**
*முள்ளியவளை*
*மாவீரர் துயிலுமில்லம்.*
*அலம்பில்*
*மாவீரர் துயிலுமில்லம்.*
*ஆலங்குளம்*
*மாவீரர் துயிலுமில்லம்.*
*வன்னிவளாங்குளம்*
*மாவீரர் துயிலுமில்லம்.*

**கிளிநொச்சி**
*கிளிநொச்சி*
*மாவீரர் துயிலுமில்லம்.*
*விசுவமடு*
*மாவீரர் துயிலுமில்லம்.*
*முழங்காவில்*
*மாவீரர் துயிலுமில்லம்.*

**யாழ்ப்பாணம்**
*சாட்டி (தீவகம்)*
*மாவீரர் துயிலுமில்லம்.*
*கோப்பாய்*
*மாவீரர் துயிலுமில்லம்.*
*(வடமராட்சி) எல்லங்குளம்*
*மாவீரர் துயிலுமில்லம்.*
*(வடமராட்சி) உடுத்துறை*
*மாவீரர் துயிலுமில்லம்.*
*கொடிகாமம்*
*மாவீரர் துயிலும் இல்லம்.*

## மட்டக்களப்பில் தமிழ்செல்வனின் 10ம் ஆண்டு நினைவு

தமிழீழ விடுதலை புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சுப.தமிழ்செல்வனின் 10ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, கடந்த 2ம் திகதி நடைபெற்றது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு தாமரைக்கேணி காரியாலயத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்வில் கட்சி மாவட்ட இணைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் மற்றும் ஆதரவாளர்கள் பொதுமக்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு, தமிழ்செல்வனின் உருவப்படத்திற்கு சுடர்ஏற்றி மலர்மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

## வடக்கு – கிழக்கில் கால் பதிக்க இந்திய, சீன நிறுவனங்கள் போட்டி

வடக்கு – கிழக்கில் 50 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு, சீனா மற்றும் இந்தியாவைச் சேர்ந்த நிறுவனங்கள் உள்ளிட்ட 34 நிறுவனங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக்கின்றன. சிறீலங்காவின் தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அமைச்சால் வடக்கு – கிழக்கில் 50 ஆயிரம் கல் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கான பணத்தை ஒப்பந்தங்களைப் பொறுப்பெடுக்கும் நிறுவனங்களே திரட்டிக்கொண்டு வரவேண்டும். நீண்டகாலக் கடன் அடிப்படையில் அரசு அந்தப் பணத்தை திருப்பிச் செலுத்தும். வீடுகளை அமைப்பதற்கான கேள்வி கோரல் அமைச்சினால் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. எதிர்வரும் 13ம் திகதி கேள்விகள் திறக்கப்படும். இதுவரையில் 34 நிறுவனங்கள் ஆவணங்களை அமைச்சிலிருந்து பெற்றுக்கொண்டுள்ளன. இந்தியா மற்றும் சீனாவைச் சேர்ந்த நிறுவனங்களும் இதில் உள்ளடங்கியுள்ளன.

முன்னர் இந்தியாவினால் வடக்கில் தமிழர்களுக்கு கட்டிக்கொடுத்த பல வீடுகள் இடிந்ததுடன், வெடிப்புக்களும் ஏற்பட்டு சேதமடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய இராணுவத்தின் படுகொலை மட்டக்களப்பில் அஞ்சலி

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடியில் இந்திய இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிசூட்டில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வு களுவாஞ்சிகுடி இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட 14 பேரின் திருவுருவப்படத்துக்கு ஈகச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. களுவாஞ்சிகுடியில் 1987ம் ஆண்டு வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த இந்திய இராவணுவச் சிப்பாய்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலைத் தொடர்ந்து, இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிசூட்டில் 14 பேர் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் போராளிகளுக்கு ஆயுள் தண்டனை

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தை இலக்குவைத்து, கிளைமோர் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டு 30 பேரை பலியெடுத்ததுடன், 42 பேருக்குப் படுகாயம் ஏற்படுத்திய குற்றச்சாட்டுக்களுடன் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினரொருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரணசிங்ஹ, உயிர்வாழும் வரை கடூழிய சிறைத்தண்டனை விதித்த்து தீர்ப்பளித்துள்ளார். பிலியந்தலையில், 2008ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ம் திகதி அல்லது அதனை அண்மித்த நாட்களில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பிலேயே, அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவருக்கு எதிராக 94 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. அதில், 93 குற்றச்சாட்டுகளுக்கு, தனித்தனியாக இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதேவேளை, பேருந்துக்குச் சேதம் ஏற்படுத்திய குற்றத்துக்காக, அவருக்கு 10 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஆனந்தசுபார் அல்லது லோரன்ஸ் டேவிட் ராஜ் என்றழைக்கப்படும் வசந்தன் என்பவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த தேவேந்திரன் சின்னையா என்ற மற்றுமொரு உறுப்பினர், வழக்கு விசாரணையின் போதே மரணமடைந்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முன்னாள் போராளி ஒருவருக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்து. தெகிவளைப் காவல் நிலையத்தின் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய சுனில் தாப்ரூவைக் கடந்த 2003ம் ஆண்டு சுட்டுக்கொலை செய்த குற்றச்சாட்டிலேயே முன்னாள் போராளிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்காலை வசிப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை கிருபாகரன் என்பவருக்கே ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலும் 5 வருடங்கள் சிறைத்தண்டனையும், 25 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

### படகு கவிழ்ந்ததில் மீனவர் உயிரிழப்பு

சுண்டிக்குளம் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்களின் படகு கவிழ்ந்ததில் இராசையா சந்திரமேகன் (வயது 40) என்பவர் உயிரிழந்துள்ளார். கரவலை மீன்பிடியில் ஈடுபடுவதற்காக ஒரு படகில் 6 மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். கடும் காற்று வீசியதால் கடல் கொந்தளித்து படகு நீரில் மூழ்கியது. இதன்போது தூக்கி வீசப்பட்ட 6 மீனவர்களில் ஒருவர் உயிரிழந்ததுடன் மிகுதி ஐவரும் நீந்திக் கரைசேர்ந்தனர்.

### யாழில் ஒருவர் அடித்துக் கொலை

யாழ். இளவாளைப் பகுதியில் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். 50 வயதுடைய குறித்த நபருக்கு, இளவாளைப் பகுதியைச் சேர்ந்த திருமணமான பெண் ஒருவருடன் தொடர்பு இருந்துள்ளதாக தெரிகிறது. அதனை அறிந்த அப்பெண்ணின் கணவரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளார். இதனையடுத்து, படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குறித்த நபர் கடந்த 30ம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் இளவாலையைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான கஜன் ரமேஸ் (50) எனக் கூறப்படுகின்றது. தாக்குதல் நடத்தியவர் இளவாலையிலுள்ள சிறீலங்காக் காவல் நிலையத்தில் சரணடைந்தார். கணவன், மனைவி உறவுக்குள் ஏற்பட்ட குழப்பத்தால் குடும்பம் பிரிந்து வாழ்ந்தது என்றும், பிரிந்து வாழும் மனைவியின் வீட்டுக்கு கஜன் ரமேஸ் செல்வதைக் கண்ட கணவன் அவரைத் தாக்கினார் என்றும் கூறப்படுகின்றது. சரணடைந்தவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

### உழவு இயந்திரத்தின் சில்லுக்குள் சிக்கி இளைஞன் பலி

உழவு இயந்திரம் தடம்புரண்டதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று திருகோணமலை, சேருநுவர உடப்புக்கேணி பகுதியில் கடந்த 10ம் திகதி இடம்பெற்றுள்ளது. விநாயகபுரத்தைச் சேர்ந்த கடுக்காமுனை கிராம சேவையாளரான



திருமதி காளிப்பிள்ளை சிறீஸ்கந்தராஜா என்பரின் மகன் பஜிர்வன் (வயது 19) எனும் இளைஞனே, இவ்வாறு உயிரிழந்தார். வயல் உழுதுவிட்டு, உழவு இயந்திரத்தைக் கழுவுவதற்காக தண்ணீர் எடுக்க இறக்கிய போது, உழவு இயந்திரம் புரண்டதாகவும் அதில் இருந்த சில்லுக்குள் சிக்குண்டமையால் குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.


### பெண்ணுக்கு ஏற்பட்ட இப்படியொரு சாவு!

உழவு இயந்திரத்தில் பொருத்திய காற்றாடியில் சிக்குண்டு வயோதிப பெண் ஒருவர் உயிரிழந்தார். யாழ். புத்தூர் பகுதியில் அறிவொறி வீதியினை சேர்ந்த இரத்தினம் தவமலர் வயது (58) என்ற பெண்மணியே இவ்வாறு உயிரிழந்தார். கடந்த சில நாட்களாக விடாது பெய்த மழையினால் வீட்டில் கட்டியிருந்த வெங்காய பிடிகள் மழையில் நனைந்திருந்தன. அவற்றினை உலர்த்துவதற்காக வீடடில் நின்றவர்கள் உழவு இயந்திரத்தினை இயக்கி அதனூடாக காற்றடியினை இணைத்து வெங்காயத்தினை உலரவைத்துள்ளனர். இதன் போது குறித்த பெண்மணி ஆடைகளை உலர்துவதற்காக காற்றாடிக்கு அருகில் ஈரமான ஆடைகளை எடுத்து சென்றுள்ளார். காற்றாடியில் இருந்த வந்த காற்று உயிரிழந்த பெண்மணியினை உள் இழுத்துள்ளதுடன், அணிந்திருந்த சாறியும் சக்கரத்தில் சிக்குண்டுள்ளது. காற்றாடியின் பிளேட்டுக்குள் சிக்குண்டதில் பாரிய வெட்டுக்காயங்களுக்கும் உள்ளாகியுள்ளார். இதனையடுத்து உடனடியாக அவரை அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்து சென்ற போது இடைநடுவில் உயிரிழந்துள்ளார்.

### யாழில் குடும்பஸ்தர் சடலமாக கண்டெடுப்பு

யாழ். கோப்பாய் கைதடி வீதிப் பகுதியில் உள்ள பாலத்தின் கீழ் இருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் கடந்த முதலாம் திகதி கண்டெடுக்கப்பட்டது. சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாக கொண்ட

தொடர்ச்சி 22ம் பக்கம்



சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
CITY EXPRESS
We Move the Businessclass
Tél: 0 651 651 729 - 06 95 95 63 73
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis

# காலம் எழுதிகளின் நினைவுக்கு என்ன கைமாறு செய்வோம்..?

**- வியாசன் -**

கார்த்திகை 27 - மாவீரர் நாள்
பிள்ளைகள் துயிலும் கல்லறைகளுக்கு
நெய்விளக்கேற்றும் திருநாள்.
உள்ளே உடல் வியர்த்துக் கிடப்பவரை
மனதால் வெளியே தூக்கி
மெய் கழுவி, வாசம் பூசி
முத்தம் பொழிந்து
மீண்டும் குழிவைப்பதான பாவனையில்
சுற்றம் சூழும் பெருநாள்.
தெய்வங்களுக்குப் படைப்பதில்லையே தவிர
வரம் கேட்டு வணங்கும் நாள்.
நீண்ட விதைவயலின் வரிசையில்
கூடி நிற்கும் சுற்றத்துக்கு
அவர்கள் குரல்கேட்கும் தினம்.
பத்துமாதம் சுமந்து
பகலிரவாய்க் கண்விழித்து
அமுத முலைகொடுத்து
தூக்கிச் சுமந்தவர் முன்னே
அவர்கள் விழிதிறக்கும் நாள்.
பெற்றவளின் முன்னே பெரிதாய் நெடிதுயர்ந்து
அம்மா என அழைப்பார்கள்.
அந்த ஒற்றைச்சொல் போதுமே
சுமந்தவள் மெழுகாய் உருக.
விதைத்த வயல்கள் பரந்து கிடக்கின்றன
தாயகத்தின் திசையெங்கும்.
துயிலுமில்ல வாசல் கடக்கும் ஒவ்வொருதடவையும்
தண்டனையற்ற குற்றவாளிகள் போலத்தான்
கடந்து போகின்றோம்.
"உங்களை நம்பியே உள்ளே கிடக்கின்றோம்
எங்கள் நெருப்பில் குளிர்காயாதீர்"
காற்றில் வருகிறது கல்லறைக்குரல்.
துயிலுமில்லம் நுழையும் போதில்
நீதிமன்றில் நிற்பது போலத் துடிக்கிறது மனம்.
விட்டபணி தொடராத குற்றவுணர்வில்
வேர் காய்ந்து விடுகிறது உள்ளே.
மாவீரர்கள்
அவர்களை எங்கிருந்து எழுதத்தொடங்குவது?
எழுதத் தொடங்கினாலும்
பேனா உருகிக் கரைந்து விடுகிறதே.
ஈழத்தமிழர் நிமிர்வுக்கு
அவர்கள்தானே வீரியம் தந்தனர்.
மிதித்தேறிப் போகலாமென்றிருந்த இனத்துக்கு
முகமும், முகவரியும் தந்தனர்.
பிள்ளைப் பூச்சிகளாக
எடுப்பார்கைப் பிள்ளைகளாக
அழைத்தவர் பின்னே ஓடிய இனத்துக்கு
நிமிர்வும், திமிர்வும் தந்தனர்.
காலம் எழுதிகளின் நினைவுக்கு
என்ன கைமாறு செய்தோம் நாம்?
ஒருநாள் கூடி பூ வைத்து
நெய்விட்டு விளக்கேற்றி
அந்தப் பாடலையும்பாடி
நெக்குருதல் மட்டும் போதுமானதா?
சின்னப் பருவத்தின் கனவைத் துறந்து
இளமைக் காலத்தின் சிறகை அரிந்து
தங்களை ஒறுத்துப்போன தேவைகளுக்கு
என்ன நிவேதனம் படைத்தோம் நாம்?
அவர்கள் கனவு மெய்ப்படாதவரை
எந்தக் கிரிகையாலும் அவர்கள் ஆறமாட்டார்கள்.
விடுதலை அவர்களின் மூச்சாயிருந்தது
போராட்டம் அவர்களின் மூச்சாயிருந்தது
வெறும் பேச்சிற் கழியவில்லை அவர் பொழுது.
உலகம் ஓடிவரும்
ஐ-நா-சபை தேடிவரும்
அகாசி வருவார்
ஜோஜ் புஸ் தருவாரென
நம்பியிருக்கவில்லை அவர்கள்.
களத்தில் நின்றனர்
களத்தில் உண்டனர்
களத்தில் உறங்கினர்
களத்தில் உயிரையும் விட்டனர்.
அவர்களுக்கு எந்த மயக்கமும் இருக்கவில்லை
முடிதரித்த தலையராய் உலவினர்
உயிர் கொடுத்த அழகராய் உறங்கினர்.
எந்தச் சுமையுமற்ற மனிதராய்
தலைவனை மட்டும் நம்பினர்.
தலைவன் இடியமாட்டான் எனும் நம்பிக்கையில்
உறுதியுடன் நின்றனர் இறுதிவரையும்.
கார்த்திகைப் பூக்களின் திருநாள் வருகிறது
பிள்ளைகளிடம் போகும் பொழுதில்
என்ன எடுத்துச்செல்வோம் இம்முறை?
பாடலுடன் அவர்கள் கண்திறக்கும்போது
கொடுக்க என்ன இருக்கிறது எம்மிடம்?
வெற்றி மட்டும்தான் வேண்டியதில்லை
பின்னடைவையும் அவர்கள் புரிந்து கொள்வார்கள்.
எங்கள் கைகளில் இருக்கிறது அனுராதபுரம்
கொடுக்க மகிழ்ச்சியுடன் எடுப்பார்கள்.
எனினும் எம்மில் நெருப்பெரியவேண்டும்
உண்மை மனிதராய் ஒளிர வேண்டும்
மயக்கமில்லாத மனமும்
வழிதவறாத நிலையும் வேண்டும்.
விடுதலையில் வழுவாத வீரியமும்
தன்னையே கொடுக்கும் சக்தியும் வேண்டும்.
தலைவனை நம்பிய பயணமும்
தமிழீழம் என்ற உறுதியும் வேண்டும்.
இவற்றைச் சுமந்தால் ஏற்பார்கள்
இல்லையேல் உள்ளே சிரிப்பார்கள்.
சுவாசிக்கும்போது உள்ளிழுப்பது
சுதந்திரத்தின் கனவுகளாக இருக்கவேண்டும்.
மாவீரர் நாள்
மயக்கமில்லாதவரின் மானப்பெருவிழா
எத்தனை துயர்வரினும் இடியமாட்டோமென
கல்லறைகளிற் சத்தியம் செய்யும் நாள்.
நேற்றுவரை நீங்கள் நேரிருந்தீர்
கண்களிலே பூத்ததுபோற்
பூத்துப் புன்னகைத்தீர் எங்களுடன்
பேசிக்களித்தீர் - போய்விட்டீர்
தாயகத்தில் வீசிவரும் காற்றில்
விரித்த சிறகெடுத்துத்
தூரப்பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே!
ஈர விழியிங்கு எமக்கின்னும் காயவில்லை
செங்குருதி பாய்ந்து திசை சிவந்து
எதிரிகளின் தங்ககங்கள் யாவும்
தணலிற் கருக்கியபின்
வென்ற களிப்பில் வீடுவந்தோம்
அன்றிருந்து
இன்றுவரை உம்மை எவ்விடத்தும் காணலையே.
கல்லறைக்குள் நீங்கள் கண்மூடித் தூங்குவதாய்
சொல்லுகிறார்
உங்கள் தேகம் தூங்காதே.
மொட்டவிழும் பூவினிலே முகம் தெரியும்
கல்லறைக்கு கிட்டவர உங்கள் கண்தெரியும்
வீசுகின்ற காற்றினிலும் மூச்சுக் கலந்து
எம்மை உயிர்ப்பிக்கும்.

- விடுதலைப் புலிகள் (ஐப்பசி - கார்த்திகை 2007)





**படை நடவடிக்கைகளின்படி மாவீரர்கள் பட்டியல்**

ஆகாயக் கடல் வெளிச் சமர்
604 மாவீரர்கள்

மணலாறு
233 மாவீரர்கள்

தவளைப் பாய்ச்சல்
460 மாவீரர்கள்

கொக்குத்தொடுவாய்
175 மாவீரர்கள்

இடிமுழக்கம்
181 மாவீரர்கள்

சூரியகதிர் (ரிவிரச)
438 மாவீரர்கள்

ஓயாத அலைகள் 1
315 மாவீரர்கள்

சத்ஜெய 2 நடவடிக்கையும் அதன் மீதான எதிர்த்தாக்குதல்களும்
100 மாவீரர்கள்

சத்ஜெய 3 நடவடிக்கையும் அதன் மீதான எதிர்த்தாக்குதல்களும்
133 மாவீரர்கள்

பரந்தன் ஆனையிறவு
193 மாவீரர்கள்

மண்டைதீவு
103 மாவீரர்கள்

கிளிநொச்சி, பரந்தன் மீதான ஊடுருவித் தாக்குதல்
300 மாவீரர்கள்

ஓயாத அலைகள் 2
403 மாவீரர்கள்

ஜெயசிக்குறு படைநடவடிக்கையும் அதன்மீதான எதிர்த்தாக்குதலும்
2146 மாவீரர்கள்

ஓயாத அலைகள் 3
1336 மாவீரர்கள்

ஓயாத அலைகள் 4
181 மாவீரர்கள்

தீச்சுவாலை முறியடிப்புச் சமர்
141 மாவீரர்கள்

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM



## மாவீரர்களின் எண்ணிக்கை

(உத்தியோகபூர்வமாக விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்டது. 27.11.1982 முதல் 20.11.2008 வரையானது)

| ஆண்டு | மாவீரர் எண்ணிக்கை |
|---|---|
| 1982 | 01 |
| 1983 | 05 |
| 1984 | 36 |
| 1985 | 123 |
| 1986 | 260 |
| 1987 | 453 |
| 1988 | 366 |
| 1989 | 374 |
| 1990 | 965 |
| 1991 | 1622 |
| 1992 | 792 |
| 1993 | 928 |
| 1994 | 378 |
| 1995 | 1508 |
| 1996 | 1380 |
| 1997 | 2112 |
| 1998 | 1806 |
| 1999 | 1549 |
| 2000 | 1983 |
| 2001 | 762 |
| 2002 | 46 |
| 2003 | 72 |
| 2004 | 80 |
| 2005 | 58 |
| 2006 | 1014 |
| 2007 | 1202 |
| 2008 | 2239 |

விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட மொத்த மாவீரர்களின் எண்ணிக்கை

22,390

# தமிழீழ விடுதலை
# நிற்கும் மாவீரர் து

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் தமிழீழ தேசத்தைத் தாண்டி சர்வதேசம் வரை வியாபித்து, தமிழ் மக்களின் உரிமைக் குரலை உயர்த்தி நிற்கின்றது. இந்த உயர்வுக்கும் தமிழர்களின் தலை நிமிர்வுக்கும் காரணமான காவிய நாயகர்களை நினைவுகூரும் கார்த்திகை மாதத்தில் நாம் கால் பதித்திருக்கின்றோம்.

சேர, சோழ, பாண்டியர்களுக்கு பின்னர், பண்டாரவன்னியன், எல்லாளன், சங்கிலியனுக்கு பின்னர் குக்கிராமத்து இனம் போன்று இருந்த தமிழினத்தை உலகின் மூலை, முடுக்கு எங்கும் அறியவைத்திருக்கின்றார் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்.

உலகத் தமிழர்களின் போராட்ட வரலாற்றில், முப்படை கொண்டு, மரபுவழிப் போர் புரிந்தவர்கள் என்ற பெருமையை தமிழீழ விடுதலைப் புலிகள் நிலைநாட்டியிருக்கின்றனர்.

கடற்படை, தரைப்படை, விமானப் படை போன்ற முப்பெரும் படைக் கட்டமைப்புக்களுடன் தமிழீழத்தின் வான், கடல், தரைப் பாதுகாப்புக்களை உறுதிப்படுத்தியவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்.

உலகின் சகல வல்லாதிக்க சக்திகளுக்கும் முகம்கொடுத்து, தனியொரு விடுதலை அமைப்பாக, தனித் தேசமான தமிழீழத்தில் நின்று போராடிய பெருமைக்குரியவர்கள் புலிகள்.

தமிழனை அடிமைப்படுத்த நினைத்தவர்களுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்து, அதற்கு முதுகெலும்பாக நின்று, எதிரிகளைக் கொன்று குவித்து, அவர்களைப் புறமுதுகிட்டு ஓடவைத்து மண்ணுக்குள் வித்தாகிப்போன மாவீரர்களே அத்தனை பெருமைகளுக்கும் சொந்தக்காரர்கள்.

தமிழர்களின் விடுதலை வேட்கையை, சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் துடிக்கும் அவர்களின் வேணவாவை உலகின் காதுகளுக்கு எடுத்துச் செல்ல, எடுத்துச் சொல்லக் காரணமாக இருந்தவர்கள் மாவீரர்கள்.

'மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணித்தார்கள். அவர்களது சாவு, சாதாரண மரண நிகழ்வு அல்ல, எனது தேச விடுதலையின் ஆத்மீக அறைகூவலாக அமைந்துள்ளது' என்ற தமிழீழ தேசியத் தலைவரின் கூற்று மாவீரர்களின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றது.

உலக வரலாற்றில் எங்கும், எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புகளும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன என்றார் தேசியத் தலைவர். இந்தக் கருத்து பொய்மை அல்ல.

உலகில் எந்தவொரு விடுதலை இயக்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளைப் போன்று உருவாகியதும் இல்லை. வளர்ந்ததும் இல்லை. நிலைபெற்றதும் இல்லை. மக்கள் ஆதரவைப் பெற்றதும் இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏனைய சில இயக்கங்களைப் போன்று பொழுதுபோக்குக்காக, மற்றவர்களை அடிமைப்படுத்துவதற்காக, சேர்ந்து குடித்துக் கும்மாளமடிப்பதற்காக தோற்றுவிக்கப்பட்டது அல்ல. ரவுடித்தனம் செய்வதோ, ஹீரோயிசம் காட்டுவதோ இந்த இயக்கத்தின் நோக்கமாக இருக்கவில்லை.

அப்பளுக்கற்ற, யாருக்கும் விலைபோகாத, தமிழ் மக்களை உண்மையாக நேசிக்கும் தலைவனால் உருவாக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் விடுதலை ஒன்றையே தமது இலட்சியமாக வரித்துக்கொண்டது.

தமிழ் மக்கள் அனுபவித்த வேதனைகள், அவர்களின் வலிகளை நேரடியாக பார்த்து உணர்ந்த, கேட்டு உணர்ந்த தலைவர், எமது மக்களின் வலிகளுக்கு காரணமானவர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்திற்கும் அப்பால், தமிழர்களுக்கு பாதுகாப்பான ஒரு தேசத்தை அமைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஆரம்பித்தார்.

ஏற்கனவே, பல இயக்கங்களும் அரசியல் கட்சிகளும் இருந்த போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இளைஞர்கள், பொதுமக்கள், கல்விமான்கள், துறைசார் அதிகாரிகள் தங்களை இணைத்துக்கொள்வதற்கு தலைவரின் நேர்த்தியான செயற்பாடுகள் காரணமாக அமைந்தன. அந்தச் செயற்பாடுகளே எந்தத் தியாகத்தையும் செய்வதற்கு போராளிகளைத் தூண்டியது.

தமிழீழம் ஒன்றே இலக்கு என்ற தாரக மந்திரத்துடன் புலிகள் இயக்கம் பயணித்தது. அது சுகமான பயணம் அல்ல. தலைவர் உட்பட ஒவ்வொரு போராளிகளும் தமிழீழ விடுதலைக்காக கடினமான பாதைகளால் பயணித்தனர். உலகின் ஒப்பற்ற கெரில்லா இயக்கம் என்ற பெயரைப் பெற்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கெரில்லா இயக்கமாக இருந்தபோதே முதலாவது மாவீரனை இழக்கவேண்டி ஏற்பட்டது. 2 ஆம் லெப்டினன்ட் சங்கர் என அழைக்கப்படும் செல்வச்சந்திரன் சத்தியநாதன் என்ற போராளி முதன் முதலில் தமிழீழ விடுதலைக்காக களப்பலியானார். அவரது நினைவு தினமே மாவீரர் தினமாக உருப்பெற்றது.

புலிகள் கெரில்லா இயக்கமாக இருந்த போது களப்பலியாகிய மாவீரர்களுக்கு உரிய மரியாதை அளித்தனர். பின்னர்

**தமிழீழ விடுதலைப் புலிகளை உலகம் வித்தியாசமானவர்களாக நோக்குவதற்கும், உலக மக்களின் பார்வையில் புலிகள் இடம்பிடிப்பதற்கும் முக்கிய காரணமாக அமைந்தது மாவீரர்களுக்கு அவர்கள் கொடுத்த மரியாதை.**

மரபுவழி இராணுவக் கட்டமைப்பாக வளர்ந்த பின்னர் மாவீரர் துயிலும் இல்லங்களை உருவாக்கி மாவீரர்களை விதைத்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளை உலகம் வித்தியாசமானவர்களாக நோக்குவதற்கும், உலக மக்களின் பார்வையில் புலிகள் இடம்பிடிப்பதற்கும் முக்கிய காரணமாக அமைந்தது மாவீரர்களுக்கு அவர்கள் கொடுத்த மரியாதை.

உலகில் எந்தவொரு இராணுவமோ, விடுதலை அமைப்போ உயிரிழக்கும் தமது போர் வீரர்களுக்காக தனி இடம் அமைத்து அவர்களை விதைப்பதில்லை. அவர்களை நினைவுகூர்வதில்லை. அவர்களுக்கு



# ...யை குறியீடு செய்து
# ...யிலும் இல்லங்கள்

**உலகில் எந்தவொரு இராணுவமோ, விடுதலை அமைப்போ உயிரிழக்கும் தமது போர் வீரர்களுக்காக தனி இடம் அமைத்து அவர்களை விதைப்பதில்லை. அவர்களை நினைவுகூர்வதில்லை. அவர்களுக்கு வணக்கம் செலுத்துவதில்லை.**

வணக்கம் செலுத்துவதில்லை.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் புதிய மரபை உலகுக்கு அறிமுகம் செய்தனர். தமிழீழ விடுதலைக்காக உயிர்நீத்தவர்களுக்கு, அவர் எந்தப் பொறுப்பில் இருந்தாலும், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு இன்றி, நீண்டகாலப் போராளி, குறுகிய காலப் போராளி என்று வகைபிரித்துக் கூறாமல் அனைவருக்கும் மாவீரர் என்ற கௌரவம் வழங்கினர். அவர்களை விதைப்பதற்கு என தமிழர் தாயகத்தில் துயிலும் இல்லங்களை அமைத்தனர்.

தமிழீழ தேசியத் தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ், மாவீரர்களை நினைவுகூர தமிழீழ மாவீரர் தினம் ஏற்பாடு செய்யப்பட்டது. அது காலப்போக்கில் தமிழீழத்தின் தேசிய நிகழ்வாக பரிணமித்தது. உலகத் தமிழர்களை விடுதலைப் போராட்டத்தின்பால் ஈர்ப்புக்கொள்ள வைத்தது.

மாவீரர்கள் காலத்தால் அழியாத காவியச் சிற்பிகள் ஆனார்கள். ஒவ்வொரு வருடமும் மாவீரர் தினத்தில் மட்டுமே தமிழீழ தேசியத் தலைவர் கொள்கை விளக்க உரை ஆற்றினார். அந்த உரைக்காக உலகமே ஏங்கியிருந்தது. ஒரு மாவீரர் தினம் நிறைவடைந்தால் அடுத்த மாவீரர் தினத்திற்காக தமிழினமே காத்திருக்கும்.

கடந்த 2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் போராட்டம் மௌனிக்கும் வரை தமிழர் தாயகத்தில் மட்டுமன்றி உலகில், தமிழ் மக்கள் வாழ்கின்ற அனைத்து நாடுகளிலும் தமிழீழ மாவீரர் தினம் எழுச்சியாக அனுஷ்டிக்கப்பட்டது.

மாவீரர் தினம் என்றால் தமிழர் தேசம் புத்தெழுச்சி பெறும். எதிரியிடம் இருந்து தமிழ் மக்களையும் தமிழர் தேசத்தையும் காத்த அந்த வீரர்களை விதைத்த கல்லறைகளுக்குச் சென்று மலர்தூவி, தீபமேற்ற தமிழர் தேசமே தயாராகும்.

அந்த நாள், கார்த்திகை 27 இல், மாலை 6 மணி தொடக்கம் தலைவரின் உரை நிறைவடையும் வரை மாவீரர் துயிலும் இல்லங்களில் நடைபெறுவதை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை.

துயிலும் இல்லப் பாடல் ஒலிக்கும்போது மனங்கள் விம்மி அழும். மாவீரர்களைப் பெற்றவர்கள் தங்கள் பிள்ளைகளின், எதிரியைச் சிதறடித்து உறங்கும் வீரர்களின் கல்லறைகளைக் கட்டி அழும் அந்த நொடிப் பொழுதை யாராலும் கற்பனை செய்து பார்க்க முடியாது.

மழைத் தூறல்களுக்கு மத்தியிலும் எரியும் தீபங்களின் ஒளியில் மாவீரர்கள் வந்து கதை பேசிச் செல்வதை அந்த இடத்தில் நின்றால் மட்டுமே உணர்ந்துகொள்ள முடியும்.

அந்த மணித்துளியில், அங்கு நிற்கும் அனைவரின் மனங்களுக்குள்ளும் இனம்புரியாத உணர்வுகள் இளையோடும். அத்தனைபேரின் மனங்களும் விடுதலை நோக்கிய உறுதி எடுப்பதை பக்கத்தில் நிற்பவரே அறிந்துகொள்ள முடியாது. அனைவரும் வெளியே அமைதியாக ஆனால், உள் மனதில் ஆக்ரோசமாக நிற்பதை எழுத்துக்களால் வடிக்க முடியாது.

'மாவீரர்கள், புனிதமான இலட்சியத்திற்காகத் தமது வாழ்வைத் தியாகம் செய்தவர்கள். இதனால்தான் இவர்கள் சாதாரண மனிதர்களிலிருந்து வேறுபட்டுநிற்கிறார்கள், உயர்ந்துநிற்கிறார்கள். எமது தேசத்தின் வரலாற்றில் சங்கமமாகி நிற்கிறார்கள்'



**'தாயகத்தில் இருந்து' காந்தரூபன்**

என தேசியத் தலைவர் அடிக்கடி கூறுவார்.

மாவீரர்களின் தியாகங்களை, மாவீரர் தினத்தின் மகத்துவத்தை எமது இன்றைய இளைஞர், யுவதிகளுக்கு எடுத்துரைக்க வேண்டும். மாவீரர்களின் தியாகங்களை, அவர்களின் அர்ப்பணிப்பை, அவர்களின் வீர வரலாற்றை எதிர்காலம் மறந்துவிடக் கூடாது.

2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் தாயகத்தில் இருந்து அத்தனை மாவீரர் துயிலும் இல்லங்களையும் சிங்களப் படை இடித்து அழித்தது. கோப்பாய் உள்ளிட்ட சில துயிலும் இல்லங்கள் இருந்த இடங்களில் படைமுகாம்களைக் கட்டினர் சிங்களப் படையினர்.

உலகப் போர் விதிகளுக்கு முற்றிலும் மாறான விதத்தில் போர் செய்த சிங்களப் படை, அந்த விதிகளை, போர் மரபுகளை மீறி, போரில் ஈடுபட்ட வீரர்களின் கல்லறைகளுக்கு மதிப்பு, மரியாதை செலுத்தாமல் காட்டுமிராண்டித்தனத்தில் ஈடுபட்டது.

எனினும் சில துயிலும் இல்லங்கள் பற்றைகள் மண்டிக் காணப்பட்டன. அந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் துப்புரவாக்கப்பட்டுள்ளன. அங்கு இம்முறை மாவீரர்களுக்கு தீபமேற்றி வணக்கம் செலுத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

சில அரசியல் கட்சிகள் தனித்தனியாக வணக்க நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துகின்றன. ஆனால், அரசியல் வேறுபாடுகளைக் கைவிட்டு, அவர்கள் மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்த வேண்டும்.

தமிழ் மக்களுக்காக வெயில், மழை, பனி, குளிர் என்று பாராமல் உணவை மறந்து, உறவுகளைத் துறந்து, உயிரைத் துச்சமென மதித்து, எதிரிக்கு முன் நின்று சமராடிக் காவியமானவர்களின் நினைவேந்தல் நேர்த்தியாக நடைபெறவேண்டும்.

தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காகவும், கௌரவத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் தமது இன்னுரை அர்பணித்துள்ள மாவீர்களான தியாகிகள், காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

நிலத்தில் விதைக்கப்பட்டிருக்கும் மாவீரர்களும் அவர்களின் கல்லறைகளும் தமிழீழ விடுதலையையே குறியீடு செய்து நிற்கின்றன. அந்தக் கல்லறைகளில் உறங்கும் வீரர்களின் இலட்சியக் கனவுகள் நனவாகும் நாள் வெகு தொலைவில் இல்லை.



## முதல் வித்தும் மாவீரர் நாளும்

சங்கர் ஒரு முழுநேரப் போராளி கம்பர்மலை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட சங்கரின் சொந்தப்பெயர் சத்தியநாதன். விடுதலைப் போராட்டத்தின் பரிமாணாமங்களை முழுமையாக அறிந்துகொண்டவன். 1981ம் ஆண்டு நீர்வேலி வங்கியில் போராட்டத் தேவைக்காக பணம் பறித்தெடுக்கப்பட்ட தாக்குதலில் சங்கரின் துணிச்சல் வெளிப்படுத்தப்பட்டது.

அவனது அந்தச் துணிச்சலான செயற்பாடு விடுதலைப் போராட்டத்திற்குப் பொருளாதார பலத்தை அளித்தது. 27.10.1982 அன்று நடைபெற்ற சாவகச்சேரியிலிருந்த சிறீலங்காக் காவல் நிலையத் தாக்குதலின் போது சீலன் அதற்குத் தலைமை தாங்கினான். சீலன் காயப்பட்டதும் அத்தாக்குதலை சங்கர் தலைமை தாங்கி வழிநடத்தினார்.

எதுவித பதட்டமும் இன்றி முன்னேறினான். காவல்துறையினர் பின்வாங்கி ஓடினார்கள். தாக்குதல்கள் முழுமையான வெற்றியைத் தந்தது. சங்கரின் திறமை போராட்டத்திற்கு முழுமையான நம்பிக்கையை ஊட்டியது. இத்தாக்குதல் பற்றி சிறீலங்காவின் காவல்மா அதிபராக இருந்த ஸ்ரான்லி சேனநாயக்கா இதில் பங்கு பற்றிய கெரில்லாக்கள் மிகவும் மதிநுட்பமும் அபார துணிச்சலும் மிக்கவர்கள் என ஒரு பத்திரிக்கைப் பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

சீலனுக்கு வைத்திய வசதிகள் செய்வதற்காக பேரினவாதப் படைகளின் தேடுதல் வேட்டையும் சுற்றிவளைப்பும் அடிக்கடி நடந்தன யாழில். அத்தோடு தேசத்துரோகிகளின் காட்டிக் கொடுப்புக்களும் நிகழ்ந்துகொண்டு தான் இருந்தன. இருப்பினும் சங்கர் இதனை முறியடித்துச் செயற்பட்டுக் கொண்டிருந்தான்.

அந்தவேளையில் தான் யாழ் நாவலர் வீதியில் ஒரு வீட்டருகே எதிரியின் துப்பாக்கிக்கு இலக்காகிறான். காயமடைந்து ஆதரவாளர் ஒருவரினால் முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்பட்டு கடல்வழியூடாக தமிழகம் அனுப்பி வைக்கப்பட்டான். இருந்த போதும் சரியான சிகிச்சையின்றி அதிக இரத்தம் வெளியேறிய நிலையில் அவனது உயிர் தலைவன் மடியில் பிரிந்தது. அந்த மாவீரன் சங்கர் நினைவான நவம்பர் 27ம் திகதியை தமிழீழ தேசிய மாவீரர் நாளாக தலைவர் வே.பிரபாகரன் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் தமிழர் தாயகத்திலும் தமிழர் வாழும் நாடுகளிலும் கடைப்பிடிக்கப்படுகிறது.



**ஏனைய மாவீரர்கள்**

எல்லைப்படை மாவீரர்கள்
ஆண்கள் - 276
பெண்கள் - 05
மொத்தம் - 281

காவற்துறை மாவீரர்கள்
ஆண்கள் - 34
பெண்கள் - 03
மொத்தம் - 37

மாமனிதர்கள்
ஆண்கள் - 19
மொத்தம் - 19

நாட்டுப்பற்றாளர்கள்
ஆண்கள் - 456
பெண்கள் - 28
மொத்தம் - 484

ஈரோஸ்
266 மாவீரர்கள்

தனிக்குழு
10 மாவீரர்கள்

## கணப்பொழுது

கரும்புலி கப்டன் குமரேஸ் அறிவுக்குமரனை என்னையும் கொண்டுபோங்கோ காலில் லாட்டியும் இழுயனையாவது கொண்டுபோய் இடிப்பன் என்று அந்த முடியாத வேளையில் கூட சொன்னான். தான் தன்னை இழக்கின்ற போது எதிரியையும் இலக்கையும் அழிக்க வேண்டும் என்ற தவிப்பைப் பாருங்கள். என்னால் எதுவுமே செய்ய முடியாத நிலையில் தவித்திருக்க அவன் எதுவுமே சொல்லவில்லை சாச்சை மட்டும் ஓன் (லிஜ) பண்ணினான். அதனோடு குமரேசின் இறுதியான வார்த்தையையும், அவனின் சிரித்தபடி இருக்கும் இளைய முகத்தையும், ஏன் அவனின் அந்தக் கட்டு உடலைக் கூட எங்களால் இனிக் காணவே முடியாது என்பதை நினைத்த போது நெஞ்சில் ஒரு பெரும் வேதனையும் உறைந்து போனது.

குமுதன்அண்ணாவைக்கொண்டு வந்து கொண்டே இருந்தேன். அவர் அடிக்கடி பிடியிலிருந்து நழுவி நழுவி தலையைக் குத்திக் குத்தி விழுந்து கொண்டே இருந்தார்.

தொடர்ச்சி 16ம் பக்கம்

# சிங்களத்தின் சக்க

# தமிழ் அரசிய

நான்காம் கட்ட ஈழப் போரின் இறுதி இரண்டு வார காலப்பகுதி அது. எப்படியும் இந்தியப் பொதுத் தேர்தல் முடிவுகள் வருவதற்குள் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து விட வேண்டும் என்பதில் கோத்தபாய ராஜபக்ச துடியாய் துடித்துக் கொண்டிருந்தார். 'தம்பி உடையான் படைக்கஞ்சான்' என்ற கதையாக, தனது யுத்த வெற்றிகள் பற்றி உலகெங்கும் புழுகித் தள்ளுவதற்காக மகிந்தர் விமானம் ஏறிப்பறக்க, அவரது இடத்தில் பதில் பாதுகாப்புத்துறை அமைச்சராகவும், ஆயுதப் படைகளின் பதில் தளகர்த்தாவாகவும் திகழ்ந்தவர் மைத்திரிபால சிறீசேன.

முள்ளிவாய்க்காலில் 148,648 தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டும், காணாமல் போகச் செய்யப்பட்டும் இனவழிப்பிற்கு ஆளாக்கப்பட்டதில் மகிந்தருக்கும், கோத்தபாயவிற்கும் எவ்வளவு பங்கு இருக்கின்றதோ, அதேயளவு பங்கு மைத்திரியாருக்கும் இருக்கின்றது. அது மட்டுமல்ல.

2006ஆம் ஆண்டு மாவிலாற்றில் நான்காம் கட்ட ஈழப் போர் வெடித்ததில் இருந்து முள்ளிவாய்க்காலில் தமிழீழ நடைமுறை அரசை சிங்களம் ஆக்கிரமித்தது வரையான காலப்பகுதியில் ஐந்து தடவைகள் பதில் பாதுகாப்புத்துறை அமைச்சராகவும், அந்த வகையில் சிங்கள ஆயுதப் படைகளின் பதில் தளகர்த்தாவாகவும் சிறீசேன பதவி வகித்திருக்கின்றார்.

தவிர சிங்கள தேசத்தின் அதிபராகச் சந்திரிகா அம்மையார் பதவி வகித்த பொழுது, கருணா குழுவிற்கும், அம்மையாருக்கும் இடையிலான தொடர்பாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தவரும் இதே சிறீசேன தான்.

இவ்வாறு ஈழ மண்ணில் தமிழ்க் குருதி ஆறாக ஓடுவதற்குக் காரணமானவர்களில் ஒருவர், புத்தனுக்குத் தமிழ்ப்பிணங்களைப் படைத்து மகிழ்ந்த சிங்கள ஆயுதப் படைகளின் பதில் தளகர்த்தாவாகத் திகழ்ந்த ஒருவர், தனது படையினர் இழைத்த குற்றங்களுக்காக அவர்களைத் தண்டிப்பார் என்று எதிர்பார்ப்பதை விட மடமைத்தனம் இருக்க முடியாது.

எனவே தமது படையினர் மீது சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றங்களை விசாரணை செய்வதற்குத் தீர்ப்பாயம் எதுவும் அமைக்கப்பட மாட்டாது என்றும், எந்தக் கட்டத்திலும் பன்னாட்டு நீதிபதிகளின் விசாரணைக்கு தமது படையினர் உட்படுத்தப்பட மாட்டார்கள் என்றும் கடந்த வாரம் சிறீசேன அறிவித்திருப்பதையிட்டு நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை.

அதேநேரத்தில் நீண்ட காலமாக சிங்கள தேசத்துச் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக சிறீசேன நடந்து கொள்ளும் விதத்தைப் பார்க்கும் பொழுது இன்னொரு விடயமும் தெளிவாகின்றது: விரல்விட்டு எண்ணக்கூடிய ஓரிரு தமிழ் அரசியல் கைதிகளைத் தவிரப் பெரும்பாலானவர்களை எப்படியாவது தண்டித்து விட வேண்டும் என்பதில் சிறீசேனவின் அரசாங்கம் துடியாய்த் துடிதுடிக்கின்றது என்பதுதான் அது.

கடந்த வாரமும், அதற்கு முந்திய வாரமும் - அதிலும் ஆறு நாட்களில் - இரண்டு தமிழ் அரசியல் கைதிகளுக்கு கொழும்பு மேல்நீதிமன்றத்தால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டமை இதனையே பறைசாற்றி நிற்கின்றது.

இதற்கான காரணத்தை நாங்கள் புரிந்து கொள்வது அவ்வளவு கடினம் அல்ல. தமிழ் அரசியல் கைதிகளை சிறீலங்கா அரசாங்கம் விடுதலை செய்யாதிருப்பதில் பெரும் சதி பொதிந்திருப்பதாக ஏலவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றம் சுமத்தியிருக்கின்றது என்பது வேறு விடயம்.

ஆனால் இதுபற்றி 01.12.2015 அன்று - ஏறத்தாள 23 மாதங்களுக்கு முன்னர் - கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் சந்திரிகா அம்மையார் விளக்கியிருந்தார். அதாவது நீதிமன்றங்களில் குற்றவாளிகளாக இனம் காணப்பட்ட மற்றும் நீதிமன்ற விசாரணைகளை எதிர்கொண்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை அரசாங்கம் விடுதலை செய்ய முடியாது என்றும், அவ்வாறு அவர்களை விடுதலை செய்வதாயின் போர்க் குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கியுள்ள ஆயுதப் படையினருக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது எந்த விதத்திலும் நியாயமாகாது என்றும் அப்பொழுது சந்திரிகா அம்மையார் கூறியிருந்தார்.

சிறீசேன என்ற புகையிரத வண்டியின் பின் இயந்திரமாகத் திகழ்பவர் சந்திரிகா அம்மையார். இப்பொழுதும் கூட அம்மையார் அமர்ந்திருப்பதற்கு ஆசைப்படும் அதிபர் சிம்மாசனத்தில்தான் மைத்திரியார் அமர்ந்துள்ளார்.

ஆக 23 மாதங்களுக்கு முன்னர் அம்மையார் திருவாய் மலர்ந்ததையே மைத்திரியார் செயற்படுத்தி வருகின்றார் என்றால் அது மிகையில்லை.

தீர்வுப் பொதி என்றும், அதிகாரப் பரவலாக்கம் என்றும், சமாதானத்திற்கான யுத்தம் என்றும், நாட்டின் இறையாண்மையைப் பாதுகாத்தல் என்றும் பல செப்படி வித்தைகளை அரங்கேற்றிப் பதினொரு ஆண்டுகள் உலகை ஏமாற்றிய நவீன விகார மாதேவியார்தான் சந்திரிகா அம்மையார். அப்படிப்பட்ட நவாலி நரபலி நாயகியின், செம்மணிப் புதைகுழித் தேவதையின் பொம்மலாட்டமே கடந்த மூன்றாண்டுகளாக மைத்திரிபால சிறீசேனவின் ஆட்சி என்ற வடிவில் ஈழத்தீவில் அரங்கேறி வருகின்றது.



சிங்கள தேசத்தின் அரசியலமைப்பின் படி ஒருவர் ஆறு ஆண்டுகளுக்கு அதிபராகப் பதவி வகிக்க முடியும். அதன்படி பார்த்தால் சிறீசேனவின் ஆட்சிக்காலம் 2021ஆம் ஆண்டு வரை தொடர வேண்டும். ஆனாலும் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஆட்சியில் இருக்கும் எண்ணம் தனக்கு

**அவர்களை விடுதலை செய்வதற்குப் பிரதியுபகாரமாக, போர்க்குற்றங்கள், மானிடத்திற்கு எதிரான குற்றச்செயல்கள் போன்ற பன்னாட்டுக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட சிங்களப் படைத் தளபதிகள், மற்றும் படையினருக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை எதிர்காலத்தில் சிறீசேன-சந்திரிகா - ரணில் கும்பல் விதிக்கும் என்று உறுதியாக எதிர்பார்க்கலாம்.**



# ர வியூகத்திற்குள்
# ல் கைதிகள்



இல்லை என்று அதிபர் சிம்மாசனத்தில் மைத்திரியார் அமர்ந்த இரண்டு வாரங்களில் அறிவித்ததன் அடிப்படையில் பார்க்கும் பொழுது, 2020ஆம் ஆண்டில் அவரது ஆட்சிக்காலம் முடிவுக்கு வந்து விடும் என்று எதிர்பார்க்கலாம்.

அது வரை உள்ளகப் பொறிமுறையை நிறுவும் பெயரில் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குக் காலத்தை இழுத்தடிக்கும் திட்டத்தில் மைத்திரி - சந்திரிகா - ரணில் கும்பல் இருக்கின்றது என்பது மெல்ல மெல்ல கண்கூடாகின்றது.

அதற்குள் எப்படியாவது சிறையில் இருக்கும் பெரும்பாலான தமிழ் அரசியல் கைதிகளை நீதிமன்றத்தின் ஊடாகத் தண்டித்து விட்டால், தமது ஆயுதப் படைகள் மீதான நீதிமன்ற விசாரணை தொடர்பிலான பேரம் பேசலை மேற்கொள்ளலாமென மைத்திரி அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

அதாவது மைத்திரிபாலவோ, அல்லது 2020ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிங்கள தேசத்தின் அதிபர் சிம்மாசனத்தில் அமரப் போகும் வேறு எந்த நபரோ பொதுமன்னிப்பு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்தாலே ஒழிய, எந்தச் சந்தர்ப்பத்திலும் நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் எவரும் விடுதலை செய்யப்படுவது சாத்தியமில்லை.

எனவே நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்படும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்வதற்குப் பிரதியுபகாரமாக, போர்க்குற்றங்கள், மானிடத்திற்கு எதிரான குற்றச்செயல்கள் போன்ற பன்னாட்டுக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட சிங்களப் படைத் தளபதிகள், மற்றும் படையினருக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை எதிர்காலத்தில் சிறீசேன-சந்திரிகா-ரணில் கும்பல் விதிக்கும் என்று உறுதியாக எதிர்பார்க்கலாம்.

இதனையொத்த நிபந்தனைகளை முன்வைத்து நெல்சன் மண்டேலாவுடன் பேச்சுவார்த்தை நடாத்தித்தான் 1994ஆம் ஆண்டில் தென்னாபிரிக்காவில் வெள்ளையர்களின் நிறவெறி ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

தென்னாபிரிக்காவில் வெள்ளையர்களின் நிறவெறி ஆட்சியில் கறுப்பின மக்கள் எதிர்கொண்ட கொடூரங்கள் ஏராளம்: அவலங்கள் எண்ணிலடங்காதவை. நிறவெ

கலாநிதி சேரமான்

றிக்கு எதிராக ஆயுதமேந்தியும், அமைதி வழியிலும் போராடிய ஆயிரக்கணக்கான கறுப்பின இளைஞர்கள் தென்னாபிரிக்காவின் வெள்ளையின பாதுகாப்புப் படைகளால் தயவு தாட்சண்யமின்றி கொன்று குவிக்கப்பட்டார்கள்: பலர் கைது செய்யப்பட்டு, வதைகளுக்கு உட்படுத்தப்பட்டுக் காணாமல் போகச் செய்யப்பட்டார்கள்.

ஆனாலும் நெல்சன் மண்டேலாவிடம் தென்னாபிரிக்காவின் ஆட்சியதிகாரம் கையளிக்கப்பட்ட பொழுது, இவ்வாறான கொடூரங்களுக்குக் காரணமாக இருந்த வெள்ளையின பாதுகாப்புப் படை அதிகாரிகளும், வீரர்களும் தண்டனைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை அவரிடமிருந்து வெள்ளையின அரசியல் தலைவர்கள் பெற்றிருந்தார்கள்.

இதனை முன்னுதாரணமாகப் பயன்படுத்தித் தமது ஆயுதப் படைகளைப் பாதுகாப்பதே மைத்திரி-சந்திரிகா-ரணில் கும்பலின் திட்டமாக உள்ளது எனலாம். ஆக இவ்விடயத்தில் மீண்டும் ஏமாறப் போவது தமிழர்கள் தான்.

உள்ளக விசாரணை தொடர்பாகக் கடந்த 2015ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்தாது சிறீலங்கா அரசாங்கம் இழுத்தடித்து வருவதைக் காரணம் காட்டி, இறுதி யுத்தத்தில் நிகழ்ந்த கொடூரங்கள் தொடர்பான நீதி விசாரணையை சாத்தியப்படுத்த முடியும் என்று தமிழீழ தாயகத்தில் உள்ள சமூக செயற்பாட்டாளர்களும், புலம்பெயர் தேசங்களில் உள்ள அரசியல் செயற்பாட்டாளர்களும் கனவு காண்கின்றார்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தான் தமிழர்களின் விடிவு தங்கியிருக்கின்றது என்ற தொனியிலேயே இவர்களின் அரசியல் வியூகங்கள் - அப்படி ஏதாவது வகுக்கப்பட்டிருந்தால் - தென்படுகின்றன.

ஆனால் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாது, அவர்களுக்கு நீதிமன்றத்தின் ஊடாகத் தண்டனை வழங்கி, அவர்களுக்கான பொதுமன்னிப்பை பேரம் பேசலுக்கான ஆயுதமாக்கித், தமது தளபதிகளையும், ஆயுதப் படைகளையும் பாதுகாப்பதற்கான சக்கர வியூகத்தை நுட்பமான முறையில் சிங்களம் செயற்படுத்தி வருகின்றது.

மறுபுறத்தில் எதிர்காலத்தில் மேற்குலகிற்கு விரோதமான ஆட்சி மாற்றம் ஈழத்தீவில் நிகழ்ந்தாலேயே ஒழிய, தமது ஆயுதப் படைகளைத் தண்டிக்கும் விடயத்தில் சிறீலங்கா அரசாங்கம் எடுத்துள்ள நிலைப்பாட்டிற்கு மேற்குலகம் முண்டுகொடுக்கும் என்றே எதிர்பார்க்கலாம்.





### கரும்புலி மாவீரர்கள்
(மாவட்ட ரீதியாக 20.11.2008 வரையானது)

**யாழ்ப்பாணம்**
தரைக் கரும்புலி - 47
கடற்கரும்புலிகள் - 150
மொத்தம் - 197

**மட்டக்களப்பு**
தரைக் கரும்புலி - 27
கடற் கரும்புலிகள் - 24
மொத்தம் - 51

**அம்பாறை**
தரைக் கரும்புலி - 06
கடற் கரும்புலிகள் - 05
மொத்தம் - 11

**திருமலை**
தரைக் கரும்புலி - 06
கடற் கரும்புலிகள் - 18
மொத்தம் - 24

**வவுனியா**
தரைக் கரும்புலி - 04
கடற் கரும்புலிகள் - 12
மொத்தம் - 16

**முல்லைத்தீவு**
தரைக் கரும்புலி - 05
கடற் கரும்புலிகள் - 15
மொத்தம் - 20

**கிளிநொச்சி**
தரைக் கரும்புலி - 09
கடற் கரும்புலிகள் - 30
மொத்தம் - 39

**மன்னார்**
தரைக் கரும்புலி - 07
கடற் கரும்புலிகள் - 07
மொத்தம் - 14

**வெளிப்பிரதேசங்கள்**
தரைக் கரும்புலி - 02
கடற் கரும்புலிகள் - 05
மொத்தம் - 07

**மொத்தம்**
தரைக் கரும்புலி - 113
கடற்கரும்புலிகள் - 266

**மொத்த கரும்புலிகள்**
–
**379**



## தேசியத் தலைவரின் முதல் (1989) மாவீரர்நாள் உரையில்...

இது வரை காலமும் எமது புனித இலட்சியமான தமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த்தியாகம் செய்த 1307 போராளிகளை நினைவு கூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். முதல் முறையாக இன்று இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காக போரிட்ட போராளிகளின் நினைவாகவும், பாதுகாப்புக்காப்போரிட்ட படைவீரர்களின் நினைவாகவும் இப்படிப்பட்ட மாவீரர் நாட்களைக் கொண்டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும் இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச்சாவடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாட்களைக் கொண்டாடுவது வழக்கம். ஆனால் இந்த வருடத்திலிருந்து வீரச்சாவடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒரு நாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே மாவீரர் நாள் ஆகப் பிரகடனப்படுத்தியுள்ளோம். அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவு அடைந்த சங்கரின் நினைவு தினமாக இன்று அந்த மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தியுள்ளோம்.

அத்தோடு வழமையாக எங்கள்மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள் வசதியானவர்கள் இப்படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல எமது விடுதலைப் போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் எனும் ஒரு நோக்கத்துடனும் இந்த நாளை நாம் கொண்டாட முடிவு செய்துள்ளோம். அதாவது எமது போராளிகளை நினைவு கூரும் தினத்தை ஒரு நாளில் வைப்பதால் எல்லோரும் அன்று எமது இயக்கத்தில் இருந்து வீரச்சாவு அடைந்த தலைவர்களில் இருந்து சாதாரணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோரையும் சமமாகத் தான் கருதுகிறோம் என்பதுடன், வீரச்சாவடைந்த எல்லாப் போராளிகளின் நினைவு நாட்களையும் ஒன்றாக இணைத்து மாவீரர் நாளாக இன்று கொண்டாடுகிறோம்.

இதுவரை காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. ஆனால் இன்று நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயமாக அழியாது. இன்று எமது இனம் உலகிலேயே தலை நிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1307 போராளிகளின் உயிர்த்தியாகம் தான். அவர்களுடைய வீரமான தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு இன்று உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட ஆரம்பிக்க வேண்டும்.




**கேள்வி:–** வீரம் என்றால் என்ன? பயம் இல்லாமைதான் வீரமா?

அதிரதன் பரந்தாமன் பாரிஸ் பிரான்ஸ்

**பதில்:–** ஐந்து வயதில் நடுச்சாமத்தில் தன் வீட்டுக்கு அருகில் இருந்த ஆற்றங்கரையில் போயிருந்தான் சிறுவன். இடையில் முளித்துப் பார்த்த தாய் தன் பிள்ளையைக் காணவில்லையே என்று ஏங்கி வீடு முழுவதும் தேடிவிட்டு, அருகிலிருந்த ஆற்றங்கரைக்குப் போய்த் தேடியபோது, இரவில் ஓடும் ஆற்றை இரசித்துக் கொண்டிருந்தானாம் சிறுவன். “உனக்கு இருட்டைக் கண்டு பயமில்லையா?” என்று சிறுவனிடம் கேட்டாளாம் தாய். அப்போது சிறுவன் திருப்பிக் கேட்டானாம் “பயம் என்றால் என்ன?” என்று. அந்த சிறுவன் வேறு யாருமல்ல. பின்னாளில் உலகையே வியக்கவைத்த பிரெஞ்சுச் சக்கரவர்த்தி நெப்போலியன் போனபார்ட் தான்.



இரவு சிறுநீர் கழிப்பதற்குகூடத் தன் தாயில்லாமல் செல்லவே மாட்டானாம் அந்தச் சிறுவன். இருளைக் கண்டால் அவ்வளவு பயம். தன் இனத்தை அழிப்பதற்கு தயாராகிக் கொண்டிருந்த இராணுவத்தை அழிக்க தற்கொலைத் தாக்குதல்தான் இருக்கும் ஒரே வழி என்று அறிந்தபோது, அந்தத் தாக்குதலை தானே நடத்தவேண்டும் என்று உறுதியாக நின்று, வெடிகுண்டு நிரப்பப்பட்ட வாகனத்துடன் அந்த இருட்டுக்குள் நெல்லடியில் இருந்த சிங்கள இராணுவத்தின் முகாமிற்குள் எந்தவித அச்சமுமின்றி சீறிப் பாய்ந்து சென்றான் தமிழீழம் பெற்றெடுத்த கப்டன் மில்லர்.



பயம் இல்லாதவர்களும் வீரமாக இருந்திருக்கின்றார்கள். பயமுள்ளவர்களும் வீரமாக இருந்திருக்கின்றார்கள். எனவே பயத்திற்கும் வீரத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றே நான் நினைக்கின்றேன்.

ஆனையிறவையும், வவுனியாவையும், அநுராதபுரத்தையும் வீதியால் கடந்து செல்வதற்கே பெரும் அச்சப்பட்டனர் தமிழர்கள். ஆனால் அந்தத் தமிழர்களுக்குள் இருந்துதான் ஆனையிறவிற்குள்ளும், வவுனியாவிற்குள்ளும், அநுராதபுரத்திற்குள்ளும் ஏன் இன்னும் எத்தனையோ இராணுவ முகாம்களிற்குள் எந்தவித அச்சமுமின்றி உள்நுழைந்து அங்கிருந்து வேவுப் பணிகளைத் திரட்டி வந்த வேவுப் போராளிகளும், தாக்குதல் நடத்திய விடுதலைப் போராளிகளும், முகாம்களைத் தகர்த்தெறிந்த கரும்புலிகளும் இருந்திருக்கின்றார்கள்.

இந்த வீரங்களுக்கும் அப்பால் இன்னொன்றும் இருக்கின்றது. எங்கையோ படித்த குட்டிக் கதை ஒன்றுதான் ஞாபகத்திற்கு வருகின்றது.... ‘ஒரு தந்தை தன் மகனுக்கு வீரம் என்றால் என்ன? என்று விளக்கம் கொடுக்க முயற்சி செய்து கொண்டிருந்தார். ஏதேதோ உதாரணம் சொல்லியும் மகனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. “என்னுடன் வா...” என அழைத்துக் கொண்டு போனார். வெகுதூரம் சென்ற பின், ஓரிடத்தில் நிறுத்தி... சுற்றிலும் தரையை சுட்டிக் காட்டினார். ஏதோ தீ விபத்தினால் தரை முழுவதும் கருகிப் போயிருந்தது. குனிந்து தரை முழுவதும் உன்னிப்பாய்த் தேடினார். திடீரென்று முகம் பிரகாசமானார். “மகனே! வா! என்ன பார்க்கிறாய்?” என்று கேட்டார். “சுற்றிலும் கருகிய மொட்டாந்தரை!” “பிறகு...?” “நடுவில்... முளைத்திருக்கும் ஒற்றைப் புல்! ஆ... அப்பா! புரிந்து விட்டது! இதுதான் வீரம்.” என்றானாம்.’

இயல்பு நிலை முடக்கப்பட்டு, முற்றாக அழிந்தபிறகும் அதற்குள் இருந்து மூசி முளைத்தெழுதல் என்பதும் ஒரு போராட்டம்தான். அதுவும் ஒரு வீரம்தான்.? இப்படி வீரம் குறித்து எத்தனையோ சொல்லாம்.

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com
தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc
குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16



## செய்திகளும் எழும் கேள்விகளும்

தெய்வமகள்

**செய்தி:-** உலக மக்கள் தொகையான 760 கோடியில், சுமார் 110 கோடி பேர் எந்த இருப்பிடப் பதிவும் இல்லாதிருப்பதாக உலக வங்கி கவலை தெரிவித்தது.

**எழும் கேள்வி:-** கடன் வாங்குவதற்கு அவர்களிடம் நிரந்தர வதிவிட முகவரி இல்லையே என்ற கவலையோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** தன்மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடென ஈ.பி.டி.பி. படுகொலைக் குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** வெளியில் விட்டால் போட்டுத்தள்ள வசதியாய் இருக்கும் என்று எண்ணியிருப்பாரோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** சீன நாட்டவர்கள் 150 பேருக்கு கொழும்பில் உள்ள சுதந்திர சதுக்கத்தில், சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் திருமணம் நடைபெறவுள்ளது.

**எழும் கேள்வி:-** கூடவே குடியுரிமையும், குடும்ப அட்டையும் வழங்குவாரோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** இலங்கையில் தென்னை மற்றும் பனை மரங்களில் இருந்து கள் இறக்குவதற்கு இனி அனுமதிப் பத்திரம் வேண்டும்.

**எழும் கேள்வி:-** கள் அடிப்பதற்கு எந்தப் பத்திரமும் தேவையில்லையா..?

★★★★ ★★★★

**செய்தி:-** சிறீலங்கா அரசியல்வாதிகளில் 75 சத வீதமானோர் நேர்மையான அரசியல்வாதிகள் அல்ல என அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** அதற்குள் நீங்களும் ஒருவரோ..??

★★★★ ★★★★

**செய்தி:-** வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியும் நாட்டின் ஏனைய ஏழு மாகாணங்களில் சிங்கள மொழியும் உத்தியோகபூர்வ மொழியாக பயன்படுத்தப்படும் விதத்தில் அரசியல் யாப்பு உருவாகவுள்ளது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** அட ‘இதற்குத் தானா ஆசைப்பட்டாய் ~~பாலகுமாரா~~ சம்பந்தா..?’

★★★★ ★★★★

**செய்தி:-** நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பட்டாசு கூட வெடிக்க வைக்கத் தெரியாத பயந்தாங்கொள்ளி என்று அமைச்சரும் சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தின் முன்னாள் தளபதியுமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** விமல் வீரவன்சவின் வெறும் வெ(ட்)டிப் பேச்சுத் தானா இதுவும்..?

★★★★ ★★★★

**செய்தி:-** பௌத்த மத முன்னுரிமையை ஏற்கும் சம்பந்தன் போன்ற தலைவர்கள் இனிமேல் தமிழ் மக்களிடையே இருந்து வரமாட்டார் என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** ஏன் வரமாட்டார்கள்...? தமிழர்களிடம் துரோகிகளுக்கா பஞ்சம் வரும்...?

★★★★ ★★★★

**செய்தி:-** யாழ். பொது நூலகத்துக்கு நிகரான நூலகம் விரைவில் மட்டக்களப்பில் அமைக்கப்படும் என கிழக்கு மாகாணத்திற்கான சிறீலங்காவின் ஆளுநர் ரோகித போகொல்லாகம தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** அதனை எப்போது எரிப்பீர்கள்..?

★★★★ ★★★★

**செய்தி:-** நாம் பொறுமையின் எல்லையைத் தாண்டிவிட்டோம். பல விட்டுக் கொடுப்புகளையும் செய்துள்ளோம். இனிமேல் பொறுமைக்கும் விட்டுக்கொடுப்புக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடமளிக்காது என சிறீலங்கா எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** தமிழ் மக்களும் உங்களின் செயலால் பொறுமையின் எல்லையைத் தாண்டிவிட்டார்கள் என்பது சம்பந்தருக்குத் தெரியுமா..?

★★★★ ★★★★

**செய்தி:-** யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகக் கிணற்றில் மலேரியாவைப் பரப்பும் இந்தியவகை நுளம்பை டெங்கு கட்டுப்பாட்டு அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

**எழும் கேள்வி:-** இது என்ன புதுத் தாக்குதலோ..?

# மலரும் சுதந்திர பூமியில்



4

கலாநிதி சிறீஸ்கந்தராஜா

சுலைமானியாவின் ரமாடி ஐந்து நட்சத்திர விடுதியை எமது பேருந்து அடைந்த பொழுது 06.09.17 அதிகாலை 4:00 மணியை எட்டியிருந்தது. விடுதியின் வெளியில் ஏ.கே-47 ரக துப்பாக்கியுடன் மென்நீல மேலங்கியும், கரும்நீல நீள்காற்சட்டையும் அணிந்த ஒருவர் நின்றிருந்தார். தமிழீழ நடைமுறை அரசின் நிர்வாகத் தலைநகரான கிளிநொச்சிக்குப் பயணம் செய்த வெளிநாட்டுப் பிரமுகர்களின் பாதுகாப்பிற்காக அங்குள்ள உயர்ரக விடுதிகளில் காவலுக்கு நின்ற ஆயுதம் தாங்கிய தமிழீழ காவல்துறை சிறப்பு அதிரடிப் படை வீரர்களை அவர் நினைவூட்டிக் கொண்டிருந்தார்.

எனக்கு முதலில் குழப்பமாக இருந்தது. இந்த ஆயுதம் ஏந்திய நபர் யார்? இவர் குர்தி காவல்துறை வீரரா? அப்படியாயின் இவர் அணிந்திருக்கும் சீருடை தமிழீழ காவல் துறையின் சீருடையைப் போன்று இருப்பதன் காரணம் என்ன? ஆனால் அதுபற்றி அவ்விடத்தில் கேட்டறிந்து கொள்வதற்குப் போதிய அவகாசம் இருக்கவில்லை. தவிர அதிகாலை வேளையாதலால் அனைவரும் அரைகுறை உறக்கத்தில் இருந்தார்கள்.

நான்கு மணிநேர உறக்கத்திற்குப் பின்னர் காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டு காலை 9:00 மணியவில் விடுதியின் வாயில் சுலைமானி பல்கலைக் கழகத்தில் குர்தி அரசறிவியலாளர்களும், பன்னாட்டு அரசறிவியலாளர்களும் சந்தித்துக் கலந்துரையாடுவதாக ஏற்பாடாகியிருந்ததால், அங்கு செல்லும் பொழுது அல்லது அங்கு சென்றடைந்ததும் இதைப் பற்றிக் கேட்டறிந்து கொள்ளலாம் என்று முடிவு செய்தேன். ஆகூழ் எனது பக்கம் இருந்தது.

என்னுடன் கூடப் பயணித்த கலாநிதி நிக்கொலா சாலி அஸ்ரப், தமிழர்களின் விடுதலைப் போராட்டம் பற்றி விளக்கமாகக் கேட்டார். இதுதான் சந்தர்ப்பம் என்று நான் அவரிடம் வினவினேன்: "உங்கள் காவல்துறையினர் என்ன நிறத்திலான சீருடை அணிவார்கள்?" அதற்கு அவர், குர்தி காவல்துறையில் பல பிரிவுகள் இருப்பதையும், பெரும்பாலான பிரிவினர் மென்பச்சை நிற சீருடையை அணிந்தாலும், சில பிரிவினர் நீல நிறச் சீருடைகளையும் அணிவார்கள் என்றும் விளக்கமளித்தார்.

இப்பொழுது எமது பேச்சு சுலைமானி பல்கலைக் கழகத்தின் பக்கம் திரும்பியது.

# இனவழிப்பின் நினைவாலயமாகிய சுலைமாணி பல்கலைக்கழகம்



மீண்டும் நாம் கூடிய பொழுது பார்த்தேன்: அதிகாலை நான் கண்ட ஆயுதம் தாங்கிய நீலநிறச் சீருடை அணிந்தவர் அங்கு இல்லை. அவருக்குப் பதிலாக மென்பச்சை சீருடை அணிந்த இன்னுமொரு ஆயுதம் தாங்கிய வீரர் நின்றிருந்தார்.

எனக்கு இப்பொழுது இன்னும் குழப்பம். வேதாளத்தின் கதையைக் கேட்டு அதற்குப் பதில்கூறாது விட்டால் மண்டை வெடித்து விடும் நிலையில் இருந்த விக்கிரமாதித்தனின் நிலைபோலவே எனது நிலையும். ஆனாலும் இதுபற்றி எப்படியாவது கேட்டறிந்து கொள்வது என்று முடிவெடுத்தேன்.

குர்திஸ்தான் தனியரசுக்கான வாக்கெடுப்பு தொடர்பாக காலை 10:00 மணியளவில் நாம் போய்க் கொண்டிருந்த பாதையின் இடதுபுறத்தில் இருந்த மலையோரத்தில் தென்பட்ட பிரமாண்டமான கட்டிடங்களைக் காண்பித்து அவை பற்றி எனக்கு நிக்கொலா விளக்கமளித்துக் கொண்டிருந்தார்.

மேலைத்தேய நாடொன்றில் கல்வி கற்றவன் என்ற வகையில், மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள சுலைமானி பல்கலைக் கழகத்தைப் பற்றி என்னிடம் முதலில் அவ்வளவு உயர்வான அபிப்பிராயம் இருக்கவில்லை.

ஆனால் மலையோரப் பகுதியில் தென்பட்ட பிரமாண்டமான கட்டிடங்களைப் பற்றி என்னிடம் நிக்கொலா விளக்கிக் கூறிய பொழுது, என்னால் அவர் கூறியதை நம்ப முடியவில்லை.

தொடர்ச்சி 17ம் பக்கம்

**மலையோரப் பகுதியில் தென்பட்ட பிரமாண்டமான கட்டிடங்களைப் பற்றி என்னிடம் நிக்கொலா விளக்கிக் கூறிய பொழுது, என்னால் அவர் கூறியதை நம்ப முடியவில்லை. ஆம்: அவர் காண்பித்த பிரமாண்டமான கட்டிடம் சுலைமானி பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பிக்கும் விரிவுரையாளர்களுக்கான தங்குமிடங்கள்.**



## முதல் வித்துக்கள்



முதல் வீரச்சாவடைந்த போராளி
**லெப்.சங்கர்**
வீரச்சாவு : 27.11.1982



முதல் கரும்புலி
**கப்டன் மில்லர்**
வீரச்சாவு : 05.07.1987



முதல் பெண் மாவீரர்
**2ம் லெப்.மாலதி**
வீரச்சாவு : 10.10.1987



முதல் பெண் கரும்புலி
**கப்டன் அங்கயற்கண்ணி**
வீரச்சாவு : 16.08.1996



## தமிழீழ மாவீரர் நாள் போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்

எமது தாயகமாம் தமிழீழ நாட்டின் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கியமானதாகும்.

மாவீரர் நாள் என்பது தமிழீழ விடிவிற்காகவும், உயர்விற்காகவும் உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈந்து இந்த மண்ணுக்கே உரமாகிவிட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்து கலந்து விட்டவர்களினது மாகிய நினைவு நாளாகும்.

உங்கள் உயிலும் மேலான குழந்தைகளும், எமது சக போராளிகளுமான இம் மாவீரர்களின் தியாகம் அவர்களின் உணர்வுகள், இலட்சியதாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகும். புனிதத் தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்பட வேண்டியவையாகும். இம் மாவீரர்களின் நினைவுகள் என்றும் எம்மை வழிநடத்தும் உந்து சக்தியாக இருக்கும். மாவீரர்களது இத்தகைய நினைவுகூரல் என்பது ஒரு நிகழ்வாக மட்டும் இருந்து விடாது எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும் பண்பாட்டிற்குரியவையாகவும் வளர்ந்து வர வேண்டும்.

இதனைத் தத்துவார்த்தமாகவும் வளர்த்து வர வேண்டும்.

*(மாவீரர் பணிமனை 2008ல் வெளியிட்டுள்ள மாவீரர்நாள் தொடர்பான செய்திக்குறிப்பில்...)*



# புதிய மொந்தையில் பழைய சிங்களக் கள்!



**பழ.நெடுமாறன்**

இலங்கையில் இனப் பிரச்னையைத் தீர்க்கும் வகையில் புதிய அரசியல் யாப்புச் சட்டம் வகுக்கப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமை ஆணையமும் மற்றும் பல் வேறு நாடுகள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக கடந்த 2016-ஆம் ஆண்டு மார்ச் 9-ஆம் நாளில் அரசியல் யாப்பு அவையை அமைக்கும் தீர்மானமும் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதே ஆண்டு ஏப்ரல் 5-ஆம் திகதி அரசியல் யாப்பு அவை கூடி அரசியல் யாப்பு வழிகாட்டும் குழு ஒன்றை தலைமையமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைத்தது.

கிட்டத்தட்ட 18 மாதங்கள் கழித்து இக்குழு வெளியிட்ட அரசியல் யாப்பின் நகல் தமிழர்களின் உரிமைகளைச் சிறிதளவுகூட ஏற்கவில்லை. அரசியல் சட்டம் பிரிவு 1 மற்றும் 2 ஆகியவற்றில் 'இலங்கை என்றென்றும் பிரிக்கப்பட முடியாத ஒரே நாடாகத் திகழும். பிரிவினையைத் தடுக்கும் பல சிறப்புப் பிரிவுகளும் இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கும். இந்தச் சட்டத்தை மாற்றவோ, திருத்தவோ நாடாளுமன்றத்திற்கு மட்டுமே அதிகாரம் உண்டு' என்று கூறப்பட்டுள்ளது.

எந்த நாட்டின் அரசியல் சட்டமாக இருந்தாலும் அது நீதியான மதிப்பீட்டிற்கு உட்பட்டதாகவே இருக்க வேண்டும். இந்த மதிப்பீடு காலப்போக்கில் மாற்றம் பெறக் கூடியதாகும். அதற்கேற்ப இச்சட்டம் நெகிழ்வுத் தன்மை கொண்டதாக வகுக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் இலங்கையின் அரசியல் யாப்புச் சட்டத்தின் நகலில் முன் மொழியப்பட்டுள்ளவை உலக சட்ட வரையறைகளுக்கே முற்றிலும் முரணானது.

தமிழர்கள் ஒரு தனித்துவ தேசிய இனத்தினர் என்பதையும், தமிழையும் சிங்களத்தோடு ஆட்சி மொழியாக்க வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொள்ளவே சிங்களர் மறுத்ததன் விளைவாகவே தமிழர்களின் தனிநாடு கோரிக்கை எழுந்தது என்பதே வரலாறாகும். புதிய அரசியல் யாப்பு நகலும், தமிழர்களை இரண்டாந்தர குடிமக்களாக்க முயலுகிறது.

அரசியல் சட்டம் இரண்டாவது அதிகாரம் பிரிவு 9, 'புத்த சமயத்திற்கு முதலிடம் அளிக்கப்படும். புத்த சாசனத்தை பாதுகாக்க வேண்டியதும் வளர்க்க வேண்டியதும் அரசாங்கத்தின் தலையாயக் கடமையாகும். அதே வேளையில் மற்ற சமயங்களும் மதிப்புடன் நடத்தப்படும்' எனக் கூறுகிறது.

இலங்கையின் அரச சமயமாக புத்த சமயம் அறிவிக்கப்பட்டதன் மூலம் அச்சமயத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே குடியரசுத் தலைவராகவும் தலைமையமைச்சராகவும் வர முடியும் என்பதும், இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் புத்த சமயத்தின் கோட்பாடுகளுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்பதும் எழுதப்படாத சட்டமாகும்.

இந்தியாவின் அரசியல் சட்டம், சமய சார்பற்ற நாடாக இந்தியாவை அறிவித்துள்ளது. எனவேதான் இந்தியாவில் சிறுபான்மைச் சமயங்களைச் சார்ந்த முசுலிம்கள் மூவரும், சீக்கியர் ஒருவரும் குடியரசுத் தலைவர்களாகவும், சீக்கியர் ஒருவர் தலைமையமைச்சராகவும் சனநாயக ரீதியில் வர முடிந்துள்ளது. ஆனால், இலங்கையில் பிற சமயங்களைச் சார்ந்தவர்கள் இந்த உயர் பதவிகளுக்கு ஒருபோதும் வரவே முடியாது.

31.10.2017 அன்று நாடாளுமன்றத்தில் புதிய அரசியல் யாப்பு வழிகாட்டும் குழு அளித்த இடைக்கால அறிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு இலங்கை அமைச்சரவையின் பேச்சாளரும், சுகாதாரத்துறை அமைச்சருமான ராஜித சேனாரத்ன பேசும்போது, 'புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படுகின்ற அனைத்துக் கட்டங்களிலும் புத்த பிக்குகளின் முறை

> **இதன் அடிப்படையில் இலங்கையின் அரசியல் யாப்புச் சட்டத்தின் நகலில் முன் மொழியப்பட்டுள்ளவை உலக சட்ட வரையறைகளுக்கே முற்றிலும் முரணானது.**

யற்ற தலையீடுகள்' இருந்து வருவதாகக் குற்றம் சாட்டினார். இலங்கை அரசியலில் புத்த பிக்குகளின் ஆதிக்கம் கையோங்கி இருப்பதற்கு இதைவிடச் சிறந்த சான்று தேவையில்லை.

அத்தியாயம் 2, 2ஆவது பிரிவின்படி, தமிழ் மக்களின் தாயகமாகக் கருதப்படும் வடக்கு - கிழக்கு மாநிலங்களின் இணைப்பு என்பது வாக்கெடுப்பின் மூலம் முடிவு செய்யப்படும். அல்லது இணைப்பே ஒருபோதும் கூடாது' என இருவேறு வகையாகக் கூறப்பட்டுள்ளது.

1987-ஆம் ஆண்டு இந்தியத் தலைமையமைச்சர் ராஜீவ் காந்தியும், இலங்கை குடியரசுத் தலைவர் ஜெயவர்த்தனாவும் செய்துகொண்ட உடன்பாட்டின்படி, வடக்கு - கிழக்கு மாநிலங்கள் இணைக்கப்பட்டு ஒரே மாநிலமாக ஆக்கப்பட்டது. இந்த உடன்பாட்டில் கூறப்பட்ட வேறுசில முக்கியப் பகுதிகளை இலங்கையின் அரசியல் யாப்புச் சட்டத்தில் இடம்பெறச் செய்வதற்காக 1988-ஆம் ஆண்டில் 13-ஆவது அரசியல் சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அதே நாளில் மாகாண சட்டப்பேரவைகள் அமைப்பதற்கான சட்டமும் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. சிறிய நாடான இலங்கையில் தமிழர்களுக்கு ஒரு மாநிலமும் சிங்களர்களுக்கு ஏழு மாநிலங்களும் ஆக மொத்தம் எட்டு மாநிலங்கள் அமைக்கப்பட்டன. சிங்களர்களுக்கு தனி மாநிலம் தேவையில்லை. இலங்கையின் மத்திய அரசே சிங்கள அரசாக விளங்கும்போது தனியாக ஏழு மாநில அரசுகள் வேண்டுமென்றே திட்டமிட்டு உருவாக்கப்பட்டன. தமிழர்களுக்கென்று தனியான ஒரு தீர்வை அளிக்க சிங்கள அரசு விரும்பவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

ஆனால், 2006-ஆம் ஆண்டு அக்டோபரில் ஜே.வி.பி. என்னும் சிங்கள தீவிரவாத அமைப்பு உச்சநீதிமன்றத்தில் 'நிருவாக உத்தரவு ஒன்றின் மூலமே வடக்கு - கிழக்கு மாநிலங்கள் இணைக்கப்பட்டன. அரசியல் சட்ட ஒப்புதல் இதற்கு இல்லை. எனவே, அரசியல் சட்டப்படி இது செல்லாது என வழக்குத் தொடுத்தது. அதை ஏற்று உச்சநீதிமன்றமும் இந்த இணைப்பு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற தீர்ப்பை வழங்கியது. இந்திய - இலங்கை உடன்பாட்டிற்கு எதிராக இவ்வாறு செய்யப்பட்டதை ஏன் என்று இந்திய அரசும் தட்டிக் கேட்கவில்லை.

புதிய அரசியல் யாப்பு நகலில் வாக்கெடுப்பின் மூலம் இரு மாநிலங்களும் இணைக்கப்பட வேண்டும் என்று கூறுவது பித்தலாட்டமாகும். ஏனென்றால், கிழக்கு மாநிலத்தில் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் அவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு விட்டது.

கிழக்கு மாநிலத்திலும், வடக்கு மாநிலத்திலும் தனித்தனியாக வாக்கெடுப்பு நடத்தப்படுமானால் கிழக்கு மாநிலத்தை ஒரு போதும் வடக்கு மாநிலத்துடன் இணைக்க முடியாது. இரு மாநிலங்களையும் இணைத்து வாக்கெடுப்பு நடத்தினால்தான் தமிழர்கள் வெற்றி பெற முடியும். எனவேதான் சிங்கள அரசு ஒவ்வொரு மாநிலத்திலும் தனித்தனியாக வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என வலியுறுத்துகிறது.

மேலும், சுமார் 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் இலங்கையில் தொடர்ந்து வாழ முடியாத சூழலில் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் வாக்களிப்பதற்கு வழியில்லை. எனவே இரு மாநில இணைப்பு என்பது ஒரு போதும் நடைபெற இயலாது.

அரசியல் சட்டத்தின் 3-ஆவது அத்தியாயத்தில் 17-ஆவது பிரிவின்படி, 'மாநில ஆட்சிக்குட்பட்ட நிலம், இராணுவத்தின் பயன்பாட்டிற்குத் தேவையென தலைமையமைச்சர் ஆலோசனை வழங்கினால், அதை ஏற்று குடியரசுத் தலைவரின் ஆணையின் மூலம் நிலத்தை எடுத்துக்கொள்ளலாம்' எனக் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் இராணுவத்தின் தேவைக்காகவோ அல்லது மத்திய அரசின் தேவைக்காகவோ நிலத்தைப் பறிக்க முடியாது.

தொடர்ச்சி 22ம் பக்கம்

# துரோகத்தினால் கைமாறும் மட்டக்களப்பு மாவட்டம்

நாட்டில் தற்போது வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு பலரும் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்துவரும் நிலையில், வடக்கு கிழக்கு தமிழர்களைப் பொறுத்தவரையில் என்றும் போலவே இன்றும் சிறீலங்கா அரசியல் பாடு இவ்வாறு இருக்கத்தக்கதாக தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் தலைவர்கள் சிறீலங்கா அரசாங்கத்தை உயர்த்திக் காட்டுவதற்காக, சிறீலங்காவின் பாதீட்டுக்கு கும்பிடுபோட்டு வரவேற்கின்றனர்.




பாதிட்டுத் திட்டத்தை மக்கள் அவதானிக்கின்றனர். எந்தொரு நன்மையும் அளிக்கப் போவதில்லை. மாறாக வாழ்க்கைச் சுமையும், மக்களின் படுகடனின் அளவையும் தான் அதிகரிக்கப் போகிறது என்பது மக்களின் கருத்தாகவுள்ளது.

சிறிலங்காவை ஆட்சி செய்யும் சிங்கள பேரினவாத சக்திகள் மக்களின் ஜனநாயகத்திற்கான கருத்துக்களை உள்வாங்காத வரைக்கும் மக்கள் நிம்மதியான வாழ்க்கை வாழ முடியாது. கடந்த காலத்தில் கொண்டு வரப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் மக்களை ஏமாற்றும் திட்டங்களை அறிமுகப்படுத்தியனர். ஆனால், நடைமுறையில் நாளாந்தம் பொருட்கள் சேவைகளுக்கான விலை மிகவும் வேகமாக அதிகரித்துக் கொண்டே சென்றன.

கொழும்பு அரசாங்கத்தின் பாதிட்டுத் திட்டத்தில் அரச ஊழியர்கள் பாதிப்படையாதுவிட்டாலும் அன்றாடம் கூலித்தொழில் செய்து வாழ்பவர்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கிய வண்ணம் உள்ளனர். ஒரு பக்கம் பொருட்களின் விலை அதிகரிப்பு, மறுபுறத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு மக்கள் முகங்கொடுக்கவேண்டியுள்ளது.

பல்லின மக்கள் வாழும் இலங்கைத் தீவில் மதம் சார்ந்த அரசியல் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதென்பது, இந்த நாட்டில் பெரும்பான்மை சிறுபான்மையினரை அடக்கிவைக்க வேண்டும் என்ற தீவிர வாதப் போக்கைக் காட்டுகிறது. தமிழர்களைப் பொறுத்தவரையில் இன்றைய நிலையில், வாழ்வா? சாவா? என்ற இரண்டுமில்லாத நிலையில் தமிழர் வாழ்நாளை செலவு செய்கின்றனர். மக்களின் நிலைப்

**இவர் வெளிநாட்டில் இருந்த காலங்களில் இரண்டரை ஆண்டு காலம் தமிழின எழுச்சி நடவடிக்கைகள் எதிலும் பங்குபற்றாது மறைந்து வாழ்ந்து கொண்டு அச்செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை எதிரிக்கு இனங்காட்டிக் கொடுத்துள்ளார். விநாயகமூர்த்தி முரளிதரன், பிள்ளையானுக்கும் சில முக்கியமான புலனாய்வு வேலைகளை செய்துவந்துள்ளார். அதற்கு வெகுமதியாக அவர் வெளிநாட்டிலிருந்து சிறீலங்கா வந்த போது சிறீலங்காவின் படைப் புலனாய்வாளர்கள் அவரை வரவேற்று அவரின் ஊரான வாழைச்சேனைக்கு பாதுகாப்பாக கொண்டு சேர்த்தனர்.**

'கிழக்கில் இருந்து' **எழுவான்**

தமிழர்களுக்கு தற்போது எழுந்துள்ள காணாமல்போன உறவுகள் பற்றிய தகவல்கள், சிறையில் வாடும் அரசியல் கைதிகள் பிரச்சினை, படையினரால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள காணிப் பிரச்சினை, மீள்குடியேற்ற பிரச்சினை என சொல்ல முடியாத அளவுக்கு பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் தமிழ் மக்களுக்கு ஆறுதல் கூறக் கூட ஆள்யில்லாத நிலையில் உள்ளூராட்சி தேர்தல் பற்றிய கருத்துக்கள் தற்போது சூடு பிடித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் இன்னும் மாற்றினத்தின் அடிமைகளாக வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு அரசியல் தலைவர்கள் எனக் கூறிக்கொள்ளும் சிலரினால் ஏற்பட்டுள்ளது. இது அரசியலில் ஆரம்பக்கட்டமாக இருந்தாலும் கிராம மட்டத்தில் ஒரு அரசியல் கட்சியின் பலத்தைத் தீர்மானிக்கும் தேர்தலாக இது கருதப்படும்.

2018ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் கட்சி சார்பாக வேட்பாளர் பெயர்ப் பட்டியல் போடும் நடவடிக்கை மும்முரமாக இடம்பெற்றுவரும் நிலையில், யானைக் கட்சியின் தலைமையில் போட்டிபோடும் தமிழ் தரப்பினர் மாற்றினத்தின் தலைமையின் கீழ் சென்ற தமிழர்களை அடமானம் வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக வடக்கு கிழக்கு இணைந்தால் இரத்த ஆறு ஓடும் என காத்தான்குடியைச் சேர்ந்த பிரதியமைச்சர் தெரிவிக்கின்றார், மாவட்டத்தின் ஐக்கிய தேசிய கட்சியின் பார்பாக போட்டியிடும் தமிழர் தரப்பு வேட்பாளர்களை மற்றொரு ஓட்டமாவடியைச் சேர்ந்த பிரதியமைச்சர் தெரிவு செய்கின்றார். இதனால் மாவட்டத்திலுள்ள தமிழ் மக்களின் எதிர்காலம் என்பது கேள்விக்குறியாகிவிட்டது.

இவ்வாறான மாற்றின அரசியல் தலைமையின் கீழ் அரசியல் தேவைக்காகச் சென்று தமிழர்களை வாக்குகளை அடமானம் வைக்க முன்வந்துள்ள முன்னாள் பிரதி அமைச்சரான கணேசமூர்த்தி மற்றும் மூச்சுக்கு முன்றுறு தடவை தேசியம் பற்றிப் பேசிய ஜெயானந்தமூர்த்தி போன்றவர்கள் பேரின வாத சக்திகளிடமும், மாற்றின தலைமைத் துவத்தின் கீழும் தமிழர்களை அடகுவைக்க நினைப்பதன் நோக்கம் என்ன? அரசாங்கத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் சம்பந்தன் தலைமையிலான உறுப்பினர்கள், தமிழ் மக்களுக்கு நடக்கும் அநியாயங்களை பார்த்துக் கொண்டு மௌனமாக இருக்கும் நிலையில், பேரினவாத சக்தி அதுவும், தமிழர்களின் போராட்டங்களை சிதைத்த கட்சிகளுடன் இணைந்து எதனைச் சாதிக்கப் போகின்றார்கள்.

தொடர்ச்சி 22ம் பக்கம்



## மாவட்ட ரீதியாக மாவீரர் எண்ணிக்கை

**27.11.1982 முதல் 20.11.2008 வரை**

**(விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வமான அறிக்கை)**

**யாழ் மாவட்டம்**
ஆண் - 5817
பெண் - 2127

**மட்டு, அம்பாறை மாவட்டம்**
ஆண் - 4649
பெண் - 495

**வன்னி மாவட்டம்**
ஆண் - 2629
பெண் - 1140

**திருமலை மாவட்டம்**
ஆண் - 1731
பெண் - 208

**முல்லைத்தீவு மாவட்டம்**
ஆண் - 1410
பெண் - 565

**மன்னார் மாவட்டம்**
ஆண் - 978
பெண் - 291

**வெளி மாவட்டங்கள்**
ஆண் - 282
பெண் - 68

**ஈரோஸ் மாவீரர்கள்**
ஆண் - 264
பெண் - 02
மொத்தம் - 266

**தனிக்குழு மாவீரர்கள்**
ஆண் - 10
மொத்தம் - 10

**மொத்தம்**
ஆண் - 17496
பெண் - 4894

**மொத்த மாவீரர்கள்**
22,390



# கணப்பொழு...

அந்த ஆனையிறவின் கட்டளை மையத்தில் இருந்து 180 மீற்றரில் தன்னால் முழுமையாகவே இயலாது போக மயக்கமடைந்த நிலையிலும் நிதானமாய். தனது சாச்சை கழற்றி தனது நெஞ்சில் வைக்கும்படி கூறவே எப்படியோ மனதைத் திடப்படுத்தி அதைக் கழற்றி on செய்யும்போதுஅதில்இருந்த இயங்கு நிலைத் தடையைக் கூறி அது இயங்காது எனக்கூறியபோது அவர் என்னால இனி வரேலாது உங்கட சாச்சைக் கழற்றி வையுங்கோ இதைக் கேட்டதும் நான் உறைந்தே போனேன், என்னோடு இருந்தவருக்கு எனது சாச்சையே வைப்பதா? என்னால் அதைப்பற்றி நினைக்கக் கூட முடியாமல் இருந்தது.அப்படிஎண்டால்இரண்டுபேருமே ஒண்டாக் கிடந்து சாச் இழுப்பம் என்று வேதனையோடு கூறி முடிக்கும் முன் அநியாயமாய் நாங்கள் சாகக்கூடாது. கெலிச்ச்சண்டையைப் போல நிறையச் செய்திட்டுத் தான் வீரச்சாவடைய வேண்டும். இஞ்ச நடந்த பிரச்சனையை ஒண்டும் விடாமல் கட்டாயம் போய்ச் சொல்லுங்கோ என இடைவிடாது சொல்லிக் கொண்டான். மீண்டும் மீண்டும் அதே போதனையும், அதே கட்டளையும் தான் என்ன செய்வது பெரும் வேதனையோடு எனது உடலோடு இருந்த சாச்சை கழற்றி அவர் சொன்னபடியே நெஞ்சில் வைத்து ஒரு பொத்தானை on பண்ணியபடி எஞ்சியிருந்த அவரின் இடது கையில் மற்றப் பொத்தானைக் கொடுத்த போது. மீண்டும் முன்னர் சொன்ன அதே போதனையும், கட்டளையும் அதனோடு இறுதியாய் தம்பி விமலநாதனிடம் சுகமாக இருக்கச் சொல்லுங்கோ கெதியாய் போங்கோ கெதியாய் போங்கோ.... இது தான் அவர் என்னிடம் மட்டுமல்ல அவர் உதடுகள் சொன்ன இறுதி வார்த்தையும்.

*30.01.1998 இயக்கச்சி - ஆனையிறவுப் படைத்தளத்தினுள் கரும்புலித் தாக்குதலுக்காகச் சென்ற அணியில் இடம்பெற்ற கரும்புலி மேஜர் அறிவுக்குமரனின் குறிப்பேட்டு வரிகளிவை. பல கரும்புலி நடவடிக்கைகளில் பங்கு கொண்டு அவற்றைக் கரும்வேங்கை என்ற பெயரில் வைரவரிகளாக்கிய மேஜர் அறிவுக்குமரன் 11.04.2000 அன்று திருகோணமலைக் கடற்பரப்பில் கடற்படையுடனான மோதலின் போது வீரச்சாவடைந்தார்.*



# அவலச் சாவுகளும்....

3 பிள்ளைகளின் தந்தையான 49 வயதுடைய கனகரட்னம் கோணேஸ்வரன் என்பவரே சடலமாக கண்டெடுக்கப்பட்டார். யாழ் சாவகச்சேரி சகலகலாவல்வி ஆரம்ப பாடசாலையின் ஆசிரியரான இவர், இரவு 9 மணியளவில் தனது வீட்டிலிருந்து வெளியே சென்றதாக அவரது மனைவி தெரிவித்துள்ளார். கோப்பாய் கைதடி வீதியில் உந்துருளி கிடப்பதைக் கண்ட பொது மக்கள் தகவல் வழங்கியதையடுத்து சடலம் கண்டெடுக்கப்பட்டது. இந்த சம்பவம் விபத்தா அல்லது கொலையா என்பது தொடர்பான விசாரணைகளை சிறீலங்காக் காவல்துறையினர் முன்னெடுத்துள்ளனர்.

### கார் மோதி இளம் குடும்பஸ்தர் பலி

அம்பாறை, திருக்கோவில் தம்பட்டை மதுபானசாலைக்கு முன்பாக கடந்த 7ம் திகதி சொகுசுக் காரொன்று மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார். பலியானவர், திருக்கோவில் 02 நாடிலடி வீதியில் வசிக்கும் பத்மநாதன் விக்னேஸ்வரன் (வயது 33) என அடையாளம் காணப்பட்டுள்ளார். குறித்த குடும்பஸ்தர், தம்பட்டை கடற்கரை பகுதியில் இருந்து மதுபானசாலை பக்கமாக வீதியைக் கடக்க முற்பட்ட வேளை, அக்கரைப்பற்றில் இருந்து பொத்துவில் நோக்கி வேகமாக வந்த கார், குடும்பஸ்தரை மோதித் தள்ளியதில், அவர் அவ்விடத்திலேயே பலியாகியுள்ளார். காரைக் கைப்பற்றியுள்ள சிறீலங்காக் காவல்துறையினர் சாரதியைத் தேடி வருகின்றனர்.

### கேணிக்குள் குதித்த மாணவன் பலி

தவறி விழுந்த அடையாள அட்டையை மீட்க கேணிக்குள் குதித்த மாணவன் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் மானிப்பாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது. மானிப்பாய் இந்துக் கல்லூரியில் க.பொ.த. சாதாரணதரத்தில் கல்வி கற்கும், மானிப்பாய் லோட்டன் வீதியை சேர்ந்த சூரியகுமார் புகனீதன் (வயது 16) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார். பாடசாலையில் பரீட்சை எழுதிவிட்டு நண்பர்களுடன் குறித்த மாணவன் வீட்டுக்கு சென்றுள்ளார். செல்லும் வழியில் பிள்ளையார் கோவில் கேணிக்கு அருகில் குறித்த மாணவனின் கொம்பாஸ் நிலத்தில் உள்ள வெள்ளத்தில் விழுந்துள்ளது. அதை எடுத்து உதறியபோது அருகில் இருந்த கேணிக்குள் மாணவனுடைய அடையாள அட்டை விழுந்துள்ளது. உடனடியாக குறித்த மாணவன் தனது அடையாள அட்டையை மீட்க கேணிக்குள் குதித்துள்ளார். அவருடன் சென்ற மாணவர்களில் இருவரும் அவரை காப்பாற்ற குதித்துள்ளனர். ஆனால் அவரை காப்பாற்ற முடியாமல் கேணியில் இருந்த கம்பியை பிடித்து மேலே வந்துள்ளனர். ஆனால் குறித்த மாணவன் நீச்சல் தெரியாத காரணத்தினால் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

### விபத்தில் இரு குழந்தைகளின் தந்தை பலி

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதி பெரியகல்லாற்றில் இடம்பெற்ற விபத்து சம்பவத்தில் காயடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இரண்டு குழந்தைகளின் தந்தை சிகிச்சை பலனின்று கடந்த 7ம் திகதி உயிரிழந்துள்ளார். மின்சார சபையில் கடமைபுரியும் பெரியகல்லாற்றை சேர்ந்த நடேசன் (37 வயது) என்பவரே குறித்த விபத்து சம்பவத்தில் உயிரிழந்தவராவார். அரச பேருந்து ஒன்று பயணிகளை ஏற்றுவதற்காக நிறுத்தியபோது, அதன் பின்னால் உந்துருளியில் நின்ற குறித்த நபர் மீது, அவருக்குப் பின்னால் வந்த வாகனம் ஒன்று மோதியதனாலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

### விபத்தில் ஏழு வயது சிறுவன் உயிரிழப்பு

வீதியைக் கடக்க முயன்ற சிறுவனை இ.போ.ச பேருந்தில் மோதுயதில் 7 வயது சிறுவன் உயிரிழந்த சம்பவம் ஒன்று திருகோணமலை –ஹொரவ்பொத்தானை பிரதான வீதி மஹதிவுல்வெவ குளத்துக்கு அருகில் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் சாவகச்சேரி மீசாலை பகுதியைச் சேர்ந்த நகுலன் தசுதரண் (வயது 7) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார். மேற்படி சிறுவன் வீதியை கடக்க முற்பட்டபோது வவுனியாவிலிருந்து திருமலை நோக்கி வந்த பேருந்தில் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

### மின்சாரம் தாக்கியதில் குடும்பப் பெண் உயிரிழப்பு

மின்சாரத்தாக்குதலுக்கு இலக்கான மகளைக் காப்பாற்ற முயன்ற தாய் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்த சோகச்சம்பவம் வடமராட்சி தும்பளைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் தும்பளை பருத்தித்துறையைச் சேர்ந்த குணராசா அம்பிகை (வயது 50) என்ற குடும்பப்பெண்ணே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார். தமது வீட்டில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டிக்கு கேபிள் வழங்குநர் மூலமே இணைப்பினைப் பெற்றுவந்துள்ளனர். இவ் இணைப்பினை மழை, இடி, மின்னல் காரணமாக இரவு துண்டித்து விட்டு மறுநாள் காலை இணைப்பு கொடுக்கப்பட்டது. உயிரிழந்த குடும்பப் பெண்ணின் மகள் இணைப்பினை வழங்க முற்பட்டபோது தொலைக்காட்சி கேபிள் இணைப்பின் மூலம் மின்சாரம் பாய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. மின்சாரம் மகளைத் தாக்கியதைக் கண்ட தாய் மகளைக் காப்பாற்றுவதற்காக ஓடிச்சென்று அவரைப் பிடித்துள்ளார். இதற்கிடையில் மின் தாக்குதலில் இருந்து மகள் தூக்கியெறியப்பட தாயார் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகிறது. உடனடியாக பருத்தித்துறை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது அவர் மரணமடைந்துள்ளார்.

### தவறி விழுந்த குடும்பப் பெண் உயிரிழப்பு

உந்துருளியில் இருந்து தவறிவிழுந்த குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். ஏழாலை தெற்கு மயிலங்காட்டைச் சேர்ந்த வ.சசிகலா (வயது 39) எனும் குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார். இச் சம்பவம் கடந்த 6ம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. குறித்த பெண் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்னால் கணவருடன் சென்று கொண்டிருக்கும் போது வீதிக்குக் குறுக்கே நாய் குறுக்கிட்டது. இதன்போது குறித்த பெண்ணின் கணவர் உந்துருளியை சடுதியாக நிறுத்த முற்பட்ட போது உந்துருளியின் பின்னால் இருந்த பெண் கீழே விழுந்து தலையில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

# வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

## உலகில் வணிகம் செய்வதற்குச் சிறந்த நாடு எது?

2018ம் ஆண்டில், உலகில் வணிகம் செய்வதற்குச் சிறந்த நாடுகளின் பட்டியலை உலக வங்கி வெளியிட்டுள்ளது. 190 நாடுகளின் இந்தப் பட்டியலில் நியூசிலாந்து முதலிடத்திலும், சிங்கப்பூர் இரண்டாவது இடத்திலும், டென்மார்க் மூன்றாவது இடத்திலும் உள்ளன. தென்கொரியா, ஹொங்கொங், அமெரிக்கா, பிரித்தானியா, நோர்வே, ஜோர்ஜியா, சுவீடன் ஆகிய நாடுகள் முதல் பத்து இடங்களையும் பிடித்துள்ளன. தெற்காசிய நாடுகளில், பூட்டான் 75வது இடத்திலும், இந்தியா 100வது இடத்திலும், நேபாளம் 105வது இடத்திலும், சிறீலங்கா 111வது இடத்திலும், மாலைதீவு 136வது இடத்திலும் உள்ளன.

## சீன நிறுவனத்தின் உலக சாதனை விற்பனை!

உலகின் பிரபலமான முன்னணி இணைய விற்பனை நிறுவனமான சீனாவின் அலிபாபா 3 நிமிடத்தில் 1.51 பில்லியன் டொலர்களுக்கு (10 பில்லியன் யுவான்) பொருட்களை விற்று உலக சாதனை படைத்துள்ளது. சீனாவில் 'சிங்கிள்ஸ் டே' (சீன மொழியில் கவுன்கன் ஜி) என்ற தினம் ஆண்டுதோறும் நவம்பர் 11ம் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த தினத்தில் சீன மக்கள் தாங்கள் தனிமையாக இருப்பதைநினைத்துபெருமை கொள்ளும் வகையில் அதனை சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள். இந்த தினத்தில் நண்பர்களுடன் இணைந்து பொருட்கள் வாங்குவது, விருந்தில் பங்கேற்பது என பல கொண்டாட்டங்கள் இடப்பெறும். இதனையொட்டி சீனாவின் பிரபல இணைய விற்பனை நிறுவனமான அலிபாபா நிறுவனம் சிறப்பு மற்றும் மலிவு விற்பனையை அறிவித்தது. இந்தச் சிறப்பு விற்பனை அறிவிக்கப்பட்டு மூன்று நிமிடத்தில் மட்டும் 1.51 பில்லியன் டொலர்கள் மதிப்பிலான பொருட்கள் ஆன்லைனில் விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது.



## 27 ஆண்டுகளின் பின் சவூதி – ஈராக் விமான சேவை

27 ஆண்டுகளுக்குப் பின்னர் சவூதி அரேபியாவிற்கும் ஈராக்கிற்கும் இடையே விமான சேவை தொடங்கியுள்ளது. ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் உசைன் 1990ம் ஆண்டு குவைத்தை ஆக்கிரமித்ததன் பின் சவூதி அரேபியா மற்றும் ஈராக்கிற்கு இடையில் விமானப் போக்குவரத்துகள் இடம்பெறவில்லை. எனினும், பிராந்தியத்தில் ஈரானின் செல்வாக்கை குறைப்பதற்காக, ஈராக்குடனான உறவை பலப்படுத்த சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் என்பன முயன்று வருகிறன. சவூதி அரேபியா மற்றும் ஈராக்கிற்கு இடையிலான அரார் எல்லைக் கடவையை 1990க்கும் பின் வர்த்தகத்திற்காக திறக்க இரு நாடுகளுக்கும் இடையில் கடந்த ஓகஸ்டில் உடன்பாடு எட்டப்பட்டது. இந் நிலையில், அரசுக்கு சொந்தமான சவூதி அரேபிய எயார்லைன்ஸ் விமான சேவை 27 ஆண்டுகளின் பின் கடந்த 30ம் திகதி தொடக்கம் ஈராக்கிற்கு வழக்கமான விமான பயணங்களை ஆரம்பித்துள்ளது. சவூதி ஜித்தா நகரில் இருந்து ஈராக்கின் பக்தாத் நகரில் வந்திறங்கிய முதல் விமானத்தில் சவுதியின் விமானத்துறை இயக்குனர் சலேஹ் பின் நாசர் அல் ஜஸ்ஸருடன் பயணிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் பயணித்திருந்தனர்.


## பில் கேட்சை மீண்டும் பின்தள்ளிய ஜெப் பெசோஸ்!

உலகின் முதல் பணக்காரர் ஆனார் ஜெப் பெசோஸ். நீண்ட காலமாக உலக பணக்காரர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருந்த மைக்ரோசாப்ட் நிறுவனர் பில் கேட்ஸ்–ஐ பின்னுக்கு தள்ளிய ஜெப் பெசோஸ் இரண்டாவது முறையாக உலகின் முதல் பணக்காரர் என்ற அந்தஸ்தை பெற்றுள்ளார். போர்ப்ஸ் வெளியிட்ட உலக பணக்காரர்கள் பட்டியலில் பெசோஸ் முதலிடம் பிடித்துள்ளார். அமேசான் நிறுவன பங்குகள் 8 சதவிகிதம் உயர்ந்து பெசோஸ் சொத்த மதிப்பு 700 கோடி அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது. மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் பங்குகளும் 7 சதவிகித உயர்வை எட்டிய நிலையில், பெசோஸ் மதிப்பு 9060 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது. பில் கேட்ஸ் மதிப்பு 9010 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது.

# சிறீலங்காவில் மடிந்த....

நிகழ்வுகளை நடாத்துவதில் எந்தச் சட்டச் சிக்கல்களும் இல்லை என்பது 2011 ஆம் ஆண்டில் உறுதியாகியதைத் தொடர்ந்து, தமிழீழ தேசிய நினைவெழுச்சி நாள் என்ற பெயர் கைவிடப்பட்டு, இப்பொழுது தமிழீழ தேசிய மாவீரர் நாள் என்ற பெயரே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆனால் சார்சல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குறித்த நினைவுத்தூபியில் 'கார்த்திகை 27 தமிழீழ தேசிய நினைவெழுச்சி நாள்' என்ற வாசகமே பொறிக்கப்பட்டுள்ளது. அதில் கார்த்திகை 27 மாவீரர் நாள் என்ற வாசகம் இல்லை.


தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers of Tamil Eelam

LTTE Headquarters
Tamil Eelam
27.11.2000

LTTE LEADER CALLS FOR UNCONDITIONAL NEGOTIATIONS
IN CORDIAL ENVIRONMENT OF PEACE AND NORMALCY

The leader of the Liberation Tigers of Tamil Eelam (LTTE) Mr. Velupillai Pirapaharan declared today that his organisation is prepared for unconditional peace talks with the Sri Lanka government but insisted on a process of de-escalation of war and the creation of a conducive climate of goodwill and normalcy in the Tamil homeland to facilitate the talks.

Enunciating the organisation's policy in his annual Heroes' Day speech the Tamil Tiger leader explained that by normalcy he meant the restoration of normal civilian life by removing the economic blockade and other restrictions imposed on the Tamil people.

தவிர, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதன்முதலாக வீரச்சாவைத் தழுவிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மாவீரர் லெப். சங்கர் அவர்கள். அதாவது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரராக லெப். சங்கர் திகழ்கின்றாரே தவிர, அவர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதலாவது மாவீரர் அல்ல. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் மாவீரரான தியாகி பொன்.சிவகுமாரனின் பெயர், தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர்களின் பட்டியலிலும் உள்ளது.

ஆனால் சார்சல் பகுதியில் உள்ள நினைவுத் தூபியிலோ, 'தமிழீழ விடுதலைப் போரில் 27.11. 1982 அன்று முதலாவது மாவீரனாக வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்டினன்ட் சங்கர்' என பொறிக்கப்பட்டுள்ளது. இது ஒரு மிகப்பெரும் வரலாற்றுத் தவறாகும்.

அது மட்டுமன்றி முதற்புலி மாவீரன் லெப்.சங்கரின் படம் தூபியில் பொறிக்கப்பட்டிருந்தாலும், அதில் காணப்படும் வாசகங்கள் அது உண்மையில் லெப்.சங்கர் அவர்களுக்கும், ஏனைய மாவீரர்களுக்குமா அமைக்கப்பட்டது? என்று கேள்வியெழுப்பும் வகையில் காணப்படுகின்றது.

அந்த வாசகங்கள் இவைதான்: 'தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும், இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட அனைத்து தமிழீழ மக்களையும், தமிழீழ விடுதலைப் போரின் போது மனிதநேயச் செயற்பாட்டில் இருந்த வேளை படுகொலை செய்யப்பட்ட அனைத்து மனிதநேயப் பணியாளர்களையும் நினைவுகொள்ளும் முகமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நினைவுத் தூபி.'

அதாவது மாவீரர் நாள் என்பதும், மாவீரர்களுக்கான நினைவாலயங்கள் என்பதும் அவர்களுக்கானவை மட்டுமே. இனவழிப்பிற்கு ஆளாகிய மக்களுக்கும், மனிதநேயப் பணியாளர்களுக்குமான நினைவுத் தூபிகளும், நினைவு நாட்களும் பிரத்தியேகமானவை. அப்படியிருக்கும் பொழுது மாவீரர்களுக்கான நினைவுத்தூபி என்று பொய்யுரைத்தவாறு, இவ்வாறான பொதுத் தூபி ஒன்றை உருவாக்கும் அவசியம் ஏன் ஏற்பட்டது?

இவைதான் போகட்டும். 'தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய போதிய வரலாற்று அறிவின்றி' இத் தூபியை சம்பந்தப்பட்டவர்கள் அமைத்தார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

ஆனால் தூபியில் பிரெஞ்சு மொழியில் காணப்படும் வாசகங்கள் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியும், மாவீரர்கள் பற்றிய தவறான வியாக்கியானங்களை பிரெஞ்சு மக்கள் மேற்கொள்ளும் வகையில் உள்ளன.

முதலாவதாக மாவீரர்கள் என்ற தமிழ்ச் சொற்பதத்திற்கு நிகராக மார்ற்ரேர்ஸ் (Martyr) என்ற பிரெஞ்சு - ஆங்கிலச் சொல் தூபியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மார்ற்ரேர்ஸ் என்பது கிறித்துவ மதத்திலும், இஸ்லாமிய மதத்திலும் தமது மத நம்பிக்கைக்காகப் போராடி மடிந்த வீரர்களையும், புனிதர்களையும் குறிக்கும் சொல்.

உலகளாவிய ரீதியில் கடந்த காலங்களில் போராடி மடிந்த கிறித்துவ மற்றும் இஸ்லாமிய சுதந்திரப் போராளிகளை மார்ற்ரேர்ஸ் என்று தான் அழைப்பார்கள். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் மாவீரர்கள் என்ற தமிழ்ச் சொற்பதத்திற்கான நிகர்ச் சொல்லாக மார்ற்ரேர்ஸ் என்ற சொற்பதமே பிரெஞ்சு-ஆங்கில மொழிகளில் தவறாகக் கையாளப்பட்டது. எனினும் இச்சொற்பதம் தவறானது என்று 1997ஆம் ஆண்டு ஏற்றுக் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை, அன்று முதல் மாவீரர்கள் என்ற தமிழ்ச் சொற்பதத்திற்கான மேலைத்தேய நிகர்ச்சொல்லாக ஹீரோஸ் (Heros) என்ற சொற்பதத்தையே கையாண்டு வந்தது. அதாவது 1997ஆம் ஆண்டிலிருந்து மார்ற்ரேர்ஸ் என்ற சொற்பதத்தை மாவீரர்கள் என்ற தமிழ்ச் சொற்பதத்திற்கான மேலைத்தேய நிகர்ச்சொல்லாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் கையாள்வதில்லை.



யதார்த்தம் இவ்விதமிருக்க, சார்சல் பகுதியில் உள்ள நினைவுத்தூபியில் உள்ள பிரெஞ்சு வாசகங்கள், 'சிறீலங்காவில் 27.11.1982 மடிந்த தமிழ் மதப் புனிதர்' என்று பொருள்படும் வகையில் லெப்.சங்கர் அவர்களை விழிக்கின்றன.

அது மட்டுமன்றி தமிழில் இனப்படுகொலை என்று எழுதப்பட்ட வாசகத்திற்கு நிகராக ஜெனொசைட் என்ற பிரெஞ்சு - ஆங்கிலச் சொல் குறித்த தூபியின் பிரெஞ்சு வாசகப் பகுதியில் இல்லை.

ஆக, புலி மறவர்களுக்காக, புலி மாவீரர்களுக்காக சார்சல் பகுதியில் அமைக்கப்பட்டதாக பரப்புரை செய்யப்படும் நினைவுத்தூபியானது உண்மையில் யாரை நினைவுகூர அமைக்கப்பட்டுள்ளது என்ற கேள்வியைத் தமிழ் மக்களிடையே எழுப்புவதோடு, இத்தூபியானது சிறீலங்காவில் மடிந்த தமிழ் மதப் புனிதர்களுக்கானதுதான் என்ற தோற்றப்பாட்டை பிரெஞ்சு மக்களிடையே ஏற்படுத்தும் வகையிலேயே அதிலுள்ள பிரெஞ்சு வாசகங்கள் காணப்படுகின்றன.

இது மிகவும் ஆபத்தானது.

# இனவழிப்பின் நினை....

ஆம்: அவர் காண்பித்த பிரமாண்டமான கட்டிடம் சுலைமானி பல்கலைக் கழகத்தில் கல்வி கற்பிக்கும் விரிவுரையாளர்களுக்கான தங்குமிடங்கள். அப்படியென்றால் சுலைமானி பல்கலைக் கழகம் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தேன்.

மீண்டும் நிக்கொலா கூறினார். குர்திஸ்தானில் மட்டுமன்றி முழு ஈராக்கிலும் முன்னணிப் பல்கலைக்கழகமாகத் திகழ்வது சுலைமானி பல்கலைக்கழகம். நாம் செல்ல இருப்பது சுலைமானியாவின் புறநகரப் பகுதியில் உள்ள அதன் ஒரு வளாகத்திற்குத்தான். அதன் ஏனைய வளாகங்கள் குர்திஸ்தானின் கணாக்கின், கல்லார், கலாப்ஜா, சம்சமால் ஆகிய நகரங்களில் இருக்கின்றன. இவ்வாறு நிக்கொலா கூறி முடித்ததும் எமது பேருந்து வீதியின் வலப்பக்கமாகத் திரும்பியது. ஆம், வளைவுபோல் அமைக்கப்பட்டிருந்த நுழைவாயில் ஒன்றின் ஊடாக சுலைமானி பல்கலைக் கழகத்தின் புதிய வளாகத்திற்குள் பேருந்து நுழைந்து கொண்டிருந்தது.

வாகனத்தில் இருந்து நாம் இறங்கியதுமே பல்கலைக் கழக வேந்தர் கலாநிதி றசா உசேன் அவர்களின் கட்டிடத் தொகுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு எம்மை அன்புடன் றசா உசேன் வரவேற்றார். அவரால் சரளமாக ஆங்கிலத்தில் உரையாட முடியாது. ஆனாலும் ஆங்கிலத்தில் புலமைத்துவம் பெற்ற ஒருவரை தனது அதிகாரபூர்வ மொழிபெயர்ப்பாளராக அவர் வைத்திருந்தார். றசா உசேன் அவர்கள் பேசப் பேச, அதனை அவரது மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்த்தார்.

1968ஆம் ஆண்டு குர்தி கல்விமானாகிய கலாநிதி மொகமட் பெக் அவர்களால் சுலைமானியாவில் உருவாக்கப்பட்ட சுலைமானி பல்கலைக் கழகம், சதாம் உசேனின் ஆட்சியில் 1981ஆம் ஆண்டு தடை செய்யப்பட்டு, அதற்கு மாற்றீடாக பிறிதொரு இடத்தில் சிறிய வளாகமாக முடக்கப்பட்டது.

எனினும் இதனை ஏற்றுக் கொள்ளாமல் சுலைமானியா நகரிலேயே தமது பல்கலைக் கழகத்தை குர்தி கல்விமான்கள் இயக்கிய பொழுது, அது ஈராக்கிய



படைகளின் திட்டமிட்ட வான்வழித் தாக்குதலுக்கு ஆளாகியது.

இவ்வாறு சுலைமானி பல்கலைக்கழக வேந்தர் தனது பல்கலைக் கழகத்தின் வரலாறு பற்றி விளக்கிக் கூறிக் கொண்டிருக்க எனக்கு தமிழீழத்தில் உள்ள பாடசாலைகள் மீது சிங்களப் படைகள் நிகழ்த்திய திட்டமிட்ட வான்வழித் தாக்குதல்களே நினைவில் வந்து அலைமோதின.

சுலைமானி பல்கலைக் கழகத்தின் வரலாறு பற்றி சிறிது நேரம் பேசிய றசா உசேன், வழமையான சிற்றுண்டி விருந்துபசாரம் நிறைவுற்றதும் பல்கலைக் கழகத்தைச் சுற்றிப் பார்க்க வருமாறு எம்மை அழைத்தார்.

அவரைப் பின்தொடர்ந்து சென்ற நாம், பல்கலைக்கழகத்தில் சுவரோவியங்களைக் கொண்ட பகுதி ஒன்றை சென்றடைந்தோம். அதில் குர்தி மக்களின் வீரம்செறிந்த விடுதலைப் போராட்ட வரலாற்றையும், குர்தி மக்களின் வீரத் தலைவர்கள், தளபதிகள், வீரர்களைச் சித்தரிக்கும் வகையிலான சுவரோவியங்கள் தீட்டப்பட்டிருந்ததையும் காண முடிந்தது. அது பற்றி றசா உசேன் அவர்களிடம் நான் கேட்ட பொழுது, குர்தி மக்களின் போராட்டம் பற்றி அவர் விளக்கினார். அத்தோடு தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றி அறிந்து கொள்வதிலும், இரு தேசங்களைப் பற்றிய ஒப்பீடுகளை மேற்கொள்வதிலும் றசா உசேன் ஆர்வம் காட்டினார்.

பின்னர் அங்கிருந்து இன்னொரு கட்டிடத் தொகுதி நோக்கி எம்மை றசா உசேன் அழைத்துச் சென்றார். அங்கும் சுவரோவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. ஆனால் முன்னர் நாம் கண்டதை விட சற்று வித்தியாசமான முறையில் அச் சுவரோவியங்கள் அமைந்திருந்தன.

அவற்றை உற்றுப் பார்த்தேன். நாகர்கோவில் பாடசாலை மீது 1995ஆம் ஆண்டு சிங்களப் படைகள் மேற்கொண்ட வான்வழித் தாக்குதலில் பாடசாலைக் கட்டிடம் இடியுண்டு, இடிபாடுகளுக்குள் இருந்து சிறுவர்களின் உடலங்கள் மீட்கப்பட்ட காணொளிக் காட்சிகளும், 2006 ஆம் ஆண்டு செஞ்சோலை வளாகம் மீது சிங்களப் படைகள் நிகழ்த்திய வான்வழித் தாக்குதலில் பலியான மாணவிகளின் உடலங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புகைப்படக் காட்சிகளும் என் மனதில் வந்து அலைமோதும் வகையில் அச் சுவரோவியங்கள் அமைந்திருந்தன.

ஆம் சந்தேகமே இல்லை: இடியுண்டு கிடந்த கட்டிடங்களையும், அவற்றுக்குள் ஆங்காங்கே சிக்கிக் கிடந்த உடலங்களையும் சுவரோவியமாகத் தீட்டியிருந்தார்கள். அப்பொழுது றசா உசேன் கூறினார்.

சுலைமானி பல்கலைக் கழகம் மீது 1981ஆம் ஆண்டு ஈராக்கிய படைகள் நிகழ்த்திய வான்வழித் தாக்குதல்களின் அழிவுக் காட்சிகள் அப்பொழுது புகைப்படங்களாகப் பதிவு செய்யப்படவில்லை என்றும், எனினும் அதன் கொடூரங்களை நேரில் கண்ணுற்றவர்கள் அவற்றை சுவரோவியமாகத் தீட்டிப் பின்னாளில் பதிவு செய்ததாகவும் றசா உசேன் கூறினார். ஆக ஒரு பல்கலைக்கழகமாக மட்டுமல்லாமல் இனவழிப்பின் நினைவாலயமாகவும் சுலைமானி பல்கலைக் கழகம் திகழ்வதை என்னால் உணர முடிந்தது.

குர்திஸ்தான் பயணம் தொடரும்...



## படையணிகளும் வீரச்சாவுகளும்

விடுதலைப் புலிகளின் படையணிகளில் அதிக போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட படையணியாக மாலதி படையணி விளங்குகின்றது. 1996 முதல் 2003 வரையான காலப் பகுதியில் மட்டும் இந்தப் படையணிசைச் சேர்ந்த 1117 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டிருக்கின்றார்கள்.

இதற்கு அடுத்த நிலையில் அதிக போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட படையணியாக சாள்ஸ் அன்ரனி படையணி விளங்குகின்றது. 1991 முதல் 2001 வரையான பத்தாண்டு காலப் பகுதியில் மட்டும் இந்தப் படையணியைச் சேர்ந்த 1051 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்தப் படையணிகளில் கரும்புலிப் போராளிகளும் உள்ளடங்கியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர் 2009 மே 18 வரை இவ்விரு படையணிகளும் களத்தில்நின்று போராடியிருக்கின்றன. எனவே இந்தப் படையணிகளின் வீரச்சாவுகள் மேலும் அதிகரித்து இந்த நிலைகளிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்.

இவற்றைவிட விடுதலைப் புலிகளின் ஏனைய படையணிகள்

- இம்ரான் பாண்டியன் படையணி.
- ஜெயந்தன் படையணி.
- கிட்டு பிரங்கிப் படையணி.
- குட்டிச்சிறி மோட்டார் படையணி.
- ராதா வான்காப்பு படையணி.
- சிறப்பு உந்துகணை செலுத்திப் படையணி
- விக்டர் கவச எதிர்ப்புப் படையணி.
- சோதியா சிறப்புப் படையணி.
- அன்பரசி படையணி.
- கங்கை அமரன் நீரடி நீச்சல் பிரிவு.
- அங்கயற்கண்ணி ஆழ்கடல் நீச்சல் அணி (பெண்கள்).
- சுலோஜன் ஆழ்கடல் நீரடி நீச்சல் அணி (ஆண்கள்).

இன்னும் பல...

## ஸ்ராசுபூர்க் நகரத்தில் நடைபெற்ற தமிழர் கலைவிழா!

தமிழீழ தாயகத்தில் நடைபெற்ற தமிழின அழிப்புப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் ஸ்ராஸ்பூர்க் தமிழ் இளையவர்களும் தமிழின உணர்வு மக்களும் இணைந்து 5வது தடவையாக நடாத்திய ஸ்ராஸ்பூர்க் மெனுவில் அமைந்துள்ள புனித போல் தேவாலைய மண்டபத்தில் கலைமாலை நிகழ்வு 29.10.2017 ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.





தாயகத்தில் மிகுந்த துன்பத்திற்கு மத்தியில் தினமும் உடற்காயங்களால் அவையவங்களை இழந்து வேதனைபட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கும், போராளிகளுக்கும் உதவும் இந்த மனிதநேயச் செயற்பாடு 5 வருடகாலமாக நடைபெற்று வருகின்றது.

## ஆர்ஜந்தேய் பிறங்கோ தமிழ்ச்சங்கத்தின் பொதுக்கூட்டம்!

05.11.2017 காலை 10.30 மணிக்கு தமிழ்ச்சோலை மண்டபத்தில் ஆர்ஜந்தேய் பிறங்கோ தமிழ்சங்க நிர்வாக உறுப்பினர்கள், தமிழ்ச்சோலைத்தலைமைப்பணிய உறுப்பினர்கள், தமிழர் ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர். கடந்த காலங்களில் பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள், வெற்றிப்பதக்கங்கள், வெற்றிக்கேடையங்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டன. மாணவர்களின் தமிழ்மொழிக்கல்வி பற்றியும் ஆர்ஜந்தேய் பிறங்கோ தமிழ்ச்சங்கத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் அதில் முக்கியமாக இளைய சமுகத்தினருடைய பங்களிப்பு எதிர்காலங்களில் எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் தெளிவு படுத்தியிருந்தனர்.



## பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு விடுக்கும் அறிவித்தல்!

எதிர்வரும் நவம்பர் 27, 2017 திங்கட்கிழமை இடம்பெறவுள்ள தமிழீழத் தேசிய மாவீரர் நாள் பிரான்சு நிகழ்வில் கலந்துகொள்ளும் ஊடகங்கள் வரும் 25.11.2017 சனிக்கிழமைக்கு முன்னதாகத் தமது விபரங்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பதிவுசெய்து எமது அனுமதியைப் பெற்ற ஊடகங்களே மாவீரர் நாள் மண்டபத்தினுள் அனுமதிக்கப்படுவர் என்பதையும் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ளமுடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*நன்றி!*
*பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - ஊடகப்பிரிவு*
*தொடர்பு இலக்கம் : 01 43 15 04 21*

## கேணல் பரிதியின் 5ம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு!

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பிரான்சின் பொறுப்பாளராக இருந்து வழிநடத்தி 08.11.2012 அன்று பரிசில் படுகொலை செய்யப்பட்ட கேணல் பரிதி அவர்களின் 5ம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு கடந்த 08.11.2017 அன்று காலை 9.00 மணிக்கு கேணல் பரிதி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் கேணல் பரிதி அவர்களின் பெற்றோரால் ஈகைச்சுடர் ஏற்றி மலர்வணக்கம் செலுத்தி ஆரம்பமானது .



தொடர்ந்து பகல் 11.00 மணிக்கு கேணல் பரிதி அவர்களின் கல்லறை அமைந்துள்ள பந்தனில் அவரின் கல்லறை மீது தமிழீழத் தேசியக் கொடி போர்த்தப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்றிருந்த ன.




இதேவேளை பகல் 15.00 மணிக்கு பிரான்சு மண்ணில் படுகொலை செய்யப்பட்ட கேணல் பரிதி, தழிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர் லெப.கேணல் நாதன், ஈழமுரசு பத்திரிகையின் நிறுவக ஆசிரியர் கப்டன் கஜன் ஆகியோரின் படுகொலைக்கு நீதி கேட்டு பிரான்சு பாராளுமன்றத்திற்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டம் இடம் பெற்றது.



# சவுதி – லெபனான் மோதல் தொடங்குமா?

## ஈரானுடனும் முறுகல் அதிகரிப்பு

உலகில் மிக அதிகளவான ஆயுதக் கொள்வனவில் முதலிடத்தில் இருக்கும் சவுதி அரேபியா, யேமன் மீது தொடர்ச்சியான தாக்குதலை நடத்திவருகின்றது. இந்நிலையில் லெபனானுக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையில் கடந்த சில நாட்களாக போர் மூளும் அபாயம் நிலவி வருகிறது. இதனால் உடனடியாக லெபனானில் இருக்கும் சவூதி அரேபிய மக்களை வெளியேற சொல்லி இருக்கிறது சவூதி அரசு.

ஏற்கனவே சவுதி அரேபியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஒரு பேட்டியில், லெபனான் அரசு சவுதி அரேபியா மீது போர் அறிவித்து இருப்பதாக அவர் கூறினார். லெபனானுக்கும், சவுதிக்கு இடையில் நடக்கும் இந்த பிரச்சனைக்கு மூலக்காரணம் ஈராக் தான் என கூறப்படுகிறது. லெபனானுக்கும், சவுதி அரேபியாவுக்கு இடையில் தற்போது உருவாகி இருக்கும் பிரச்சனைக்கு முதற் காரணம் சன்னி, ஷியா முஸ்லீம் பிரச்சனைதான். முதலில் ஈராக்கிற்கு, சவுதிக்கும் இடையில்தான் பிரச்சனை தொடங்கியது. சவூதி சன்னி நாடு, ஈராக் ஷியா நாடு. சவுதியில் இருக்கும் மெக்காவை பார்வையிட வரும் ஷியா முஸ்லிம்கள் சரியாக நடத்தப்படுவதில்லை என்பதில் தான் முதலில் பிரச்சனை தொடங்கியது. அதன்பின் அது அந்த பிராந்தியத்தில் யார் பெரிய கை என நிரூபிப்பதில் சென்று முடிந்து இருக்கிறது. லெபனான் பொதுவாகவே அமைதியான வெளியுறவுக் கொள்கையை கொண்ட நாடு. ஆனால் அந்த நாட்டில் சில நாட்களாக சன்னி முஸ்லிம்களின் எண்ணிக்கையைவிட ஷியா முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறது. சவுதியின் கட்டுப்பாட்டில் இருக்கும் நாட்டில் இப்படி நடப்பதால் சவுதி சில நாளாக லெபனான் மீது கோபத்தில் இருந்தது. மேலும் ஈராக் சில லெபனான் அதிகாரிகளுக்கு உதவியும் செய்து வந்தது.




சவுதியின் வெளியுறவுத்துறை அமைச்சர் தாமார் அல் சபான் தனியார் தொலைக்கட்சி ஒன்றிற்கு சில நாட்களுக்கு முன் பேட்டி அளித்தார். அப்போது அவர் லெபானின் முக்கிய இயக்கமான லெபனான் ஹிஸ்புல்லா இயக்கம் எங்கள் மீது போர் அறிவிக்க காத்து இருக்கிறது என்று கூறினார். மேலும் அவர் இது குறித்து பேசுகையில் லெபனான் அரசாங்கம் ஈராக்குடன் சேர்ந்து ஏற்கனவே எங்கள் மீதுபோர் நடவடிக்கைகளில் இறங்கிவிட்டதாககூறியுள்ளார்.

ஹிஸ்புல்லா இயக்கம் ஈராக்கின் குடையின் கீழ் லெபனானில் வாழும் பெரிய அரசியல் இயக்கம். கடந்த சில மாதங்களாக லெபனானில் நிறைய அரசியல் குழப்பங்கள் நடந்து வருகிறது. இதற்கெல்லாம் முக்கிய காரணமாக சவுதி அரேபியா இருப்பதாக கூறப்படுகிறது. லெபனானின் பிரதமர் சில நாட்களுக்கு முன்பு பதவி விலக்கியதற்கு கூட சவூதி அரேபியாதான் காரணம் என லெபனான் ஹிஸ்புல்லா இயக்கம் தெரிவித்து இருந்தது. இதன்காரணமாகவே ஹிஸ்புல்லாக்களுக்கும் சவுதிக்கும் முட்டலும் மோதலுமாக இருக்கிறது. முதலில் சிறிய அளவில் தொடங்கப்பட்ட இயக்கமான லெபனான் ஹிஸ்புல்லா இயக்கம் தற்போது பெரிய அளவில் வளர்ந்து இருக்கிறது. சிரியாவில் ஐஎஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில் பசார் அல் ஆசாத் படைகளுக்கு முக்கிய துணையாக இருப்பதும் இந்த ஹிஸ்புல்லாதான்.

இதேவேளை, சவுதி அரசால் வழிநடத்தப்பட்ட லெபனானின் முன்னால் பிரதமர் அல் ஹராரி அந்த இயக்கத்தின் வளர்ச்சியை கட்டுப்படுத்த தவறி விட்டார். மேலும் அவர் அந்த இயக்கம் குறித்த போதிய எச்சரிக்கையை சவுதிக்கு தரவில்லை என்று கூறப்படுகிறது. இதையடுத்தே அவர் ஈராக் சென்றிருந்த நிலையில் அங்கிருந்து தனது பதவி விலககலை அறிவித்தார். அழுத்தம் காரணமாக அவர் பதவியில் இருந்து விலகியதாகக் கூறப்பட்டது. லெபனானின் பலம் வாய்ந்த ஹிஸ்புல்லா ஷியா அமைப்பின் தலைவர் ஹாசன் நஸ்ரல்லாவும், சவுதி அரசு கட்டாயப்படுத்தியதால்தான் லெபனான் அமைச்சர் பதவி விலகியுள்ளதாகக் கூறியுள்ளார். அதோடு, லெபனானுக்கு எதிராக சவுதி அரசு, போர் அறிவித்துள்ளதாகவும் அமைச்சரின் விருப்பத்திற்கு மாறாக அவரை பிடித்து வைத்துள்ளதாகவும் குற்றம்சாட்டியுள்ளார். அதோடு லெபனானுக்கு எதிராக இஸ்ரேலை தூண்டுவதாகவும், இது ஆபத்தானது என்றும் கூறியுள்ளார்.

இந்த நிலையில் சவுதி அரசின் வெளியுறவுத்துறை புதிய அறிவுப்பு ஒன்றை வெளியிட்டு இருக்கிறது. அதில் லெபனானில் இருக்கும் சவூதி மக்களும், சன்னி முஸ்லிம்களும் உடனடியாக வெளியேறுங்கள். சவுதிக்கு திரும்பி வந்துவிடுங்கள். போர் நடக்க இருக்கிறது. அந்த நாட்டில் நீங்கள் எப்போது வேண்டுமானாலும் தாக்கப்படலாம் என்று கூறியிருக்கிறது. இதன் காரணமாக போர் புயல் சின்னம் அந்த பிராந்தியத்தில் வலுப்பெற்று இருக்கிறது.

இதற்கிடையே, யேமனில் 2015ம் ஆண்டு முதல் சன்னி பிரிவை சேர்ந்த ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கும், ஷியா பிரிவை சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சி படைக்கும் இடையே உள்நாட்டு போர் நடந்து வருகிறது. ஜனாதிபதிக்கு சவுதி அரேபியாவும், ஹவுத்தி படைக்கு ஈரானும் ஆதரவளித்து வருகிறது. ஹவுத்தி படையை குறிவைத்து சவுதி தாக்குதல் நடத்தி வரும் நிலையில், சமீபத்தில் ரியாத் விமான நிலையத்தை குறிவைத்து பாலிஸ்டிக் ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டது. ஹவுத்தி படையின் இத்தாக்குதலுக்கு ஈரான் உதவி செய்ததாக சவுதி அரேபியா குற்றம்சாட்டியது. மேலும் எங்கள் நாட்டின் மீது தொடுக்கப்பட்ட போராகவே கருதுகிறோம். இதன்படி ஈரான் மீது போர் தொடுக்க தயங்கமாட்டோம் என சவுதி எச்சரித்தது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவ்ஹானி, ஈரானின் வலிமை பற்றி உங்களுக்கு நன்றாகவே தெரியம். எங்களை ஒன்றும் செய்ய இயலாது. அமெரிக்காவும், அதன் நட்பு நாடுகளும் ஒன்று திரண்டுள்ளனர். எங்களுக்கு எதிராக அவர்களால் ஒன்று சாதிக்க முடியவில்லை என தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே யேமன் நாட்டு எல்லைகளை சவுதி அரேபியா மூடியுள்ளது பேரழிவை ஏற்படுத்தும் என ஐ.நா. எச்சரித்துள்ளது.

# நோயாளிகளை மருத்துவர்கள் சோதனையிடுவது எவ்வளவு நேரம்?

உலகில் மருத்துவர்களிடம் செல்லும் நோயாளிகளை எவ்வளவு நேரம் மருத்துவர்கள் சோதனையிடுகின்றார்கள்? இது நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. மருத்துவர்கள் எவ்வளவு நேரம் சோதனை செய்கிறார்கள் என்பது தொடர்பாக 67 நாடுகளில் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. இதை அடிப்படையாக கொண்டு, பிரித்தானிய மருத்துவ இதழ் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ள அம்சங்கள்: சுவீடனில் அதிகபட்சமாக 22.5 நிமிடங்கள் ஒரு நோயாளியை மருத்துவர் சோதனையிடுகின்றார்.



அதேவேளை, வங்காளதேசத்தில் இருப்பதிலேயே மிகவும் குறைந்தப்பட்சமாக 48 நொடிகளே ஒரு நோயாளியை சோதனையிடுகின்றனர். பாகிஸ்தானில் 1.3 நிமிடங்களிலும் மருத்துவர்கள் தங்கள் பரிசோதனையை முடித்து விடுகின்றனர். இதுவே சீனாவிலும் இந்தியாவிலும் 2 நிமிடங்கள், சிங்கப்பூரில் 9.3 நிமிடங்கள் என்ற அளவில் உள்ளது. சுவீடன், நோர்வே, அமெரிக்கா நாடுகளில்தான் 20 நிமிடங்களுக்கு அதிகமாக நோயாளிகளை மருத்துவர்கள் சோதனையிடுகின்றனர். அதேநேரம், வளர்ந்த நாடுகளில் மருத்துவர்களின் சராசரி ஆலோசனை நேரம் அதிகரித்து வருவதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

அதே நேரம், குறைந்த வருவாய் அல்லது நடுத்தர வருவாய் உள்ள நாடுகளில் மருத்துவர்களின் ஆலோசனை நேரம் குறைந்து வருகிறது. இதற்கு மக்கள் தொகை பெருக்கம் மற்றும் அதிகரித்து வரும் சிகிச்சை முறைகளே காரணம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சர்வதேச நீதிமன்ற நீதிபதி பதவி இந்தியர் – பிரித்தானியர் இடையே கடும்போட்டி!

சர்வதேச நீதிமன்ற நீதிபதி பதவிக்கு இந்தியாவின் தல்வீர் பண்டாரிக்கும், பிரித்தானியாவின் கிறிஸ்தோபர் கிரீன்வுட்டுக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. நெதர்லாந்தின் தி ஹேக் நகரில் செயல்பட்டு வரும் சர்வதேச நீதிமன்றத்தில் மொத்தம் 15 நீதிபதிகள் பணியாற்றி வருகின்றனர். இதில் ஒவ்வொரு 3 ஆண்டுக்கு ஒருமுறை 5 நீதிபதிகள் சுழற்சி முறையில் புதிதாகத் தேர்வு செய்யப்படுவார்கள்.

ஐ.நா. பொதுச் சபையில் உள்ள 193 உறுப்பு நாடுகளும், ஐ.நா. பாதுகாப்பு சபையில் உள்ள 15 நாடுகளும் வாக்களித்து இந்த நீதிபதிகளைத் தேர்வு செய்வார்கள். ஐ.நா. பொது சபையில் 97 உறுப்பு நாடுகளின் வாக்குகளையும், பாதுகாப்பு சபையில் 8 உறுப்பு நாடுகளின் வாக்குகளையும் ஒரே நேரத்தில் பெறுபவர்கள்தான் சர்வதேச நீதிமன்றத்துக்கு நீதிபதியாகத் தேர்வு செய்யப்படுவார்கள்.

ஏற்கெனவே நான்கு சுற்றுகளாக நடைபெற்ற தேர்தலில் பிரான்ஸ், சோமாலியா, லெபனான், பிரேசில் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகள் தேர்வு செய்யப்பட்டு விட்டனர். இறுதியாக இந்தியாவின் பண்டாரிக்கும், பிரித்தானியாவின் கிறிஸ்தோபருக்கும் இடையே ஐ.நா. பொதுச் சபையில் நடைபெற்ற வாக்கெடுப்பில் பண்டாரிக்கு ஆதரவாக 115 வாக்குகளும், கிறிஸ்தோபருக்கு ஆதரவாக 76 வாக்குகளும் கிடைத்தன. அதே நேரத்தில் ஐ.நா. பாதுகாப்பு சபையில் கிறிஸ்தோபருக்கு 9 வாக்குகளும், பண்டாரிக்கு 6 வாக்குகளும் மட்டுமே கிடைத்தன. இரு அவையிலும் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுபவர்தான் வெற்றி பெற முடியும் என்பதால் அடுத்த சுற்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. தல்வீர் பண்டாரி,



# கார்த்திகைப் பூக்கள்

கல்லறை மீது காவியம் பாடும்
கார்த்திகை மாதப் பூக்களே
உள்ளறம் கூறி நம்மினம் மீது
நாட்டியம் ஆடு பூக்களே

தீபங்கள் ஏந்தி சுடரொளி பரப்பி
கண்ணீர் மல்க நிற்கின்றோம் – உங்கள்
கனவுகளை காற்றில் பறக்கவிட்டு
உங்கள் முன் நாம் கற்றிறந்து நிற்போமா?

கண்ணை மூடி மண்ணின் மடியில்
மீளாத்துயில் கொண்டவரே
விண்ணைப்பிளந்து ஈழம் கிடைத்த சேதி
கல்லறை தட்டி ஒருநாள் சொல்வோமே

உலகறிந்த எங்கள் நிலை – பார் அறிந்தும்
பாராநிலை நாமறிவோம்
எந்த இடர் வந்த போதிலும்
இறுதிவரை நாம் கலையோம்

கல்லறைப் பூக்களே காத்திருங்கள்
வெற்றி வரலாம் பெரும் தோல்வி வரலாம்
வேங்கையினம் மீளாது – பதுங்கியிருந்து
பாயும் வரை வேங்கையினம் ஓயாது

கயவன் கையில் அன்னைமடி
கனகாலம் இருக்காது
காடையனின் காலுடைக்காமல்
எங்கள் அடுப்பு வேகாது

நம்பி இரு நம்பி இரு
நாளை கூட நடந்திடலாம்
தம்பி வரும் வேளை
ஈழம் கூட மலர்ந்திடலாம்.

***அல்வையூர் தாசன்***





## ஆசை

எல்லாமே ஏற்பாடாகிவிட்டது. அவன் புறப்பட்டுவிட்டான். இதற்கு முன்னரும் பலதடவை போய்ப் போய் வந்தவன்தான். ஆனால் இனி வரமாட்டான். வழியனுப்பி வைக்க வந்த தோழன், அவனது தோள்களை அணைத்துக் கூட்டி வந்து கொண்டிருந்தான்.

அழைத்துச் செல்லப்போகிறவரும், அனுப்பிவைக்க வந்த தோழர்களும் அருகிலே வந்து கொண்டிருந்தார்கள். இருந்தாற்போல அவனது நடையின் வேகம் சற்றுக் குறைந்தது. ஏனோ தெரியவில்லை, அவனது முகம் இறுகிக் கொண்டே போனது. கண்களில் நீர் திரையிட அவன் தயங்கினான்.

அவன் பின்னாலே திரும்பிப் பார்த்தான். அருகில் நின்ற தோழர்களைக் கடந்து வெகு தொலைவைப் பார்த்தான். விழிகளைப் பரப்பி ஏக்கத்தோடு பார்த்தான். திரும்பி திரும்பி பார்த்தான்.

'எல்லாவற்றுக்கும் தயாராகி சந்தோசமாக வந்தவன், ஏன் திடீரென இப்படி ஆகிப் போனான்..?'

இவன் நினைக்கும் போதே இவனிடமிருந்துமெல்லவிலகிக்கொண்டு, அருகிலிருந்த காட்டுத் துண்டுக்குள் அவன் போனான். போனவன் திரும்பி வந்தான். ஒரு சோர்வான நடை, நடை மட்டும்தான்.

தனது உடம்பில் படிந்திருந்த மண் புழுதியை தட்டிக் கொண்டு வந்தான். தனது உதடுகளிருந்த மண் புழுதியையும்.

தாயகத்துக்கு கடைசி முத்தம் கொடுத்து வணங்கி விட்டு அவன் வந்து கொண்டிருந்தான்.

கண்கள் சிவந்து கலங்கிப் போயிருந்தன. ஆனால் முகத்தில் தெளிவு தெரிந்தது. பார்வையில் உறுதி தெரிந்தது.

தோழர்களுக்கு மெய் சிலிர்த்தது. இப்போது அவனை புரிந்து கொள்ள முடியாததனால் எதுவும் அவனிடம் கேட்கவில்லை.

எல்லோரிடமும் விடை பெற்று திரும்பிப் பார்த்துக் கையசைத்து அவன் நடந்து கொண்டிருந்தான். நடந்துகொண்டு இருந்தவன் தோழர்களை விட்டு விலகி, சற்று எட்டத்திற்குப் போனதற்குப் பிறகு.... சட்டைப்பைக்குள்இருந்து எதையோ கிள்ளி எடுத்து, கையை விரித்துக் கூட்டிச் சென்று கொண்டிருந்தவரிடம் காட்டினானாம்!

அவர் விக்கித்துப் போனார்.

'இது எங்கட மண்... இனிமே ஒரு நாளும் எனக்கு இதைப் பார்க்கக் கிடைக்காது. அது தான்!'

*- உயிராயுதத்திலிருந்து*

உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர். முன்னதாக, 2012ம் ஆண்டு பண்டாரி முதல்முறையாக சர்வதேச நீதிமன்ற நீதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வத்திக்கானில் புகைக்குத் தடை

ரோம், வத்திக்கான் நகரில் சிகரெட் விற்பனைக்கு தடை விதித்து போப் ஆண்டவர் உத்தரவிட்டுள்ளார். கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் புனித தலமாக போற்றப்படுவது இத்தாலி நாட்டின் வத்திக்கான் நகரம். இங்கு சிகரெட் விற்பனைக்கு தடை விதித்து போப் ஆண்டவர் பிரான்சிஸ் உத்தரவிட்டுள்ளார். மக்களின் உடல்நலம் பாதிக்கும் செயலை இந்த புனித நகரம் ஒரு போதும் செய்யாது என்று இது தொடர்பாக வெளியிடப்பட்ட



செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது. புகை பிடிப்பதால் ஆண்டு தோறும் 70 இலட்சம் பேர் பலியாவதாக உலக சுகாதார நிறுவனம் சமீபத்தில் தெரிவித்திருந்தது.

இந்த தடை உத்தரவு அடுத்த ஆண்டு முதல் நடைமுறைக்கு வருகிறது. இதுகுறித்து வத்திக்கான் நகரின் செய்தி அலுவலக இயக்குனர் கிரெக் புர்கி கூறுகையில், மக்களின் உடல் நலத்தை பாதிக்கும் எந்த ஒரு செயலுக்கும் புனித நகரம் தனது பங்களிப்பை அளிக்காது. சிகரெட்டுகள் வத்திக்கான் நகரின் வருவாய் ஆதாரமாக இருப்பது உண்மைதான். ஆனால் மக்களின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் எந்த ஒரு வருவாயும் இலாபமாக இருக்காது என்றார்.

## மருத்துவர் தேர்வில் அதிக மதிப்பெண் வாங்கிய சீன ரோபோ!

சீனாவில் மருத்துவத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் ரோபோ வாங்கி உள்ளது, தேர்வில் மனிதர்களை தோற்கடித்தது. சீனாவில் மருத்துவர் ஆவதற்கான தகுதி தேர்வில் அந்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரோபோ அதிக மதிப்பெண்களை வாங்கி அசத்தி உள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சீனாவின் தொழிநுட்ப நிறுவனம் கைடலவநம மற்றும் சிங்குவா பல்கலைக் கழகம் இணைந்து தயாரித்த ரோபோ தேர்வில் 456





மதிப்பெண்களை பெற்று உள்ளது. தேர்வில் தேர்சி மதிப்பெண் 360 ஆகும். சீனாவில் இவ்வருடம் 530, 000 பேர் மருத்துவத்திற்கான தகுதி தேர்வை எழுதினர் என அந்நாட்டு செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. ரொபோ மாணவர்கள் போன்று தேர்வு எழுதுகின்றதா என்று அதனை தீவிரமாக அதிகாரிகள் கண்காணித்தார்கள். மனிதர்கள் போன்றே வழங்கப்பட்ட நேரத்தில் ரொபோவும் தேர்வில் பதிலளித்தது. இணைய வசதி மற்றும் சமிக்ஞை வசதியில் தொடர்பில் இல்லாமல் ரொபோ தேர்வை எழுதியுள்ளது. ரொபோ தேர்வு எதுதியதில் எந்த ஒரு மோசடியும் நேரிடவில்லை எனவும் விளக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரொபோ தன்னிச்சையாக படிப்பதிலும், பிரச்சனையை தீர்ப்பதிலும் தேர்ந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனைகள் மற்றும் வீடுகளில் வருங்காலங்களில் மருத்துவர்களுக்கு உதவியாக இந்த மருத்துவ ரொபோ பயன்படுத்தப்படும் எனவும் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. ஏன் மருத்துவர்களுக்குப் பதிலாக மருத்துவர்களாக ரொபோ மாறவேண்டியதுதானே என்ற கேள்விகளும் எழாமல் இல்லை.

# மீன்களை ஏமாற்றும் மீன்

சுவிட்சர்லாந்தை சேர்ந்த நிறுவனம் மீன்களிடம் பேசும் ரோபோ மீனைக் கண்டுபிடித்துள்ளது. ஜெனீவாவில் இயங்கும் அந்த நிறுவனம் பல வருட ஆராய்ச்சிக்கு பின் இதை நிகழ்த்தியுள்ளது. இந்த ரோபோ மிகவும் சிறியதாக மீன் வடிவத்திலேயே உள்ளது. மீன்களை எளிதில் ஏமாற்றும் வகையில் அது வடிவமைக்கப்பட்டுள்ளது. அதில் சூரிய ஒளி (சோலார்) மூலம் இயங்கும் இயந்திரங்கள் உள்ளன.

அவை மீன்களை போன்று அவற்றை நீந்த செய்யும் திறன் படைத்தவை. மேலும் அதில் உள்ள கருவி (டிரான்ஸ் மீற்றர்) தகவலை அனுப்பிக் கொண்டே இருக்கும். இந்த ரோபோ கடலுக்குள் சென்று தெரிவிக்கும் தகவல்களை மீன்களுக்கு புரியும்படி பேசும் திறன் படைத்தவை. அதன் மூலம் மீன்களை அதன் வழியில் இருந்து மாற்றவும், தேவையான இடங்களில் நிறைய மீன்களை ஒன்றாக சேர்க்கவும் முடியும். இது கடல் சார்ந்த ஆராய்ச்சிகளில் பெரிய மைக்கல்லாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. இது இன்னும் சில நாட்களில் பயன்பாட்டுக்கு வருகிறது. இதை சுவிட்சர்லாந்தை சேர்ந்த எல்.எஸ்.ஆர்.ஓ. நிறுவன விஞ்ஞானிகள் கடந்த 5 ஆண்டுகளாக முயற்சி செய்து உருவாக்கியுள்ளனர். கடல் சார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வந்த அந்த நிறுவனம் மீன்களுக்கு நண்பனாக இருக்கும் வகையிலும், மனிதர்களுக்கு உதவும் வகையிலும் ஒரு ரோபோவை உருவாக்க முடிவு செய்து இதை கண்டு பிடித்தனர்.



## பேஸ்புக்கில் 270 மில்லியன் போலிக் கணக்குகள்

உலகின் முன்னணி சமூக ஊடகங்களுள் ஒன்றான ஃபேஸ்புக்கில் உள்ள போலிக் கணக்குகளின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருவதாக அந்த நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது. அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யாவின் தலையீட்டுக்கு உதவியதாக ஃபேஸ்புக் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில், இந்தத் தகவல் மார்க் சக்கர்பெர்க் தலைமையிலான அந்த நிறுவனத்துக்குப் புதிய தலைவலியை ஏற்படுத்தியுள்ளது. உலக அளவில் 2.1 பில்லியன் பயனாளர்களைக் கொண்டு இயங்கிவரும் ஃபேஸ்புக் நிறுவனம், மூன்றாவது காலாண்டு குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில், போலிக் கணக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறித்து கவலை தெரிவித்துள்ள அந்த நிறுவனம், அதைத் தடுக்க பல்வேறு முயற்சிகளை எடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளது. அதன்படி ஃபேஸ்புக்கில் 270 மில்லியன் போலிக் கணக்குகள் செயல்படுவதாக அந்த நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளது. இது ஃபேஸ்புக்கின் மொத்தப் பயனாளர்கள் எண்ணிக்கையில் 2 முதல் 3 சதவிகிதம் ஆகும். மேலும், 10 சதவிகித கணக்குகள் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள பயனாளர்களின் மற்றொரு கணக்காக அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது.

## ஒபாமா நீதிபதியாகலாம்!

இரண்டுமுறை அமெரிக்க அதிபராக இருந்த முன்னாள் அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு நீதிபதி பதவி தேடி வந்துள்ளது. ஏற்கனவே சட்டப்பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த ஒபாமா தற்போது அவர் ஓய்வு பெற்று குடும்பத்தினர்களுடன் காலத்தை கழித்து வருகிறார். இந் நிலையில் ஒபாமா விரும்பினால் அவருக்கு நீதிபதி பதவி தர தயார் என இல்லினாய்ஸ் மாகாண அரசு அறிவித்துள்ளது. ஒரு நீதிபதிக்கு தேவையான அனைத்து தகுதிகளும் அவருக்கு இருப்பதால் அவருக்கு இந்த பதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் நீதிபதி பதவியை ஏற்பது குறித்து ஒபாமா இன்னும் முடிவு செய்யவில்லை என்று அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் கூறுகின்றன. நீதிபதி பதவியை ஏற்க அவர் ஒப்புக்கொண்டால் நீதிபதியாகும் முதல் முன்னாள் அதிபர் என்ற பெருமை அவருக்கு கிடைக்கும்.

## அரியவகை சிறுத்தை கண்டுபிடிப்பு

உலகின் மிகவும் அரியவகை உயிரினமான மேகவர்ணச் சிறுத்தைகள் மலேசிய காடுகளில் நீண்ட காலத்திற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேகத்திட்டுக்கள் போல் காட்சியளிக்கும் உரோமங்களை



கொண்ட மேகவர்ணச் சிறுத்தைகள், தென்கிழக்கு ஆசியாவில் சில நாடுகளிலும், இந்தியாவில் நாகாலாந்து மாநிலத்திலும் மட்டும் காணப்படும். தற்போது இவை அழிவின் விளிம்பில் உள்ளது. வேட்டையாடுதல் மற்றும் காடுகளை அழித்தல் காரணமாக இவ்வகை சிறுத்தைகள் உலகம் முழுவதும் தற்போது 700 மட்டுமே மிஞ்சியுள்ளன. இந்நிலையில் மலேசியாவின் டெரமாகட் வனப்பகுதியில் பெண் சிறுத்தை ஒன்றும் அதன் இரு குட்டிகளும் பாதை ஒன்றில் நடந்து செல்வதை வனஉயிரின நிழற்படக் கலைஞர் மைக்கேல் கார்டன் படம் பிடித்துள்ளார். பகல் நேரத்தில் இவ்வகை சிறுத்தைகளை காண்பது அதிலும் அதன் குட்டிகளோடு காண்பது என்பது மிகவும் அரிது என மைக்கேல் கார்டன் கூறியுள்ளார்.

# ஐ.எஸ். பயங்கரவாதிகளின் ஆட்டம் முடிவை நெருங்குகின்றதா?

லெபனானின் ஹிஸ்புல்லா ஆயுதக்குழுவால் தலைமை தாங்கப்பட்ட, சிரிய இராணுவமும் அதன் தோழமை நாடுகளும் சிரியாவிலுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதக் குழுவின் இறுதிக் கோட்டையையும், கடந்த 8ம் திகதி கைப்பற்றியுள்ளன என அக்கூட்டணியின் தளபதியொருவர் தெரிவித்தார். இதன்மூலம், ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதக் குழுவின் ஆட்சி, சிரியா மாதங்களாகத் தொடர்ந்திருந்தது. அதில், அபு கமல் பகுதி, பிரதான பகுதியாகக் கருதப்பட்டது.

இந்நிலையிலேயே, ஹிஸ்புல்லா குழுவின் தலைமையில், இதற்கான இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன் விளைவாக, அபு கமல் விடுவிக்கப்பட்டுள்ளது என, சிரிய அரச தொலைக்காட்சி அறிவித்தது. ஆனால், மோதல் அங்கு இன்னமும் நிறைவடையவில்லை எனவும், தொடர்ந்த வண்ணமே காணப்படுகிறது என, கண்காணிப்பு அமைப்பான, மனித உரிமைகளுக்கான சிரியக் கண்காணிப்பகம் தெரிவித்தது.



வெற்றி ஆட்டம்

முழுவதிலும் வீழ்த்தப்படும் நிலை உருவாகியுள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதக் குழுவின் இறுதிக் கோட்டையான அபு கமல், அக்குழுவிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது என சிரிய ஜனாதிபதி பசார் அல்–ஆசாத்துக்கு ஆதரவான இராணுவக் கூட்டணி தெரிவித்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதக் குழு, கிட்டத்தட்ட முழுவதுமாக அழிக்கப்பட்டுவிட்டது. இதற்கு முன்னர் 2015ல், உச்சநிலையில் காணப்பட்ட அக்குழு, ஈராக்கிலும் சிரியாவிலும், பெருமளவு பகுதிகளை ஆட்சி செய்தது. இரு நாட்டு எல்லைகளையும் தாண்டி ஆட்சி செய்த அக்குழு, எல்லைகளை இல்லாமல் செய்ததோடு, பணத்தையும் கடவுச்சீட்டையும் அச்சடித்திருந்தது. தமது சட்டங்களை நடைமுறைப்படுத்தியிருந்தது. அத்தோடு, உலகம் முழுவதிலும் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டு நடத்தியிருந்தது. ஆனால், அண்மைக்காலமாகத் தோல்விகளைச் சந்தித்துவரும் அக்குழு, சிறிய நிலப்பரப்பொன்றுக்குள் அடைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஈராக்கில், அநேகமாக எல்லா இடங்களிலிருந்தும் தோற்கடிக்கப்பட்டுள்ள அக்குழு, சிரியாவில் சிறியளவிலான இடங்களில் இன்னமும் காணப்படுகிறது. சிரியாவின் மத்திய, கிழக்குப் பகுதிகளில் உள்ள அவ்விடங்களிலிருந்து, அக்குழுவை விரட்டுவதற்கான ஆயுத நடவடிக்கை, கடந்த சில

அபு கமல் பகுதி, ஈராக்கிய எல்லைப் பகுதியில், யூப்பிரட்டீஸ் நதியின் கரைப் பகுதியில் அமைந்துள்ளது. இதைக் கைப்பற்றுவதற்கான மோதல் நடவடிக்கையில், ஹிஸ்புல்லா குழு ஈராக்குக்குள் நுழைந்தது எனவும், ஈராக்கின் ஆயுதக்குழு சிரியாவுக்குள் நுழைந்து, இந்நடவடிக்கைக்கு உதவி வழங்கியது எனவும், சிரிய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. அபு கமல் பகுதியிலிருந்து, ஐ.எஸ்.ஐ.எஸ் குழு முழுமையாக



அழிவடைந்த நகரம்

வெளியேற்றப்பட்டது என்பது உண்மையென்றாலும் கூட, அதற்கு அருகிலுள்ள பாலைவனப் பகுதியின் சில பகுதிகள், அருகிலுள்ள கிராமங்கள், நகரங்கள் ஆகியவற்றில், ஐ.எஸ்.ஐ.எஸ் குழு இன்னமும் காணப்படுகிறது என அறிவிக்கப்படுகிறது.

ஐ.எஸ்.ஐ.எஸ் குழு, இவ்வாறு தனது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து தோற்கடிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டாலும் கூட, ஈராக்கிலும் சிரியாவிலும், ஆங்காங்கே மறைந்திருந்து, தாக்குதல்களை நடத்திவருகிறது. அதேபோல், இணையத்தளங்களில் இன்னமும் பலமாக இருக்கும் அக்குழு, தாக்குதல் நடத்துவதற்காகத் தனிநபர்களைத் தூண்டிவிடும் பணியிலும் ஈடுபட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## 7வது முறையாக ஏஞ்சலா முதலிடம்!

உலக அளவில் சக்திவாய்ந்த பெண்கள் பட்டியலில் ஜேர்மனி சாஞ்சலர் ஏஞ்சலா மெர்கல் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார். உலக அளவில், அரசியல், தொழில், நிர்வாகம் என பல துறைகளில், சக்திவாய்ந்த பெண்களின் பட்டியலை ஒவ்வொரு ஆண்டும், அமெரிக்காவின், போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான பட்டியலை போர்ப்ஸ் பத்திரிக்கை வெளியிட்டுள்ளது.

உலக அளவில் சக்திவாய்ந்த பெண்கள் பட்டியலில் ஜேர்மனி சாஞ்சலர் ஏஞ்சலா மெர்கல் இந்த ஆண்டும் முதலிடத்தில் நீடிக்கிறார். தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக இந்தப் பட்டியலில் அவர் முதலிடம் வகிக்கிறார். 13 ஆண்டுகளாக சக்திவாய்ந்த பெண்கள் பட்டியலில் இடம்பெற்று வருகிறார்.

அவரைத் தொடர்ந்து பிரித்தானியப் பிரதமர் தெரஸா மே 2வது இடத்திலும், பில்கேட்ஸ் பவுண்டேஷன் தலைவர் மெலிண்டா கேட்ஸ் 3வது இடத்திலும், ஃபேஸ்புக் நிறுவனத்தின் ஷெரீல் சாண்ட்பெர்க் 4வது இடத்திலும் இடம் பெற்றுள்ளனர்.

ஜெனரல் மோட்டர்ஸ் நிறுவனத்தின் மேரி பாரா 5வது இடத்திலும் உள்ளனர். இதேபோல் அமெரிக்க அதிபர் டொனல்ட் ட்ரம்பின் மகள் இவாங்கா ட்ரம்ப் 19வது இடத்தைப் பிடித்துள்ளார். அமெரிக்காவில் வசிக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெப்ஸிகோ நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி இந்திரா நூயி 11வது இடத்தில் உள்ளார். அதேபோல் மற்றொரு அமெரிக்க வம்சாவளி பெண்ணான ஐ.நாவுக்கான அமெரிக்க தூதர் நிக்கி ஹாலே 43வது இடத்திலும் உள்ளார். இந்துஸ்தான் டைம்ஸ் ஊடக நிறுவனத்தின் தலைவர் சோபனா பார்ட்டியா 92வது இடத்திலும், இந்தி நடிகை பிரியங்கா சோப்ரா 97வது இடத்தையும் பிடித்துள்ளனர்.

## 80 வயது மகனை பராமரிக்கும் 98 வயதுத் தாய்!

பிரித்தானியாவின் லிவர்பூல் பகுதியில் அமைந்துள்ள ஆழளள ஏறைந முதியோர் இல்லத்தில் வசித்து வரும் தனது 80 வயது மகனை பராமரிக்கும் பொருட்டு 98 வயது தாயார் அதே முதியோர் இல்லத்தில் சென்று தங்கியுள்ளார். குறித்த முதியோர் இல்லத்தில் 2016ம்



ஆண்டில் இருந்து 80 வயதான டோம் வசித்து வருகிறார். இதுவரை திருமணம் செய்து கொள்ளாத டோமுக்கு தினமும் காலை வணக்கம் சொல்லவும், உணவு தயாரானதும் சென்று கூப்பிடவும், அவருக்கு யாரும் இல்லை என்பதால் தாம் இந்த முடிவை எடுத்துள்ளதாக Ada Keating என்ற டோமின் 98 வயது தாயார் தெரிவித்துள்ளார். எப்போதெல்லாம் தாம் வீட்டை விட்டு வெளியே செல்கின்றேனோ அப்போதெல்லாம் டோம் தமக்காக காத்திருந்ததாகவும், தாம் வீட்டுக்கு வந்த அந்த நொடி ஓடி வந்து தம்மை இறுக்கமாக அணைத்து அன்பை வெளிப்படுத்துவார் எனவும் வயோதிப தாய் நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார். முதியோர் இல்லத்தில் அனைவரும் தமது தாயாரை அன்புடன் கவனிப்பதாக கூறும் டோம், சமயங்களில் தமதுதாயார்தம்மைகண்டிப்பதாகவும்தெரிவித்துள்ளார்.

## ஒரே நாளில் 1,76,000 மின்னல்கள்

அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்தில் ஒரே நாளில் 176,000 மின்னல்கள் தோன்றியுள்ளது. அவுஸ்திரேலிய வானிலை ஆய்வு மையம் இதனை உறுதி செய்துள்ளது. அசாதாரண அளவில் மின்னல் தோன்றியதால் 4,000 வீடுகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



## மாவீரர் கண்ட கனவு ஒருநாள் நனவாகும்

தமிழீழத் தாய்நாட்டின் விடிவிற்காகத் தமது இன்னுயிரை ஈகம் செய்து, எமது இதயமெல்லாம் நிறைந்து நிற்கும் எம்முயிர் வீரர்களை நாம் நினைவு கூர்ந்து கௌரவிக்கும் புனித நாள். ஆண்டாண்டு காலமாக அந்நிய ஆதிக்கப் பிடிக்குள் அடங்கிக் கிடந்த எமது தேசத்தை, ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடிபணியாத அடங்கா மண்ணாக மாற்றிவிட்ட எமது வீரமறவர்களைப் பூசித்து வணங்கும் திருநாள்.

எமது தேசம் விடுதலை பெற்று, எமது மக்கள் சுதந்திரமாக, தன்மானத்துடன் வாழவேண்டும் என்ற சத்திய இலட்சியத்திற்காக மடிந்த எமது மான வீரர்களை எமது நெஞ்சப் பசுமையில் நிறுத்திக்கொள்ளும் தேசிய நாள். எமது மாவீரர்கள் இந்த மண்ணை ஆழமாக நேசித்தார்கள். தாயக விடுதலைக்காகத் தமது கண்களைத் திறந்த கணம் முதல் நிரந்தரமாக மூடிய கணம் வரை அவர்கள் புரிந்த தியாகங்கள் உலக வரலாற்றில் ஒப்பற்றவை. எந்த ஒரு தேசத்திலும் எந்த ஒரு காலத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புக்களை எமது மண்ணிலே எமது மண்ணுக்காக எமது மாவீரர்கள் புரிந்திருக்கிறார்கள்.

இந்த மண்ணிலேதான் எமது மாவீரர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தார்கள். இந்த மண்ணிலேதான் அவர்களது பாதச்சுவடுகள் பதிந்திருக்கின்றன. அவர்களது மூச்சுக்காற்றும் கலந்திருக்கிறது. இந்த மண்ணிலேதான் எமது இனம் காலாதிகாலமாக, கொப்பாட்டன், பாட்டன் என தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகிறது.

எமது இனச் சரித்திரம் நிலைபெற்ற இந்த மண்ணை ஆழமாகக் காதலித்து, இந்த மண்ணிற்காகவே மடிந்து, இந்த மண்ணின் மடியிலேயே எமது மாவீரர்கள் படுத்துறங்குகிறார்கள். அவர்கள் பள்ளி கொள்ளும் இந்த மண் எமக்கேயுரித்தான மண். எமக்கே சொந்தமான மண். இந்த வரலாற்று மண்ணை ஆக்கிரமித்து, அடக்கியாள சிங்களம் திமிர் கொண்டு நிற்கிறது. தீராத ஆசை கொண்டு நிற்கிறது.

மனித துயரங்களெல்லாம் அடங்காத, அருவருப்பான ஆசைகளிலிருந்தே பிறப்பெடுக்கின்றன. ஆசைகள் எல்லாம் அறியாமையிலிருந்தே தோற்றம் கொள்கின்றன. ஆசையின் பிடியிலிருந்து மீட்சி பெறாதவரை சோகத்தின் சுமையிலிருந்தும் விடுபட முடியாது. மண் ஆசை பிடித்து, சிங்களம் அழிவு நோக்கிய இராணுவப் பாதையிலே இறங்கியிருக்கிறது. உலகத்தையே திரட்டி வந்து எம்மோடு மோதுகிறது. இராணுவ வெற்றி பற்றிய கனவுலகில் வாழ்கிறது. சிங்களத்தின் இந்தக் கனவுகள் நிச்சயம் கலையும். எமது மாவீரர் கண்ட கனவு ஒருநாள் நனவாகும். இது திண்ணம்.

– தமிழீழத் தேசியத் தலைவர்
மாவீரர் நாள் 2008



## இது பவோலாவின் தாய் அல்ல, சந்திரனின் தாய்!

இந்திய இராணுவம் வெளியேறிய பின் ஒருநாள் வரி உடையுடன் சந்திரனைக் கண்டபோது (கப்டன் வெண்ணிலவன்) ஆச்சரியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. பயிற்சி எல்லாம் முடித்துவிட்டாயா என்று கேட்டபோது, பலாலி இந்திய இராணுவப் படைத்தளத்தில் உடற்பயிற்சி எல்லாம் முடிந்து, இப்போது ஆயுதப் பயிற்சியும் முடிந்துவிட்டது என்றான். இந்திய இராணுவத்தின் பலாலி சிறைக்குள் போராளிகள் தினமும் பயிற்சி பெற்றார்கள் என்பதை அவன் சொன்னபோது உண்மையில் புல்லரித்தது.

கப்டன் சந்திரனைப் பற்றி இங்கு சொல்லும்போது அவனது தாயைப் பற்றியும் இங்கு சொல்லியாக வேண்டும். சந்திரனின் தயாரை அறியாதவர்கள் அந்தக் கிராமத்தில் இருக்கமுடியாது. அவரின் நடையைப் பற்றி சொல்லித் தெரியவேண்டியதில்லை. அவர் நடக்கத் தொடங்கினால் அவரது நடைக்கு ஈடாக மற்றவர்களால் ஓடித்தான் செல்லமுடியும். அவ்வளவு வேகமாக நடப்பார். இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட சந்திரன், பலாலிப் படைத்தளத்தில் இருந்த இந்திய முகாம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அப்போது அவரைப் பார்ப்பதற்கு சந்திரனின் தாயார் அடிக்கடி செல்வார். இத்தனைக்கும் சுமார் 10 கிலோ மீற்றருக்கும் மேற்பட்ட அந்தத் தூரத்திற்கு அவர் நடந்துதான் செல்வார். பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தும் அளவிற்கு கூட அந்தப் பெற்றோரிடம் வசதியில்லை. ஆனால் தாயகத்தை நேசித்த ஒரு பிள்ளை அவர்களிடம் இருந்தது.

அந்த முகாமில் சந்திரனுடன் வேறும் சில முக்கிய போராளிகளும் சிறை வைக்கப்பட்டிருந்தார்கள். முகாமிற்கு அடிக்கடி செல்லும் சந்திரனின் தாயாரிடம் வெளியிலிருந்த போராளிகள் சில உதவிகள் கேட்டிருந்தார்கள். பிடிபட்டால் ஆபத்து என்பதை அறிந்தும், அந்த உதவியைச் செய்வதற்கு அந்தத் தாய் முன்வந்தார். சந்திரனுக்குக் கொண்டு போகும் சாப்பாட்டுப் பாசல்களின் பேப்பர்களிலும், சவர்க்காரங்களுக்குள் துளையிட்டு தேவையான விடயங்களும் முகாம் சிறைக்குச் சென்றடைந்தன. சிறைக்குள் இருந்த போராளிகளுக்கும் வெளியில் இருந்த போராளிகளுக்கும் இடையில் தகவல் பரிமாற்றங்கள் எந்தத் தங்குதடையுமின்றி நடந்ததற்கு சந்திரனின் தாயார் ஒரு முக்கிய காரணம்.

ரஷ்ய எழுத்தாளர் மார்ச்சிம் கார்க்கியின் 'தாய்' நாவலைப் படித்தபோது, அதில்வரும் பவோலாவின் தாயரைப் பற்றிப் படித்துக்கொண்டிருந்தபோது முதலில் என் நினைவுக்கு வந்தவர் சந்திரனின் தாயார்தான். இப்படி எத்தனையோ தாய்கள் எங்கள் மண்ணில் வாழ்ந்திருக்கின்றார்கள். இன்னமும் வாழ்கின்றார்கள்.

– நிலவன்

# 24 இளைஞர்கள் காணாமலாக்கப்பட்ட வழக்கு

## யாழ். மேல் நீதிமன்றில் ஆட்கொணர்வு மனு தாக்கல்

யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் 24 இளைஞர்கள் சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் யாழ். மேல் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆட்கொணர்வு மனு காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர்களின் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



1996ம் ஆண்டு நாவற்குழி மற்றும் மறுவன்புலவு பகுதிகளில் வைத்து 24 இளைஞர்கள் சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். இதன் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட குறித்த 24 இளைஞர்களில் 9 பேரின் உறவினர்களால் தொடரப்பட்ட வழக்கு 2003ம் ஆண்டு வரை யாழ். நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்தது. எனினும் பாதுகாப்பு காரணங்கள் எனக்கூறி 2003ம் ஆண்டு அநுராதபுரம் நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றப்பட்ட நிலையில் இதுவரையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமை தொடர்பில் காணாமலாக்கப்பட்ட மூன்று இளைஞர்களின் உறவினர்கள் இணைந்து யாழ். மேல் நீதிமன்றத்தில் கடந்த வாரம் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தனர்.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, புதிதாக தாக்கல் செய்யப்படட மூன்று ஆட்கொணர்வு மனு மீதான வழக்கினை எதிர்வரும் 14ம் திகதிக்கு ஒத்திவைக்குமாறு உத்தரவிட்டார். அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்ட வழக்கின் விபரத்தினை அறிந்து நீதிமன்றிற்கு தெரியப்படுத்துமாறு வழக்கு தொடுனர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளுக்கு யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

# புதிய மொந்தையில்...

மாநில அரசின் ஒப்புதலும் நில உரிமையாளர்களின் ஒப்புதலும் தேவை. அது மட்டுமல்ல, உரிய இழப்பீடும் சட்டப்படி வழங்கப்பட வேண்டும். அதை எதிர்த்து நீதிமன்றத்தில் முறையீடு செய்ய முடியும். ஆனால், எத்தகைய எதிர்ப்பையும் மதிக்காமல் இராணுவத்தின் தேவைக்காக தமிழர்களின் நிலங்களைப் பறிக்கும் அதிகாரம் இலங்கை அரசுக்கே வழங்கப்படுகிறது.

ஏற்கெனவே ஈழத் தமிழர்களுக்குச் சொந்தமான பெரும் பகுதி நிலம் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டுள்ளது. இச்செயலை நியாயப்படுத்தும் வகையில் புதிய அரசியல் யாப்பு நகல் வகுக்கப்பட்டுள்ளது. கொல்லைப்புற வழியாகத் தமிழர்களின் நிலங்களைப் பறிக்கும் திட்டமாகவே இது அமைந்துள்ளது.

இலங்கையின் இனப் பிரச்னைக்கு முக்கியக் காரணம் நிலப்பறிப்பே ஆகும். தமிழர் நிலங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் ஒருபுறமும், சிங்கள இராணுவத்தின் தமிழர் நிலப்பறிப்பு மற்றொரு புறமும் சொந்த மண்ணிலேயே தமிழர்களை அந்நியப்படுத்தும் செயலாகும். இதை எதிர்த்துத்தான் தமிழர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

காஷ்மீர் மாநிலத்தில் இந்தியாவின் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் யாரும் நிலமோ, அசையாதச் சொத்துகளோ வாங்குவதை அரசியல் சட்ட ரீதியாக இந்திய அரசு தடை செய்து, அம்மக்களின் சொத்துரிமைகளைப் பாதுகாத்துள்ளது. அதே உரிமையை ஈழத் தமிழர்கள் கோரினால் சிங்கள அரசு மட்டுமல்ல இந்திய அரசும் பாராமுகமாக உள்ளது.

மொத்தத்தில், இலங்கையின் புதிய அரசியல் யாப்பின் நகல் ஈழத்தமிழர்களின் உரிமைகளை அடியோடு பறிப்பதைச் சட்ட பூர்வமாக ஆக்கும் பல கூறுகளைக் கொண்டதாகவே அமைந்திருக்கிறது.

1972-ஆம் ஆண்டிலும், 1978-ஆம் ஆண்டிலும் கூட்டாட்சி முறைக்கு எதிராக ஒற்றையாட்சி முறையை வலியுறுத்தும் வகையில் வகுக்கப்பட்ட இலங்கை அரசியல் யாப்புகளை தமிழர்கள் ஏற்கவில்லை. அரசியல் யாப்பு அவையிலும் பங்கேற்கவில்லை. இப்போதும் புளித்துப்போன அதே பழைய கள்ளையே புதிய மொந்தையில் ஊற்றித் தருகிறது சிங்கள அரசு.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் வாழும் சிறுபான்மைத் தேசிய இனங்கள் பொது வாக்கெடுப்பின் மூலம் தங்களது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை வலியுறுத்துவதை ஏற்றுக் கொள்கின்றன. எனவே அந்நாடுகளும் ஐ.நா. பேரவையும் இலங்கை இனப் பிரச்சனையில் தலையிட்டு ஈழத்தமிழர்களின் உரிமைகளைக் காப்பாற்றவும், நிலை நிறுத்தவும் முன்வரவேண்டும்.

நன்றி - தினமணி

# துரோகத்தினால் கைமாறு....

யுத்தகாலத்தில் தமிழர்கள் சிங்கள இனத்தவர்களினால் பாதிக்கப்பட்டனர். தற்போது யுத்தம் முடிவுற்ற பின்னர் நல்லிணக்க அரசாங்கத்தில், சகோதர இனம் எனக் கூறப்படும் முஸ்லிம்களினால் குறிப்பாக மட்டக்களப்பு தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்த செலுத்த முஸ்லிம் தலைக்கு இத்தேர்தலை ஒருத் துருப்புச் சீட்டாக பயன்படுத்த எத்தனிக்கும் இத்தரப்பினருக்கு வக்காளத்துவாங்க ஒரு சில தமிழர்கள் கொல்லப்புறத்தினால் உள்நுழைவதற்கு செயற்பட்டுவருகின்றனர்.

எப்படியாவது ஒரு பதவி கிடைத்தால் சரி என்று தலையாட்டி பொம்மைகளாக செயற்படுகின்றனர். காரணம் இவர்கள் எல்லாம் கடந்த ஆட்சிக் காலத்தில் தமிழ் தேசிய பேசியவர்கள், நாட்டை விட்டு ஓடியவர்கள் என்பதனால் இவர்களால் வாய்திறக்க முடியவில்லை. பேரினவாத சக்திகளும், முஸ்லிம் தரப்புக்களும் போடும் எழும்புத் துண்டுக்காக எதனையும் கண்டுகொள்ளாது செயற்படுகின்றனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு சமனாக வளர்ச்சியடைய வேண்டும் என மட்டக்களப்பில் ஐக்கிய தேசிய கட்சி வளர்ச்சியடை பலதரப்பினரையும் பயன்படுத்திவருகின்றனர். சந்திரிக்கா பண்டாரநாயக்க காலத்தில் தமிழீழப் போராட்டத்திற்கு எதிராக சிங்கள பேரினவாத சக்திகளுடன் இணைந்து பல்வேறு சதிவேலைகளை செய்து இறுதியில் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வெளிநாட்டிற்குத் தப்பிச் சென்ற கணேசமூர்த்தி போன்றவர்கள் மீண்டும் சிங்களப் பேரினவாத சக்திகளுடன் இணைந்து எதனைச் சாதிக்கப் போகின்றார். தமிழ் இனத் துரோகியாக இனங்காணப்பட்டவர்கள் மீண்டும் ஒருமுறை வரலாற்றுத் துரோகத்தை செய்வதற்காக களமிறங்கத் தயாராகின்றார்களா?

அவ்வாறு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பசுத் தோல் போர்த்த புலியாக செயற்பட்ட ஜெயானந்தமூர்த்தி போன்றவர்கள். தேசியம், சுயநிர்ணய உரிமை, தாயகக் கோட்பாடு என்றெல்லாம் சொல்லியது வெறும் ஏமாற்றுவித்தை என்பது அம்பலத்திற்கு வந்துள்ளது. தமிழ் இனத்திற்காக போராடுகின்றேன் என உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தமிழர்களை ஏமாற்றியது மட்டுமல்லாது, குறிப்பாக வெளிநாட்டில் தமிழ் இன செயற்பாட்டாளர்களை காட்டிக் கொடுத்ததிலும் பெரும்பங்காற்றியுள்ளாார் என்பது புலனாகிறது.

இவர் வெளிநாட்டில் இருந்த காலங்களில் இரண்டரை ஆண்டு காலம் தமிழின எழுச்சி நடவடிக்கைகள் எதிலும் பங்குபற்றாது மறைந்து வாழ்ந்து கொண்டு அச்செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை எதிரிக்கு இனங்காட்டிக் கொடுத்துள்ளார். ஒட்டுமொத்த தமிழ் இனத்திற்கு துரோகத்தை செய்த விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் நூற்றுக் கணக்கான தமிழர்களை படுகொலை செய்த பிள்ளையானுக்கும் சில முக்கியமான புலனாய்வு வேலைகளை செய்துவந்துள்ளார். அதற்கு வெகுமதியாக அவர் வெளிநாட்டிலிருந்து சிறீலங்கா வந்த போது சிறீலங்காவின் படைப் புலனாய்வாளர்கள் அவரை வரவேற்று அவரின் ஊரான வாழைச்சேனைக்கு பாதுகாப்பாக கொண்டு சேர்த்தனர்.

ஒரு இனத்தின் புனிதமான விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக செயற்பட்டது மாத்திரமின்றி, துரோகத்தனமாக காட்டிக் கொடுப்புக்களையும் மேற்கொண்டுவிட்டு, தற்போது மாற்றினத்திடம் மண்டியிட்டு தமிழர்களை அடமானம் வைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர். தமிழ் இனம் அடிமைப்பாட இனம் மட்டுமல்ல, என்றும் தலைநிமிர்த்து வீறுநடை போடும் இனம். எனவே இவ்வாறானவர்களுக்குத் தக்க பாடத்தைச் சரியான நேரத்தில் மக்கள்தான் புகட்டவேண்டும்.

ஒரு இனத்தின் புனிதமான விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக செயற்பட்டது மாத்திரமின்றி, துரோகத்தனமாக காட்டிக் கொடுப்புக்களையும் மேற்கொண்டுவிட்டு, தற்போது மாற்றினத்திடம் மண்டியிட்டு தமிழர்களை அடமானம் வைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர். தமிழ் இனம் அடிமைப்பாட இனம் மட்டுமல்ல, என்றும் தலைநிமிர்த்து வீறுநடை போடும் இனம்.

# ASCES

26 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

BAC, BREVET பரீட்சைகளில் 100 வீத சித்தி எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்

விபரங்கள் அறிய எமது இணையத்தளம் www.asces.fr Tél : 07 82 88 59 16 E-mail : asces@free.fr

Le Blanc Mesnil இல் எமது புதிய 5வது கிளை
10, Avenue du Capitaine Fonck, 93150 Le Blanc Mesnil (Le Bourget விமான நிலையத்திற்கு அருகில்)

Grande Section, CP, CE,CM, Collège, Lycée வகுப்புகள்
Maths, Français, Physique, Chimie, SVT, Histoire

**பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்**

14-11--2017 செவ்வாய் வியாழன் மாலை 4 மணி 6 மணி
19-11-2017 ஞாயிறு காலை 10 மணி (1 நாள்வகுப்பு)
06-11-2017 திங்கள் செவ்வாய் காலை 9 மணி
05-11-2017 ஞாயிறு காலை 10 மணி (Nationality வகுப்பு)
13-11-2017 திங்கள் புதன் மாலை 5.30 மணி
புதன் பி.ப 3-7 மணி ( Le Blanc Mesnil )
16-11-2017 வியாழன் காலை 9..30 - 12.30 மணி

திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன
BAC , BREVET பரீட்சைகளில் 100வீத சித்தி
Cambridge University ஆல் நடாத்தப்படும்
Starters, Movers, Flyers, Ket, Pet பரீட்சைக்கான வகுப்புகள்

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

**Bridal makeup & cake icing**
மணப்பெண் அலங்காரம்,
கேக் அலங்காரம் சனி காலை 9.30 மணி ஆரம்பம்
பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

LA COURNEUVE இல்
35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve

BOBIGNY
38, rue Gaston Crépin 93000 Bobigny

PARIS
3, place de Joinville 75019 Paris M° Crimée

Epinay sur seine 42, rue Félix Merlin 93800 Epinay sur Seine

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்



பாரிஸ் லா சப்பலில்
**AMBAAL STORE**
பல் பொருள் அங்காடி



Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.st.Denis 75010 Paris



**VICHNESH SHOP**
அனைத்து வகையான மளிகைப் பொருட்கள் மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலை பேசி அட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்



8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60



ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சிகையலங்கார நிலையம்.



COIFFURE **VITHUSA**
TÉL: 06 52 44 89 27
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS



பிரெஞ்சு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!

# திரு.சகாதேவன்

SAGADEVAN PIERRE

எமது மொழிபெயர்ப்புக்கள் அனைத்து அரசு நிறுவனங்களிலும் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும். எம்மிடம் நேரடியாக வருபவர்களுக்கு சலுகையளிக்கப்படும்.

தொடர்பு கொள்ள
சகாதேவன் மொழிபெயர்ப்பு நிலையம்
(Leader Price கடைக்கு அருகாமையில்)
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr



**S.P.Raju Jewellery**
பழைய நகைகளுக்கு புதிய நகைகள் வழங்குகிறோம்!!!!

199 rue du Fbg St Denis, 75010 Paris
Tél: 01 58 20 17 33

13 rue cail, 75010 Paris
Tél: 01 46 07 43 42





**சுவர்ண மஹால்**
**SWARNA MAHAL**

பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!
ஓடர் நகைகள் எதுவாயினும் ஒரு கிழமைத் தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!
www.swarnamahal-france.com



122 Av Paul Vaillant Couturier 93120 La Courneuve
Tél - 01 48 36 40 75 Port - 06 50 17 51 91 / 06 21 23 87 25
Email: swarnamahal93120@gmail.com



# Mohan Jewellery Mart



பழைய நகைகளைக் கொடுத்து
புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்

VISA Aurore

**3/4 Fois sans Frais**
(Piéce d'identité + Rib + C.B)

201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82
Mo: La Chapelle / Gare du Nord

## கபறினா இறைச்சிக்கடை

தினமும் உடன் இறைச்சி
வகைகளையும்,
விசேடமாக
ஆட்டிறைச்சிப் பங்கையும்
பெற்றுக்கொள்ள...



BOUCHERIE GABARINA

62, Rue Louis Blanc
75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76

207, rue fbg st Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30

## Aubervilliers Quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை

# Anna Marché

அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...
மொத்தமாக
கொள்வனவு
செய்வோருக்கு
விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்

V.I.P Sarl 4 rue Emest Prévost,
93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65

## பாரீஸ் அறிவாலயம்

# Paris Arivalayam

7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34

இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள்,
மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை
அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சுயமுன்னேற்ற நூல்கள்
அனைத்தும் ஒரே இடத்தில் வாங்கிட இன்றே செல்ல வேண்டிய இடம்.

## செல்லில் - உங்கள் அபிமான பேபியின்
புதிய உதயம்



# அபி சலூன்

தொடரந்து நிலையத்தில் இருந்து 2 நிமிட நடை தூரம்

11 avenue Maréchal Foch
77500 Chelles

07 82 31 73 94
07 51 28 81 34

பொண்டியில் ஆச்சி இறைச்சிக்கடை
உங்களிற்காக மிகவும் மலிவு விலையில்
தரமான இறைச்சி வகைகள்

AACHI BOUCHERIE

ஆட்டிறைச்சி,
மாட்டிறைச்சி,
உயிர்க்கோழி,
கோழிக்கால்,
பங்கிறைச்சிகள்

120 Rue Roger Salengro
93140 Bondy
Tél : 07 51 08 14 83
07 51 27 72 38

## Ragawa Tailor

அனைத்து விதமான ஆடைகளும்
உங்கள் வசதிக்கேற்ப
வடிவமைத்துக்
கொடுக்கப்படும்.

01 40 35 14 77



190 Rue Fbg St. Denis
75010 Paris
M°: Gare du Nord

# DEVI Textiles & Tailors

சாரி பிளவுஸ்
30
நிமிடங்களில்
தைத்துத்
தரப்படும்

ஆண் பெண்
இருபாலாருக்கும்
அனைத்து விதமான ஆடைகளும்
மற்றும் உங்கள் வசதிக்கு
அமைவான தோல்பைகளும்
உங்கள் எண்ணத்திற்கேற்ப
வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

29, Bld de la Chapelle, 75010 Paris
Tél: 09 51 01 85 59 - Suresh: 07 81 29 86 50
M°: La Chapelle (ligne 2)

# Baby Baloon

பேபி பலூன் டெக்கரேஷன்



Port : 06 13 06 20 29
Tél : 01 39 80 85 23

## ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!

உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்



- எலிகள் - சுண்டெலிகள்
- கரப்பான் பூச்சிகள்
- தொல்லைகொடுக்கும் பூச்சிகள்

அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம்
ஒரே தடவையில்
பயன்பெற்றிட நாடுங்கள்

14 Rue Charles V,
75004 Paris.

DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107

Tél.: 01 60 07 34 29

சுதா / விமல் : 06 34 18 80 04